உ

நவமணித்திரள்

சிவகெங்கை

ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

கே. சுப்பராவ் அவர்கள்

எழுதியது

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] 1925 [விலை அணா 8

உ

நவமணித்திரள்

சிவகெங்கை

ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

கே. சுப்பராவ் அவர்கள்

எழுதியது.

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] 1925 [விலை அணா 8

. 8. 25.

சென்னை

நோபில் அச்சுக்கூடம்

Muthukaruppan. Book. Vellalure. Melur taluq.

முகவுரை

3421

அமிழ்தினு மினிய நம் தமிழ்மொழி சில காலமாக வசன ரூபத்தோடும் அதிகமாகப் பரவிக்கொண்டிருப்பது உலகத்திற்குப் பெருமகிழ்ச்சி விளைவிக்கும் என்பதில் ஐய மில்லை. ஆயின் இந்தியர்களுடைய புராதன ஒழுக்க வழக் கங்களையும், ராஜாங்க முறையையும் மாணவர்கள் தெரிந்து கொள்ளுமாறு கற்பிக்கும் நூல்கள் மிகச் சிலவே. ஆதலால் உயர்தர வகுப்பிற் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் நூல்கள் இன்னும் பதின்மடங்கு வெளிவரவேண்டு மென்பது என் றுணிபு. நிற்க, இந்நூல் நான்கு, ஐந்து, ஆறுவது பாரங் களில் படித்துவரும் மாணவர்கள் வியாசம் எழுதும்முறையைத் தெரிந்து கொள்ளுமாறும், வியாசங்களெல்லாம் கதையின் மூலம் கற்பிக்க வேண்டுமென்ற புதிய முறையைத் தழுவியும், எளியநடையில் எழுதப்பெற்றுளது. உயர்தர வகுப்பு களிற் கற்கும் மாணவர்கள் இப்புத்தகத்தைப் படிப்பரேல் வியாசம் எழுத விரைவில் கற்றுக்கொள்வார்களென்று நம்பு கிறேன்.

ஆக்கியோன்.

விஷய அட்டவணை

		பக்கம்
1.	முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்	1
2.	பொறுமையுடையார் பூமியாளுவர்	3
3.	கடவுளை நம்பினோர் கைவிடப்படார்	6
4.	விருந்தினர்ப்பேணல் வீடளித்துயர்த்தும்	11
5.	ஒழுக்கமுடையார் உயர்ந்தகுலத்தார்	14
6.	புகழுடம்பெய்தினோர் போற்றப்படுவர்	17
7.	கற்புடைப்பெண்டிர் கடவுளினதிகம்	20
8.	பதறுக்காரியம் பண்புடன் முடியும்	22
9.	நன்மகற் பெறுகுடி நலம்பெற்றுய்யும்	24
10.	ஈவோன் என்றும் இழிவிலை யடையான்	29
11.	பெரியோர்ப் பிழைத்தார் பீடழிந்திழிவர்	33
12.	முறையிற் பிறழ்ந்தார் முடியழிந்திழிவர்	36
13.	ஆசான்மொழிகொளான் அவமதிப்படைவான்	39
14.	சூதுபொருவோர் சுகந்தனையிழப்பர்	41
15.	கற்றோர்ப்பகைத்தல் கடவுட்பகைத்தலாம்	44
16.	மானம்படவரின் வாழார் உரவோர்	47
17.	நன்றிமறந்தார் நாடழிந்தொழிவர்	49
18.	முனிவர்சொல் மறுத்தல் முடிவிலாத்துன்பம்	53
19.	கடுமொழி கூறல் கடுந்துயர்விளைக்கும்	55
20.	ஓராச்செய்கை தீராத்துயர்தரும்	58
21.	இழிந்தோர் சொற்கொளல் இறத்தலிற்றுன்பம்	60
22.	ஈவது விலக்குவோர் இழிவினையடைவர்	65
23.	பேராசைப்படல் பெருந்துயர் விளைக்கும்	68
24.	வேந்தரைப் பகைத்தல் சாந்துயர்விளைக்கும்	70
25.	அழுக்காறுடையார் அவமதிப்படைவர்	73
26.	பிறர்பொருள் வெளவல் பிறப்பினை யிழிக்கும்	78
27.	தெளியாதுரைத்தல் தீங்கினை விளைக்கும்	80
28.	கூரறிவுடையார் குற்றம்பொறார்	84
29.	முற்பகல்செய்யிற் பிற்பகல் விளையும்	87
30.	ஒழுக்கம்தவறின் இழுக்கம்தரும்	90
31.	ஆயாத் தீச்செயல் தீராத்துயர்தரும்	92
32.	கிளைஞரைக் கெடுப்போர் கேடுற்றழிவர்	94
33.	அடாது செய்தார் படாதுபடுவர்	98

நவமணித்திரள்

1. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" (குறள்)

முயற்சியுடைமையானது ஒருவனுக்கு மிகுந்த செல்வத்தை யுண்டாக்கும்; அஃதில்லாமையானது ஒருவனை வறுமையின்கண் செலுத்தி விடும்.

முயற்சியால் முடியாத காரியம் ஒன்றுமில்லை யென்பது உலகமறிந்த விஷயம். காரியத்திற்குத் தகுந்தபடி காரணமிருந்தாலல்லது காரியம் முடிவுபெறா தென்பது கற்றோரும் மற்றோரும் தெளியவறிந்த தொன்றாம். உதாரணமாக:— பெருநெருப்பை அவிக்க முயலுமொருவன் தண்ணீர் பெய்தால் நெருப்பவிந்துவிடு மென்றெண்ணி, ஒரு சிறு குடத்தில் தண்ணீர்மொண்டு பெய்துவிட்டு இன்னம் நெருப்பவியவில்லையே யென்று வினவினானாயின் அவனுக்கு இறுக்கும் விடையாது? வேண்டிய அளவு தண்ணீர் பெய்தாலல்லவோ மிகுந்துள்ள நெருப்பவியும். அதுபோல் கருதிய பயனை யடைய விழைவோர் வேண்டிய அளவு முயற்சிசெய்வரேல் தவறாது அடைவரென்பதில் ஐயமின்று. முயற்சியினால் படைத்தோன் படைக்குங் காலத்தே விதித்த கால வெல்லையையும் கடத்தல் இயலுமேல் வேறெதைத்தான் அடைதல் கூடாது.

முன்னொருகாலத்தில் பெரும்புலமை வாய்ந்த அந்தணரொருவரிருந்தார். அவர் பெயர் மிருகண்டுமுனிவர். அவர் எல்லாச் செல்வமும் நிறையப்பெற்றவரா யிருந்தும் மக்கட்பேறு இல்லாமையின், புத்தென்னும் நரகத்தைக் கடத்தல் மக்கட்பேறுடையார்க் கன்றி யில்லையென்று கலைகளாற்றெளிய வறிந்து, அத்தகைய பேற்றையடைவதற்கு அடியவர்க்கெளியனாய், வேண்டுவார் வேண்டுவதை யீவானாய் விளங்கும் அழனிறக் கடவுளை நோக்கி அருந்தவம் புரிந்தார்.

இங்ஙனம் முனிவர் தவம்புரிந்ததைக் கண்டுவந்த பரமசிவன் முன்னின்று வேண்டுவதி யாதென்று வினவினர். முனிவரும் ஒருவாறு பரமசிவன் வரப்பெற்றமைக்குமகிழ்ந்து அவரை நோக்கித் "தென்புலத்தார் கடனையிறுத்தற்குரியனவாகிய மக்கட்பேறின்மையால் வருந்தினேன்" என்று பணிவுடன் கூறினர். அருளுருவாகிய அந்தி வண்ணன் முனிவரை நோக்கி, "அறிவிலிகளாய் நீடூழிகாலம் இவ்வுலக வாழ்வைப்பெற்ற அநேகம் பிள்ளைகள் வேண்டுமா? அல்லது அற்ப ஆயுளுடையவனாய் அளவிலாக் கலைகளைக் கற்றுக் கண்டோரனைவரும் 'இவன் றந்தை யென்னோற்றான் கொல்' என்னுஞ் சொல்லை நிகழ்த்தும் வண்ணம் சீரும் சிறப்பும் அடையத்தகுந்த ஒரு புதல்வன் வேண்டுமா" என்றனர். முனிவர் "பன்றி பல குட்டி பயந்ததினாலேதுபயன், ஒன்றமையாதோ கரிக்கென்றோது" என்று ஆன்றோர் கூறியவண்ணம் நல்லறிவினையுடைய ஒரு மகனைப் பெறுதலே தக்கதென்றுன்னி, "சிறப்புறும் ஒரு மகனே சாலும்" என்றனர். முப்புர மெரித்த முக்கண்ணனும் அங்ஙனமே யாகுக வென்றருளித் திருவுருக்கரந்தனர்.

முனிவர் மனவாட்டம் நீங்கி வீடுசென்று, கடமை தவறாது ஒழுகிவருங் காலத்தில், சின்னாட் சென்றபின் மனைவி கருப்பமுற்று ஓர் அருமைக் குமாரனை யீன்றனள். குமாரனும் தளர்நடை பெயர்ந்தும், மழலையாடியும், இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும், நெய்யுடையடிசில் மெய்பட விதிர்த்தும், பெற்றோர்க் கின்பமூட்டி, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, மார்க்கண்டன் என்னும் பெயரைப் பெற்றனன். உரிய பருவம் வரப்பெற்றபின் தனக்குரிய வாழ்நாளின் அளவைத் தெரிந்துகொண்டு, அன்று முதல் மங்கைபாகனை நோக்கி அருந்தவம் புரிந்தனன். உரிய நாளுலந்தபின்னர் கூற்றுவன் தன் வழக்கம்போல் பாசமிட்டீர்க்க, அப்பாசமானது மார்க்கண்டனையும் அவன் பூசித்துக் கொண்டிருந்த இலிங்கத்தையும் பற்றியீர்த்தது. உடனே இறையோன் வெகுண்டு, இயமன் அறியாதுசெய்த குற்றத்திற்கு மன்னித்து, பத்தியுடையார்க் கித்தகைய நிபந்தனைகளில்லை யென்பதையும் விளங்கக்கூறி, பதினாறு வயதென்றிருந்ததை என்றும் பதினாறாக்கித் திருவுருக்கரந்தனர்.

எடுத்த காரியத்தை முடிக்கும் கருத்துடையராய், இடைவிடாது வேண்டிய அளவு முயற்சி செய்வரேல் குறித்த காரியத்தின் பலனைத் தவறாது பெறுவர் என்பது திண்ணம்.

---

2. பொறுமையுடையார் பூமியாளுவர்

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்" (குறள்)

தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தவர்களுக்கு அந்நாளொன்றினும் தாம் கருதியது முடித்துவிட்டோம் என்று தருக்கியிருக்கும்

பொய்யின்பமே; அங்ஙனம் தீங்குசெய்தவனைத் தண்டியாது பொறுத்தவர்களுக்கு இவ்வுலகமழியுமளவும் புகழுண்டாம்.

கல்வியறிவுடைய மக்கள், அறியார் அறிந்தோ அறியாமலோ ஏதேனும் தீங்கு செய்வாராயின் தாமும் அதனை அவர்கட்குச் செய்து அக்கணம் வரும் சிறிய இன்பத்தையனுபவியாது, பொறையால், அவர் பின் என் செய்தேமென்று தாமே இரங்கும்வகை வெல்வர்.

“ கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு ”

என்றபடி இழிந்தோர் சொல்லியனவற்றையும், செய்தனவற்றையும் பொருட் படுத்தாதிருத்தலே அறிவான மைந்தர்க்கு அழகாகும்.

சந்திரகுலத்துதித்த சந்தனு மஹாராஜனுக்கு முதல் மனைவியினிடத்தில் பீஷ்மரும், இரண்டாம் மனைவியினிடத்தில் சித்திராங்கன், விசித்திரவீரியன் என்ற இருகுமாரர்களும், பிறந்தார்கள். பீஷ்மர் பிரமசரிய விரதத்தை மேற்கொண்டார். சந்தனுமஹாராஜனும் வானவர்க்கு விருந்தாயினன். சின்னாட் சென்றபின், சித்திராங்கதனும் அப்பெயரையுடைய கந்தருவனால் கொல்லப்பட்டான். விசித்திர வீரியனும் அம்பிகை, அம்பாலிகை என்ற இரண்டு அரச குமாரத்திகளை மணஞ்செய்து கொண்டனன்.

இங்ஙனமிருக்க விசித்திரவீரியன் நெடுநாள்வரையும் மக்கட்பேறின்றியிருந்து மாண்டனன். பின், வியாசமுனிவரின் திருவருளால் அம்பிகையினிடத்தில் திருதராஷ்டிரனும், அம்

மாலிகையினிடத்தில் பாண்டுவும் பிறந்தனர். உரிய பருவம் வரப்பெற்றபின் இவர்களிருவர்க்கும் திருமணம் முடிக்கப் பெற்றது. திருதராஷ்டிரனுக்கு நூறு குமாரர்களும், பாண்டுவுக்கு ஐந்து குமாரர்களும் பிறந்தார்கள். இவர்களனைவரும் துரோணாசாரியரால் கல்வி பயிற்றப்பெற்றனர்.

இங்ஙனமிருக்கும் நாளில் பாண்டு புத்திரர்களான ஐவரும் கல்வியறிவு ஒழுக்கங்கள் நிறையப்பெற்றவர்களாய், சர்வஜன சம்மதர்களாய், விளங்கக்கண்ட துரியோதனன் பொறாது அவர்களைப் பலவாறு கொல்ல முயன்றான். அரக்குமாளிகையில் தங்கும்படிசெய்து நெருப்பிடவும் செய்தான். அவர்கள் இத்தகைய துன்பங்கட்கெல்லாம் பிழைத்து, வேத்திரகீயத்திற்குச் சென்று, திரௌபதியை மணந்து வந்து பல அரசர்களையும் வென்று, கப்பங்கொணர்ந்து, இராஜசூயயாகஞ் செய்தனர்.

துரியோதனனுக்கு முன்னிலும், பதின் மடங்கு பொறாமை அதிகரித்தது.

“ தன்புய வலியும் நான்கு தம்பியவர் வலியு மாயன்
வன்புய வலியும் கொண்டே மண்ணெல்லாங் கவர வெண்ணி
இன்புயச் சிகரி மன்னர் யாரையும் தன்கீ ழாக்கி
மின்புய லனையான் மேன்மை விளக்கவே வேள்வி செய்தான். ”

இன்னும் சின்னாட்செல்லின் நம்மனோர் வாழ்வையும் கவரும் என்று கூற மற்றையோரும் கூடி எண்ணலாயினர். பலவாறு ஆய்ந்து கடைசியாக, சகுனி சொல்லின்படி சூதுகொண்டு சாதிப்பதே கருமம் என்று துணிந்தனர். சூதாடுவதற்காக அழைப்பது தக்கதன்று; ஆதலால் ஒரு புதுமண்டபஞ் சமைத்து அதைக் காணும்படி அழைத்துவந்து, பின் சூதாடச்

செய்து வெல்வோமென்று தீர்மானித்து, அங்ஙனமே அழைத்து வந்தனர்.

தருமர் முதலாயினோரும் மண்டபங் கண்டுவந்து இருந்தழி சகுனியும் போதுபோகுமாறு சூது பொருவோம் வம்மின் என்ன தருமரும் உடன்படநேர்ந்தது. உருட்டிய கவறுகளெல்லாம் சகுனிக்கு அநுகூலமாகவே முடிந்தன. ஆதலால் தருமர் நாடு, நகரம், முதலிய எல்லாவற்றையும் தோற்றனர். துரியோதனன், திரௌபதியையும் அவர் தோற்றதாக வெண்ணி, துர்ச்சாதனனால்அம்மாதை அழைத்துவரும்படிசெய்து வேந்தர்களெல்லாம் குழுமியிருந்த அவையின் கண் அவமானப்படும்படியும் செய்தனன். அப்பொழுது வீமன் முதலியோரும் கோபக்குறியோடு நூற்றுவரையும் தொலைத்துவிட முயலுகின்றதைத் தெரிந்து வேண்டாமெனக் கையசைத்தனர் தருமர்.

பின் பாண்டவர்கள் வென்றோர் கூறியபடி காடுசென்று, அவர்கள் செய்த தீங்கெல்லாவற்றையும் பொறுத்துத் திரிந்து வந்து நாடுபெற்று மகிழ்ந்திருந்தனர். நூற்றுவரும் தங்கள் பொறாமையால் நாடிழந்து மாண்டனர்.

பொறுமையோடு செய்யும் காரியங்களெல்லாம் போற்றத்தக்கதாய் முடியும். பொறுமையுடையார்க்குக் கடவுளும் துணை செய்வார்.

---

3. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" (குறள்)

அடியவரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சென்றவனை கடவுளுடைய அடிகளை விடாது நினைத்தவர் எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் இனிது வாழ்வர்.

ஆஸ்திகர்களாகிய நாம் கடவுளொருவர் உண்டென்பதையும், அவரின்றி யோரணுவும் அசையாதென்பதையும், எங்குமுள்ளவராய் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சர்வ சாக்ஷியாய் நின்று உணர்ந்து கொண்டிருக்கிறாரென்பதையும், நன்கு தெரிந்துகொண்டிருக்கின்றோம். ஆதலால் பாப புண்ணியமும், சொர்க்க நரகமும் இல்லை யென்று கூறும் மயக்க நூல்களை மெய்ந்நூல்களெனத் துணிந்து கற்கப் புகாமல், கடவுளும், புண்ணிய பாபமும், சொர்க்க நரகமும் உண்டெனக் கூறும் மெய்ந்நூல்களைக் கற்று அதன்வழி நடந்தார் பரமகருணாநிதியாகிய கடவுளால் கைவிடப்படார் என்பது உறுதி யென்பதை நம்பவேண்டும். கட+உள்= கடவுள். ஆகுபெயர். எல்லாவற்றையும் கடந்தவர் என்பது பொருள்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே, புகழனார் என்பவர்க்கும், மாதினியார் என்பவர்க்கும் திருக்குமாரராய்ச் சிவமதம் சீர்பெற்றோங்கத் திருவவதாரஞ் செய்தார் திருநாவுக்கரசர் என்பவர். இவருக்குத் திலகவதியார் என்னும் பெயருடைய சகோதரியார் ஒருவருண்டு. இவரை அரசனிடத்தில் சேனாதிபதியாக இருந்த கலிப்பகையாருக்குத் திருமணஞ் செய்து கொடுப்பதாக நிச்சயித்திருந்தனர். மணம் முடிப்பதற்குள் கலிப்பகையார் அரச ஆணையால் போர்மேற் செல்ல நேர்ந்தது. போர்மேற் சென்ற கலிப்பகையார் திரும்பிவரச் சிறிதுகாலம் தாழ்த்தமையின், பெற்றோர்கள் சிவபத மடைந்தனர். திலகவதியார் பெற்றோரை யிழந்தமைக்கு வருந்திக்கொண்டிருக்கும் பொழுது, கலிப்பகையாரும் போரில் மடிந்தாரென்று கேட்டு, தாமும் தீப்பாயத் துணிந்தனர். பின் தம்பியாருடைய

வேண்டுகோளுக் கிணங்கி இவ்வுலகத்திருக்க உடன்பட்ட வராய்த் தவஞ் செய்துகொண்டிருந்தார்.

திருநாவுக்கரசர் தருமசிந்தனை யுடையவராய் நிலையா மையை நினைந்து, தருமஞ்செய்ய விரும்பி அறச்சாலை முதலியவற்றை யேற்படுத்தினர். இல்வாழ்க்கையிலே புகா மல் எல்லாவற்றையும் துறந்தார். நல்லசமயம் இது என்று அறியுமறிவு தலைப்படாமையால் சமணர்களுடைய பள்ளியை யடைந்து, அவர்களுடைய போதனை சக்தியினலே இதுவே உண்மையான மதமென்று துணிந்து, அம்மதத்தையே மேற் கொண்டார். சின்னாட்களுக்கெல்லாம் அம்மதநூலை நன்கு கற்றுத்தேர்ந்து எல்லாரினும் மேம்பட்டு விளங்குதலைக் கண்ட சமணர்கள் தருமசேனர் என்று பெயரிட்டுத் தங்கள் மதாசாரியர்களாகக் கொண்டு வழிபட்டு வந்தனர்.

திலகவதியார் திருவதிகை வீரட்டானத்திருந்து கொண்டு, தமது தம்பியார் சமணமதத்திருத்தலைப்பற்றி வருந் திக் கடவுளிடத்தே விண்ணப்பஞ்செய்து கொண்டனர். பரம சிவன் திலகவதியாரை நோக்கி "வருந்தற்க; சூலை நோயால் ஆட்கொள்வோம்" என்றனர். சின்னாட்சென்றபின், திருநாவுக்க ரசர் சூலைநோயால் மிகவருந்தினர்; சமணர்கள் அந்த நோயைப் பலவாறு தீர்க்க முயன்றும் பயன்படாது போயிற்று. ஒருநா ளிரவு, திருநாவுக்கரசர் தூங்கிக்கொண் டிருக்கும்பொழுது, பரமசிவனது திருவருளால் உண்மை யுணர்வு வரப்பெற்று, திலகவதியாருடைய பாதங்களை வணங்கி என்னேயை நீக் கிக் கொள்வேனென்று கொண்டு, சமணமத வேடங்களைக் களைந்தெறிந்து விட்டு, சிவசின்னந்தரித்து அன்றிரவே சென்று திலகவதியாரை வணங்கிச் சிவனருள்பெற்று,

நோய் நீங்கி, ஒவ்வொரு தலங்களுக்கும் சென்று தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடிக் கொண்டிருந்தார்.

இவர் இங்ஙனம் சென்றுவிட, சமணர்களெல்லாம் ஒன்று கூடி எண்ணுவாராயினர் :—இவர் நம்மால் நீக்கக்கூடாத நோயை நீக்கிக் கொள்வதற்காகச் சைவமதத்தில் பிரவேசித்தமையை நமதரசன் கேள்வியுற்றனாயின், அவனும் சைவ மதத்தின் மேன்மையைத் தெரிந்துகொண்டு அதை யநுசரிப்பதோடு, நம்மையும் நம்மதத்தையும் மதியான். ஆதலால் நமதரசன் இவ்வுண்மையைத் தெரிந்து கொள்வதற்குமுன், தருமசேனர் வஞ்சமாக ஓடி விட்டாரெனக் கூறி விடுவோமென யோசனை செய்துகொண்டு, அரசனிடஞ் சென்று கூறினர். அரசனும் சமணர் கூறியதை மெய்யென்று நம்பி வெகுண்டு யாதுசெய்ய வேண்டுமென்றனன். சமணர்கள் "அரசே! இவனைக் கொல்லும்பொருட்டு நீற்றறையிலே இடுதலே தகுதி"யென்றனர். அரசனும் அங்ஙனமே ஆணையிட ஏவலர் நீற்றறையிலிட்டனர். உடனே திருநாவுக்கரசர் சிறிதும் மனஞ்சலியாராய் அடியார்க்கெளியனான பரமசிவனது பாதாரவிந்தங்களையே துணையெனப் பற்றி,

" மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே "

என்னும் திருநேரிசையைப் பாடியருள யாதொரு தீங்கும் நேராதிருந்தது.

சமணர்கள் சின்னாட்கழித்து, திருநாவுக்கரசர் மாண்டிருப்பாரென்று எண்ணி நீற்றறையைத் திறந்துபார்க்க, யாதொரு தீங்கும் நேராதவராயிருந்தனர். உடனே அரச

னிடஞ்சென்று "அரசே! தருமசேனர் நம்மதத்திருந்து கற்றுக்கொண்ட விஞ்சையின் மஹிமையால் சாவாதிருக்கின்றனர். இவரை இப்படியே விட்டுவிடக்கூடாது; எங்ஙனமும் கொல்விக்கவேண்டும்" என்று கூறி, ஆணைபெற்று, பட்டத்து யானையைக் கொணர்ந்து மிதித்துச்செல்லும்படி செய்தனர். அவ் யானை அச்சமணர்களுட் பலபேரையும் கொன்று சென்றதேயன்றிக் கடவுளை நம்பின திருநாவுக்கரசரை வணங்கிச் சென்றது. எஞ்சிய சிலர் இவரைவிட்டுவிடக் கூடாதென் றெண்ணி, ஒரு பெருங்கல்லை இவருடலோடு சேர்த்துக்கட்டி, சமுத்திரத்திலே தள்ளினர். திருநாவுக்கரசர்க்கு யாதொரு தீங்கும் நேராவண்ணம் அக்கல்லே தெப்பமாக மிதந்து சென்று திருப்பாதிரிப்புலியூரிலே சேர்த்தது.

கரையையடைந்த திருநாவுக்கரசர் மகிழ்ந்து,அங்கு வந்திருந்த அடியவர் கூட்டத்தால் அழைக்கப்பெற்றுச் சிலநாளிருந்து, பின் ஒவ்வொரு சிவஸ்தலங்களையும் சென்று வணங்கவேண்டுமென் றெண்ணி யாத்திரை புரிந்து, எம்பெருமானுடைய கீர்த்தியையும், சௌலப்பிய குணத்தையும் நினைந்து நினைந்து உருகிப் பல பதிகங்கள் பாடியருளி, இனி இவ்வுலகத்திருத்தல் கூடாதென்ற எண்ணமுதிக்கப் பரமசிவனது திருவடி நீழலையடைந்தார்.

கடவுளை நம்பினோர்க்கு வருந் துன்பங்களெல்லாம் துன்பங்களாகா. அவர் எத்தகைய பெரியதுன்பங்கள் நேரினும் அவற்றினின்றும் தப்பி, அவனருளால் அவனருளடைவர் என்பது நம்பிக்கை.

4. விருந்தினர்ப்பேணல் வீடளித்துயர்த்தும்

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள்)

தன்னை நோக்கிவந்த விருந்தினரையெல்லாம் அறுசுவையோ டுண்ணச்செய்து, இனிவரும் விருந்தினரோடு நாமும் உண்ண வேண்டுமென்று விருந்தினரின் வருகையை யெதிர்பார்த்துக் கொண்டிருப்பவன் மறுபிறப்பில் தேவனாய், வானுலகத்தார்க்கு நல்ல விருந்தினனாக ஆவான்.

விருந்தென்பது புதுமை. அஃதீண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார் மேல் நின்றது. இல்வாழ்வார் செய்ய வேண்டிய அறங்கட்கெல்லாம் இதுவே தலைமைபெற்றது. துறந்தார் அடையும் பயனையும் இவ்விருந்தோம்பலாகிய அறத்தைச் செய்து அடையலாகுமெனின் வேறு கூறவேண்டுவதென்னை? "பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பார் விருந்தோம்பி, வேள்வி தலைப்படாதார்" என்ற திருக்குறளும் ஈண்டுக் கவனிக்கத் தகுந்தது. விருந்தினரைப் பேணி உபசரித்தார் ஒருகாலத்தும் நல்குரவான் வருந்திக் கெடுதலில்லை. ஒருகால் அடையினும் முன்செய்த தீவினைப்பயனால் அடைந்தது என்று சான்றோரால் கருதப்படும். விருந்தினரைப் பேணி உண்பித்து அவருண்ட மீதத்தைத் தானும் உண்டிருப்பவனது விளைபுலத்திற்கு வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா மென்பது கீழ்வரும் சரிதையால் நன்குணரலாம்.

பாண்டிய நாட்டிலே இளையான்குடி யென்னு மூரிலே வேளாளர் குலத்திலே, உழுதுண்டு வாழ்தலாகிய பழுதிலாத் தொழிலை மேற்கொண்டு, சிவனடியார்களிடத்தே பேரன்பு கொண்டவராய் மாறனார் என்றொருவரிருந்தார். அவர் தினந்

தோறும் தன்னில்லத்திற்குவரும் சிவனடியார்களை உள்ளன் போடு வரவேற்று, ஆசனத்திருத்தி, ஆகமவிதிப்படி அருச் சித்து, அவரவர் விருப்பின்படி அறுசுவை யுண்டிகளையும் அமுதுசெய்விப்பர்.

இப்படித் தினந்தோறும் செய்து வந்த புண்ணியத்தின் மிகுதியினலே செல்வம் மேன்மேலும் பெருக அளகேசனை யொத்து வாழ்ந்திருந்தார். பரமசிவன், இவர் வறுமையுற்ற காலத்தும் இத்தருமச் செயலை விடாது செய்யவல்லவ ரென் றும், தாம் நல்லோர்க்கு வறுமையைக் கொடுத்தல் பின் இன்பமளித்தற்கே யென்றும், அவ்வின்பம் காரியத்தின் முடி விலேயே பயன்தந்து நிற்குமென்றும், இடையே வறுமை யுற்றேமென்று மயங்குதல் கூடாதென்றும், உலகத்தார்க் குத் தெரிவிக்கும் பொருட்டு, இவருடைய செல்வமானது கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரனைப் போலக் குறைந்து போம் படி திருவுளங் கொண்டார். நாயனர் செல்வமெல்லாம் குறைந்துபோன பின்னும், ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல் லாப் பொருளையும் விற்றும், தன்னை விற்றாலும் ஈடாகாதபடி யான அவ்வளவு கடன்களைவாங்கியும், கடமை தவருது செய்துவந்தார்.

ஒருநாள் பகலும் இரவும் விடாது மழைபெய்து கொண் டிருந்தது. அன்று மாறனருக்கு உணவு சிறிதும் அகப்பட வில்லை. இரவில் நெடுநேரம்வரை யெதிர்பார்த்திருந்தும் ஒருவருடைய உதவியுமில்லாமையால், பட்டினியிருந்து பசி காதை யடைக்க வீட்டுக்கதவைப் பூட்டச்சென்றார். அப்பொ ழுதுபரமசிவன் ஒரு சிவனடியாருருவோடுவந்து கதவைத்தட் டியழைத்தார். மாறனர் கதவைத்திறந்து, வந்தவரை யுள்ளே யழைத்துச்சென்று, மழையால் நனைந்த அவர் மேனியை

நன்றாய்த் துடைத்து, அவர் பசியாயிருப்பதை யுணர்ந்து, மனைவியை நோக்கி, "இவர் மிகவும் பசித்திருக்கிறார்; நமக்கு உணவு இல்லையாயினும் இவர்க்கு உணவளிக்க வேண்டுமே" யென்றார். மனைவியார் கணவனை நோக்கி "மணாளரே! வீட்டிலோ ஒரு பதார்த்தமுமில்லை; நேரமோ அதிகமாய் விட்டது; அயலவரும் இனியுதவ மாட்டார்கள்; ஆனதால் இன்று பகலில் நாம் வயலில் விதைத்த விதைகளெல்லாம் மழையினால் மிதந்திருக்கும்; அதை அரித்துக் கொணர்ந்து பக்குவஞ் செய்தலே தகுதி" யென்றனர். மாறனார் தன் மனைவியார் ஆராய்ந்து கூறினமைக்கு மகிழ்ந்து, கழுகுமுறங்கும் நடு இரவிலே வழி தேடிக்கொண்டு விரைந்தோடி, முளைகளை யரித்துக்கொண்டு வந்து மனைவியினிடம் தந்தார்.

மனைவியாரும் அதை வாங்கிச் சேறுபோம்படி கழுவி, விறகின்மையால் வீட்டினோர் பாலுள்ள அலக்கை முறித்துத் தீமூட்டி அதை வறுத்தெடுத்துப் பக்குவப்படுத்தித் தோட்டத்திலுள்ள கீரையையுஞ் சிறிது பறித்துச் சமைத்து "அடியவரை யழைமின்" என்று கணவரிடந் தெரிவித்தார். மாறனாரும் தூங்குவதுபோற் படுத்திருந்த அடியவரிடஞ் சென்று அழைக்கப்புகுமளவில் அவர் ஒரு சோதிவடிவாய்த் தோன்றி மாறனாரை நோக்கி, "நீ உன் மனைவியோடும் நமது பதத்தை யடைந்து பேரின்பவெள்ளத்தை யனுபவிப்பாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். மாறனாரும் மனைவியாரும் வந்தவர் பரமசிவனென்பதை யறியாது போயினமே யென்று வருந்தி யிருந்தனர்.

சின்னாட்செல்ல அறுவடைகாலம் வந்தது. உழவர் மாறனாரிடம் வந்து "தங்கள் நிலங்களெல்லாம் நன்றாய்விளைந்து விட்டன; கதிரறுக்க வேண்டுமே" யென்றனர். மாறனார்,

நாம் வயலில் விதைத்த விதைகளை யெல்லாம் அரித்துக் கொண்டுவந்து விட்டோம். உழவரோ விளைந்திருப்பதாகக் கூறுகின்றார். இதுவும் கடவுளருளே யென்றெண்ணி, வயலில் தனக்கு வரவேண்டிய நெல்லை வாரிக்கொணர்ந்து இல்லில் விட்டு, முன்னிலும் அதிக அன்போடு அடியவரை யுண்பித்துக் கொண்டிருந்து பரமசிவனது திருவடி நீழலையடைந்தனர்.

விருந்தினரைப் பேணுவோர் என்றும் கடவுளால் ஏற்றுக்கொள்ளப் பெற்றவராய் வீடுபெற்று மகிழ்வர்.

---

5. ஒழுக்கமுடையார் உயர்ந்தகுலத்தார்

"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" (குறள்)

எல்லாரும் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடையாம்; அவ்வொழுக்கத்தினின்றும் தவறுதல் இழிந்த பிறப்பினராய் ஆக்கிவிடும்.

ஒழுக்கமுடைமையாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏற்ற ஒழுக்கமுடையரா யிருத்தல். கடவுளால் நமக்குச் சொல்லப்பட்ட நெறியினைக் கடைப்பிடித்துத் தவறாது ஒழுகுபவர் அக்கடவுளால் ஆட்கொள்ளப் பெற்று, அவரது திருவடி நீழலை அடைந்து இன்புறுவர். அங்ஙனமின்றி வேதம் முதலியன வெல்லாம் ஒரு கூட்டத்தாரால் தங்களுக்கு அனுகூலமாகச் செய்யப்பட்டன வென்று கூறிப் பாவத்திற் காளாகும் நாஸ்திகர்களாக ஆகாது, கடவுளும் வேதம் முதலிய சாஸ்திரங்களும் உண்மையென்று நம்பும் ஆஸ்திகர்களாய் நன்னெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதலே சிறந்த வழியாம்.

சோழநாட்டில் ஆதனூரில் புலையர் குலத்திற் பிறந்த நந்தனரென்பவர் ஒருவரிருந்தார். அவர் பரமசிவனது திருவடியையே யன்றி வேறொன்றையும் நினையாதவராய் அவ்வூரிலே தமக்குள்ள நிலத்தை யுழுது பயிர் செய்து ஜீவனம் பண்ணிக்கொண்டு, தாம் செய்யவேண்டிய தொழிலைத் தவருது செய்து வந்தார். தமக்கொழிந்த நேரங்களில் சிவாலயங்களுக்கு வேண்டிய தோற்கருவிகளுக்கும் நரம்புக் கருவிகளுக்கும் வேண்டிய தோலும், வாரும், நரம்பும், கொடுத்துதவிவந்தார். ஒவ்வொரு நாளும் சிவாலயங்களுக்குச் சென்று தரிசிக்க வேண்டுமென்னும் எண்ணமுடையராய்ச் சென்று தம் குலத்தின் இழிவையுன்னி, உள்ளே புகாமல் வெளியே நின்றுகொண்டு வணங்கி வருவார்.

ஒருநாள் திருப்புன்கூரிலே சென்று, கடவுளருளால் நந்திதேவர் விலகிநிற்க, சுவாமியைத் தரிசித்து, ஆண்டு ஒரு பள்ளத்தைக் கண்டு அதைப் பெரிய திருக்குளமாக்கிச் சென்றார். இவ்வாறே பல ஸ்தலங்களுக்குஞ் சென்று வணங்கிக்கொண்டு வருகையில், ஒருநாள், சிதம்பர தரிசனஞ்செய்ய வேண்டுமென்கிற எண்ண முண்டாயது. அதனல் இரவும் பகலும் உறக்கமில்லாதவராய் "நாம் சிதம்பரத்திற்குச் சென்று வணங்குவோம் என்றால், திருக்கோயிலினுள்ளே சென்று வணங்கும் தன்மை நம் சாதிக்கில்லையே" என்று நினைந்து வருந்தி, ஆசை மிகுதியினல் "நாளைச் சென்று தரிசிப்பேன். நாளைச்சென்று தரிசிப்பேன்" என்று ஒவ்வொரு நாளும் சொல்லிக்கொண்டே யிருந்தார். ஆனதால் அன்று முதல் இவருக்குத் திருநாளைப் போவார் என்னும் பெயர் வந்தது.

இங்ஙனம் நாளாக ஆக, சிதம்பர தரிசனஞ் செய்ய வேண்டுமென்ற ஆசை பிடர்பிடித் துந்திற்று. உடனே தம்

முடையவூ ரினின்றும் புறப்பட்டுச் சிதம்பரத்தைபடைந்து, அங்குள்ள அந்தணோத்தமர்கள் தத்தம் வீடுகளில் செய்து கொண்டிருக்கும் ஓமம் முதலிய நித்யக்கடன்களைக் கண்டு, உள்ளேபுக அஞ்சி, தெருவின் அப்புறத்தே நின்று தரிசித்து அவ்வெல்லையை வலஞ்செய்து வணங்கிக்கொண்டு, "நாம் சபா நாயகரைத் தரிசித்தற்கு இவ்விழிந்த பிறப்புத் தடையா யிருக்கிறதே" என்று கவலையுடையவராய்த் தூங்கிவிட் டார்.

சபா நாயகர் அவர் வருத்தத்தை நீக்கி அருள்செய்ய வேண்டுமென்றெண்ணிக் கனவிலே தோன்றி "நீ இவ் விழிந்த பிறப்பு நீங்கும்படி நெருப்பிலே முழுகியெழுந்து பரி சுத்தனாய் அந்தணர்களோடும் சந்நிதானத்தை யடைவாயாக" என்றருளிச்செய்து, தில்லைவாழ் அந்தணர்க்கும் கனவிலே தோன்றித் திருநாளைப்போவார் பொருட்டு நெருப்பை வளர்க் கும்படி ஆணையிட்டு மறைந்தருளினார்.

உடனே தில்லைவாழ் அந்தணர்களெல்லாம் விழித்தெழுந்து பரமசிவனுடைய கருணைத்திறத்தை வியந்து, ஆக்ஞாபித்த படி செய்ய வேண்டுமென்றெண்ணி, திருநாளைப் போவா ரிடஞ் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி, "இப்பொழுது உம் பொருட்டு நெருப்பு வளர்க்கவேண்டும்" என்று கூறினர். அது கேட்ட திருநாளைப்போவார் உய்ந்தேனென்று மகிழ்ந்து, அவர்கள் வளர்த்த நெருப்புக் குழியிலே மூழ்கி, அந்தத் தேகத்தை யொழித்துப் புனிதமாகிய பிராமணவடிவத்தோடு எழுந்தார். தில்லைவா ழந்தணர்களும் மற்றைய சிவ பக்தர் களும் வாழ்த்தினர். திருநாளைப்போவார் கோயிலினுட் சென்று சபா நாயகரை வணங்கச் சபா நாயகரும் தம்முடைய திருப்பாதங்களை அவருக்குக் கொடுத்தருளினார்.

தத்தமக்கேற்ற ஒழுக்கமுடையராதல் எல்லா நன்மையும் பயக்கும்.

---

6. புகழுடம்பெய்தினர் போற்றப்படுவர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" (குறள்)

மனிதராய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க. அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலினும் விலங்காய்ப் பிறத்தலே நன்று.

புகழாவது அறநூல்களிற் சொல்லப்பட்ட விதிகளின் வழுவாதொழுகினர்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகினிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி. மனிதராய்ப் பிறந்தோரெல்லாம் இவ்வுலகத் திறவாது நிற்பது பிறிதொன்றில்லை யென்பதைத் தெளிபவறிந்து புகழுண்டாக வாழவேண்டும். இந்நிலவெல்லைக்கண் என்றும் இறவாது நிற்கும் கீர்த்தியை யொருவன் செய்வானாயின் தேவர்களும் அவனையே போற்றுவர்.

"புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவனேவா வான வூர்தி
எய்துபவென்பதஞ் செய்வினை முடித்து"

என்று சான்றோராலும் கூறப்பட்டிருத்தலால் புகழே இம்மையிலும் மறுமையிலும் நிலைத்திருப்ப தென்பது வெள்ளிடைமலையாம்.

இங்ஙனமின்றி, புகழென்னும் பதத்திற்கே உண்மைப் பொருளுணராத பலர் நடையுடை பாவனைகளைக் கண்டு மயங்கியும், அதிகாரத்தைக் கண்டு வியந்தும் ரோபசுபடியிருத்

தலே புகழுக்கேதுவாகிய குணங்களென மதித்துக் கொள்ளு கின்றனர். இவைகளெல்லாம் வீண் ஆடம்பரம் அல்லது படாடோபம் என்று கூறப்படுமே யல்லாமல் புகழுக்கேது வானவைகளென்று சான்றோரால் மதிக்கப்பட மாட்டா. ஆதலால் புகழென்னும் பதத்தின் உண்மைப் பொருளை யாராய்ந்து அதைத்தேட முபலலே கற்றறிந்த மாந்தர்கடன்.

சூரியவம்சத்தில் சிபியென்னும் பெபரை யுடைய ஒரு மன்னர் மன்னன் மனுநீதிவழுவாது அரசாண்டு வந்தான். கல்வியால் ஞானவுடலையும், உண்டி, உடை முதலியவற்றால் ஊனவுடலையும் வளர்க்கும்படி செய்து வந்தமையின் அவனை மாந்தர்களெல்லாம், ஆசிரியன் என்றும், தாய் என்றும், தந்தை யென்றும் புகழ்ந்து கொண்டாடினர். இங்ஙனம் இவன் நீதிவழுவாது அரசாண்டு வருதலைக்கண்ட தேவர்கள், இவன் மனநிலையை நன்கு பரிசோதித்தறிந்து உலகத்தாருக் கும் வெளியிட வேண்டுமென் றெண்ணினர். ஒருநாள் இந் திரன் வேடனாகவும் அக்னி புறாவாகவும், தங்கள் உரு வத்தை மாற்றிக்கொண்டு, வேடன் தன்னுணவிற்காகப் புறா வைத் துரத்திக்கொண்டு வருவதாகவும் வந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் புறா, மாளிகையின் மேல் உலாவிக்கொண் டிருந்த சிபிச்சக்கிரவர்த்தியின் காலில்வந்து விழுந்தது.

அரசன் இப்புறா நம்மைச் சரணாக அடைந்தது; ஆதலால் இதைப் பாதுகாக்க வேண்டுமென்றெண்ணி, வந்த இளைப்புத்தீரும்படி அதற்குச் சிறிது உணவு கொடுத்துக் கொண்டிருந்தான். அவ்வமயம் வேடனும் ஆண்டடைந்து அரசே! நான் இன்று காலைமுதல் இவ்வளவு நேரம் வரைக் கும் என்னுணவிற்காக இப்புறாவைத் துரத்திக் கொண்டி ருக்கின்றேன்; ஆதலால் இதை விட்டுவிட வேண்டுமென்ற

னன். அரசன் வேடனை நோக்கி, இப்புறு என்னைச் சரணுக அடைந்தது; நான் இதைக் காப்பாற்ற வேண்டும்; ஆத லால் நீ வேறு உணவு தேடிக்கொள்வாயாக என்றனன்.

அதுகேட்ட வேடன் "அரசே! காலை முதல் இந்நேரம் வரையும் தேடித்திரிந்தும் எனக்கு ஒன்றும் அகப்படவில்லை; இது ஒன்றே அகப்பட்டது; அன்றியும் இனி வேறு ஒன் றையும் தேடிக்கொள்ள என்ஞல் இயலாது; பசி காதை யடைக்கிறது" என்றனன். அரசன் வேடனை நோக்கி, அங் ஙனமாயின் இதற்கு மாருக வேறுமாம்சம் பெற்று உன்பசி தணித்துக்கொள் என்ன, வேடனும் அரசே! இப்புறு எவ் வளவு எடை இருக்கிறதோ அவ்வளவு மாம்சம் தங்கள் உடலி னின்றும் அறுத்துத் தரவேண்டுமென்றனன். அரசனும் அதற்கிணங்கி, தன் துடையினின்றும் சிறிது சதையை யரிந்து எடுத்து ஒரு தராசுத் தட்டிலிட்டு, மற்ருெரு தட்டில் புருவையும் இட்டான். தராசு சமநிலைக்கு வரவில்லை. ஆத லால் தன்னுடற் சதை முழுவதையும் சிறிது சிறிதாக அறுத்துவைத்தும் போதாமையால், தானே தட்டிலேறி உட் கார்ந்தனன். தராசும் சமநிலைக்கு வந்தது. கண்ட தேவர்க ளெல்லாம் வியந்து பூமாரி பெய்து போற்றினர்.

இம்மன்னன் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது; அறஞ்செய்து புகழுடையராயினர் உலக மழியும்வரை போற் றப்படுவர்.

---

7. கற்புடைப்பெண்டிர் கடவுளினதிகம்

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" (குறள்)

பிறதெய்வம் தொழாது தன்தெய்வமாகிய கணவனையே தொழுது கொண்டு துயிலெழுபவள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும். தெய்வமும் ஏவின செய்து நிற்குமென்பது கருத்து.

உலகின்கணுள்ள எல்லாவுயிர்களும் தத்தம் பரம்பரை மாறுதுறைதற் கேதுவாகிய மழையைப் பெய்விப்பதற்குக் காரணமாயுள்ளவர் மாதவரும் கற்புடைய மங்கையருமே. கவிச்சக்கரவர்த்தியும்,

"ஆசலம்புரி யைம்பொறி வாளியும்
காசலம்பு (முகத்தவர்) கண்ணெனும்
பூசலம்பும் நெறியின் புறஞ்செலாக்
கோசலம்புனை யாற்றணி கூறுவாம்"

என்று கம்பராமாயணம் ஆற்றுப்படலத்தின் முதற்கண் கூறிப் போந்தனர். கற்புவாய்க்கப் பெற்ற பெண்டிரது மனோநிலையைக் கடவுளும் கடந்து நடவார். அன்னார் அருளினும் வெகுளினும் அவைகள் அப்பொழுதே பயன்றந்து நிற்கும்.

நளனுடைய மகள் நளாயனி என்று ஓர் மங்கை யிருந்தாள். அவள் மிகவும் அழகுபொருந்திய மௌத்கல்யரைக் கண்டு, மோகங்கொண்டு அவரையே மணந்தாள். அவள் கற்பு நிலையைக்கண்ட மௌத்கல்யர் முற்றிலும் பரிசோதித்தறிய வெண்ணி, குஷ்டமென்னும் பெருவியாதியை வரவழைத்துக் கொண்டார். அதைக்கண்ட நளாயனி ஒரு சிறி

தும் வெறுப்பிலாதவளாய் மனங் கோணாமல் முன்னிலும் பதின்மடங்கு அன்போடு பணிவிடை செய்துவந்தாள். நாள் செல்லச் செல்ல ஈயாதார் அகங் குறுகுமாறுபோல அவருடைய கைகால்களெல்லாம் குறைந்து கொண்டே வந்தன. ஒருநாள் உண்ணும்பொழுது உண்டுகொண்டிருந்த இலையில் ஒரு விரல் இற்று விழும்படிசெய்து, சிறிது சோறும் எஞ்சியிருக்கவைத்து எழுந்து சென்றனர்.

கற்பரசியாகிய நளாயனி இத்தகைய வெறுக்கத்தக்க தன்மைகளைக் கண்டும் ஒரு சிறிதும் வெறுப்படையாது, இலையிலிருந்த விரலையும் அப்புறம் எடுத்து வைத்துவிட்டு மீதியிருந்த சோற்றையுண்டனள். இத்தன்மையை யெல்லாம் கண்டும் திருப்தியடையாத மௌத்கல்யர், மேலும்பரிசோதிக்க வெண்ணி, அயலூரிலுள்ள கணிகை வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்று கூறினர். நளாயனி அவனையும் இணங்கும்படிசெய்து, நடந்துசெல்ல இயலாத மௌத்கல்யரைக் கூடையிலிட்டுத் தூக்கிச் சென்றனள்.

சின்னாட் சென்றபின் காசியாத்திரைசெல்ல விரைந்தவாறே, நளாயனி மௌத்கல்யரைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தனள். இருளும் மழையும் அதிகமாயிற்று. ஆண்டொருபால் ஆணி மாண்டவ்யர் என்ற ஒரு முனிவர்முன் செய்த பாபத்திற்கீடாகக் கழுவிலிடப்பட்டு, அதிலிருந்தவாறே தவம்புரிந்து கொண்டிருந்தனர். சென்றுகொண்டிருந்த நளாயனி வழிதெரியாமல் ஆணி மாண்டவ்யருடைய காலில் இடறிச் சென்றுவிட்டாள். அதனால் முனிவருக்கு நோய் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாயிற்று. பொறுத முனிவர் நளாயனியை நோக்கி, நான் வருந்திக்கொண்டிருக்கும்பொழுது முன்னிலும் அதிகமான வருத்தத்தை எனக்கு

உண்டாக்கினமையின் விடிந்து போவதற்குள் உன் மாங்கல்யம் இழக்கப் பெறுவாய் என்று சபித்தனர்.

பெண்ணருங்கலமாகிய நளாயனி நான் தவறிச்செய்தமையின், பரிதி உதையம் செய்யாதிருக்க வென்றனள். உத்தமக் கற்புடையவளாகையினால் மறுநாள் முதல் பரிதி உதையஞ் செய்யானாயினான். இங்ஙனம் இரண்டு நாட்கள் செல்லவே நித்திய கருமங்களெல்லாம் நின்றுபோயின. உயிர்களெல்லாம் பெரிதும் வருந்தின. இதுதெரிந்த தேவர்கள் இனி வாளாவிருத்தல் கூடாதென்று வந்து ஆணிமாண்டவ்யரைச் சாப விடைசெய்யுமாறு செய்து சாபத்தை மாற்றும்படி நளாயனியையும் கேட்டுக்கொண்டனர். பெண்ணரசியும் அங்ஙனமேசெய்ய, தேவர்களெல்லாம் வியந்து இவளே கற்பரசியென்று கூறிப்போயினர். பின்னர் மௌத்கல்யரும் கற்பின் றிறமையைக் கண்டு மகிழ்ந்து, தனது சுந்தர வடிவத்தைப் பெற்று நளாயனியோடு சுகமாக வாழ்ந்திருந்தனர்.

கற்புடை மங்கையர் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவைகள் அவ்வப் பயனைப் பயந்தேவிடும்.

---

8. பதருக்காரியம் பண்புடன் முடியும்

" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் " (குறள்)

ஒருகாரியத்தைச் செய்ய வேண்டுமென்று எண்ணினவர் அவற்றைச்செய்தற்கேற்ற காரணங்களால் வலிமையுடையராகப் பெறின் தாமெய்தவெண்ணிய பொருள்களெல்லாவற்றையும் எண்ணியவாறே யெய்துவர்.

எத்தகைய கல்வியுடையராயினும் ஆற்றலுடையராயினும் தாமடையும்படி எண்ணிய பொருளைச் சீர்பெற முற்றிலும் அடையவேண்டுமேயானால், விரைதலின்றிக் காரணங்களை நன்றாக வைத்துக்கொண்டு அடைய முயலல்வேண்டும். அங்ஙனமின்றேல் இடையே தவறவிட்டு வருந்துவர். காரணங்கள் நிறைந்திருந்தபோதிலும், "பதறாதகாரியம் சிதறாது" என்னும் பழமொழியை யுன்னிப் பதறாது செய்துமுடித்துக் கொள்ளல்வேண்டும். பெரும்பாலும் முடிந்த காரியமும் பதறிச் செய்யில், முடியவேண்டியதான சிறுபாகமும் முடியாமையோடு, முக்கால் கிணறு தாண்டினவர்போல் அக்காரியத்தின் பயனையிழந்து வருத்தத்திற்கு முள்ளாவர்.

மதிக்குலத்துதித்து மாதவர் நோன்பும்மடவார் கற்பும் நிலை நிற்கும்படி மாநிலம்புரந்த மன்னவர்களுக்குள் நகுஷன் என்பான் ஒரு மன்னனிருந்தனன். அவன் அந்தணர்களும் புகழ்ந்து கொண்டாடும்படியாக அநேகம் வேள்விகளைச் செய்தனன். அநேகம் சிறந்த வேள்விகளைப் புரிந்தோர் புரந்தரன் பதம் பெறுவர் என்று நீதி நூல்கள் கூறுதலான் இவனும் புரந்தரன்பதம்பெற உரியனாய்விட்டான். வழக்கப்படி சப்த ரிஷிகளும் இவனை விமானத்தின்மீ திருத்தியழைத்துச் சென்றனர்.

பதம் பெற்றுவிட்டோமென்று மகிழ்ச்சிகொண்ட நகுஷன் புலோமசையை உடனே கண்டுகளிக்க விழைந்து, ரிஷீச்வரர்களை நோக்கி, விரைந்துசெல் என்று பொருள் படும்படியானதும், பாம்பு என்று பொருள் தருவதுமான, 'சர்ப்ப' என்னும் வடமொழிப்பதத்தை விடாது இரண்டு மூன்று முறை கூறினன். கேட்ட சப்த ரிஷிகளுக்குள் ஒருவரான அகத்தியர் வெகுண்டு, "மன்னர்மன்ன !

அழைத்துச் செல்லுவோர் தன்மை யித்தன்மையதென் றுணராது புலோமசையின்மீது கொண்ட காதலின் மயக்கத்தால் "சர்ப்ப, சர்ப்ப" என்று கூறினமையின் நீ சர்ப்பமாக (பாம்பாக)ப் போகக்கடவாய் என்று சபித்தனர். "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயும் காத்தலரிது" ஆதலின் சாபத்தைப்பெற்று நெடுநாள் பாம்பாய்க் கிடந்து துன்புற்றான்.

ஒவ்வொரு காரியத்தையும் பயனடையும் வரையும் அவசரப்படாது இருந்து முடித்துக்கொள்ளல் வேண்டும். பெரும்பாலும் முற்றுப்பெற்று ஒரு சிறிது முடியாமலிருந்த அமையத்தும், பதறிச்செய்யின் அக்காரியத்தை யிழத்தலேயன்றிப் பல துன்பங்களையும் அநுபவிக்க நேரும்.

---

9. நன்மகற் பெறுகுடி நலம்பெற்றுய்யும்

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" (குறள்)

ஒருவன் பெறும் பேறுகளுள், அறிய வேண்டியவற்றை அறிதற்குரிய மக்கட்பேறல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை.

மறுமையில் புத்தென்னும் நரகத்தழுந்தித் துன்புறாதிருத்தற்குக் காரணமாக உள்ளவர் மக்களே. அன்னார்க்குப் புத்திரர் என்னும் பெயர் புத்தென்னும் நரகத்தைப் போக்குதலாலேயே வந்தது. புத்திரர், தக்க இன்ன தகாதன இன்ன என்று அறிந்து நடக்கும் தன்மையரா யிருந்தாராயின் அவராலேயே அவருடைய முன்னோர்களெல்லாம் நலம் பெற்றுய்வர் என்பது சாஸ்திர சம்மதம். புத்திரர் செய்யும் நல்வினைக

ளெல்லாம் பெற்றோர்களையே சேரும். ஆதலால் புத்திரர் களே ஒருவற்குச் சிறந்த செல்வம். "தம் பொருளென்ப தம்மக்கள் அவர் பொருள்,தந்தம் வினையான்வரும்'' என்னும் திருவள்ளுவ நாயனார் வாக்கும் ஈண்டுக்கவனிக்கத் தகுந்தது.

இருவகைப் பற்றையும் போக்கி, ஐம்பொறிகளையும் அடக்கிக் காட்டிலிருந்து தவஞ்செய்யும் முனிவராயினும் நன்மக்கட்பேறெய்தாவிடில், மேற்கூறிய நரகத்தைக் கடந்து செல்ல இயலாதவர்களாவார்கள். இதனாலேயே, அடியவர்க் கெளியனான பரந்தாமனையே சிந்தித்துக்கொண்டு தவத் தையே மேற்கொண்டிருந்த குசேலரும்,

" அருள்மகப் பெறுகிலாருக் கிணைகதி யாத்தியென்று
தெருள்மறை செப்பலானும் சிறந்த தன்குலம் நீடித்துப்
பொருள் முயங்கிடுமோ றெண்ணும் புந்தியன் ஆதலானும்
இருள்மருள் குழலன்னாளோடு "

நெடுங்காலம் வாழ்ந்திருந்து, புதல்வரையும் பெற்று மகிழ்ந்து, பின் பரந்தாமத்தை யடைந்தனரென்று சரித்திர வாயிலாக வறிகின்றோம். மக்கட்பெற்றார் இருமைப் பயனையும் எய்தி யின்புறுவர்.

சூரிய குலத்தில் சகரன் என்னும் ஓர் அரசன் அர சாண்டு வந்தனன். அவனுக்கு விதர்ப்பை யென்றும் சுமதி யென்றும் இரண்டு மனைவியர்களிருந்தார்கள். இவர்களில் விதர்ப்பை யென்பாளுக்கு போசணன் என்று ஒரு புதல்வன் பிறந்தனன். சுமதி யென்பாளுக்கு அறுபதினாயிரம் (60000) மக்கள் பிறந்தார்கள். இவர்கட்கெல்லாம் விதிப்படி மணம் முடித்துச் சிலகாலம் சென்றபின் போசணனுக்கு அஞ்சுமான் என ஒரு மகன் பிறந்தனன்.

தன்மக்கள் கல்வியாலும், செல்வத்தாலும், புத்தி சாதுரியத்தாலும், தேகவலிமையாலும், சிறந்து விளங்குதலைக் கண்ட மன்னன், அநேக அசுவமேத யாகங்கள் செய்யவேண்டுமென்றெண்ணிச் செய்தனன். கடைசி யாகத்தில் குதிரையின்பின் அஞ்சுமானையனுப்பினன். இதுகண்ட வானோர் இந்திரனிடம் முறையிட்டனர். கேட்ட இந்திரன், இதை நிறைவேறும்படி விட்டுவிட்டோமேயானால் நாம் இந்நிலையினின்றும் இழிந்துவிட நேருமே யென்றெண்ணி, அக்குதிரையைக் கபில முனிவரது ஆசிரமத்தின்கண் கட்டும்படி செய்தனன். பின் சென்ற அஞ்சுமான் குதிரையைக் காணாது மறுகிப் பிதாமகரிடம் கூறினன்.

அதுகேட்ட சகரன் மிகவும் வருத்தங்கொண்டு, மதலையர்க்கு அச்செய்தியை யுணர்த்த அவர்கள் எங்கிருந்தாலும் தேடிக் கொணர்வோமென்று கூறிக் கோபத்தோடு எழுந்து சென்று, பலவிடங்களிலும் தேடினர். காணாமையினால் புவியினைப் பாதலந்தோன்றத் தோண்டினர். இங்ஙனம் நெடுந்தூரம் தோண்டிச் சென்று, கடைசியாகக் கபில முனிவரது ஆசிரமத்தில் கண்டு, இவரே இக்குதிரையைப் பிடித்துக்கட்டினவரென் றுன்னிச் சீறிப் பலவாறு வைதனர். ஒன்றையும் அறியாத நிரபராதியான முனிவர் யோகத்தினின்றும் விழித்து நோக்க சகரர்கள் அறுபதினாயிரவரும் சாம்பராய் அவிந்தனர்.

சகரன், தன் மக்கள் முனிவரது கோபத்திற்காளாகி அவிந்து கிடக்கின்றமையையும், குதிரை ஆசிரமத்தின்கண் இருத்தலையும் வேவுகாரரால் கேட்டு, அஞ்சுமானை நோக்கி, நான் இவ்வளவுதூரம் முயற்சித்துச் செய்த வேள்வியை இழந்து விடலாமாவென, அஞ்சுமான் "யான்சென்று பரி

கொணர்வல்" என்றுகூறிக் கபிலரிடம் சென்று வணங்கிநிற்க, அவர் அருள்கூர்ந்து, நின் இவுளியைக் கொடுபோ கென்று நிகழ்ந்தவற்றையும் கூறினர். அஞ்சுமான் பரிபெற்றுமகிழ்ந்து பிதாமகனிடந் தந்து வணங்கி நிற்க, அவன் யாகத்தை முடித்து சுரர்களுக்கு அவியீந்து, அஞ்சுமானுக்கே முடி கவித்து உரிய பதத்தைப் பெற்றனன்.

இங்ஙனம் சிலவருடங்கள் கழிந்த பின்னர், இம்மன்னனது மரபில் ஒரு நன்மகன்றோன்றி, உலகமெலாம் பொதுவறத்திகிரி செலுத்தி, ஆண்டுகொண்டிருக்கும் காலத்தில் ஒரு நாள், தன் மூதாதையர்கள் கபிலரது வெகுளிக் கிலக்காகி நிரயத்தழுந்தி யிருக்கும் தன்மையை வசிட்டர் கூறக் கேட்டு, அவரை வணங்கி "என் மூதாதையர்கள் நிரயத்தினின்றும் நீங்கியுய்யுமாறு அருள் செய்யவேண்டும்" என்று இரக்க, அவர் பகீரதனை நோக்கி வருந்தற்க; பிரமனைக் குறித்துத் தவஞ்செய்க வென்றனர். பகீரதனும் நாண்மலர்க்கிழவனைக் குறித்துப் பதினாயிர வருடம் தவம் செய்தனன். தவத்தைக் கண்டுகந்த பிரமன் யாதுவேண்டுமென்ன, பகீரதன் முன்னிகழ்ந்த வரலாறுகளை யெல்லாம் கூறி, என் மூதாதையர்களை நிரயத்தினின்றும் நீக்கும் வண்ணம் அருள் புரிய வேண்டுமென்றனன். பிரமன், கங்கையானது வந்து இறந்தோரது சாம்பரின்மேற் றோயுமேல் கதிபெறுவர்; அத்தகைய கங்கையின் வேகத்தைத் தாங்குதல் கண்ணுதற் கடவுளுக்கன்றி மற்றையோருக்கு இயலாது; ஆதலின் கங்கை பூமியினிடத்து வரும்படி அவளைக் குறித்துத் தவஞ்செய்யு முன்னம், பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து கங்கையைத் தாங்குமாறு வரம்பெறுக வென்றருளி மறைந்தனன்.

பகீரதன் பிரமன் கூறியவாறு மங்கைபாகனை நோக்கிப் பத்துவருடம் தவஞ்செய்து, கங்கையைத் தாங்கும் வரம்

பெற்றனன். பின் கங்கையைக் குறித்து ஐபாயிரம் வருடம் தவஞ்செய்ய, கங்கை வந்து பகீரதனே! என்வேகத்தை யாரா லும் பொறுத்தல் முடியாது; அரன் விளையாட்டாகக் கூறி யிருப்பான் என்றெண்ணுகிறேன்; ஆதலால் மங்கைபாகனை யுறுதியாகக் கேட்டு வருவாயாக வென்றனள். கேட்ட பகீர தன் அரந்தையுற்றுப் பரமசிவனை நோக்கி மறுபடியும் இரண் டரையாயிரமாண்டு தவஞ்செய்யப் பரமசிவன் வந்து நின் நினைவு என்னெனக் கேட்டு, கங்கையை ஒரு சிறிதும் பிதிர்ந் திடாது தடுப்பனென்று கூற, மறுபடியும் கங்கையைக் குறித்து இரண்டரை யாயிரமாண்டு தவஞ்செய்தனன். கங்கை,

"உந்தியம்புயத் துதித்தவ னுறைதரு முலகும்
இந்திராதி யருலகமும் நடுக்குற விரைத்து"

வர மலைமகள் கொழுநன் ஒரு சிறிதும் சிந்தாது சடையினிற் கரந்தனன். பகீரதன் கங்கையைக் காணாது திகைக்கப் பரம சிவன், அஞ்சல்! என் சடையினி லுள்ளாளென்று கூறிச் சிறிது பூமியின்கண்விட, அவள் வேகமாகச் சென்று சன்னு மகரிஷியின் வேள்வியை யழிக்கத் தொடங்கினள். அவர் வெகுண்டு கங்கை நீர் முழுவதையும் உட்கொண்டனர். அது கண்ட பகீரதன் அவரை வணங்கி முன் நிகழ்ந்தன வற்றைக் கழற, அவரும் கொண்டுபோக எனச் செவி வழிவிட்டார். கங்கை குதித்துச் சென்று சகரர்கள் சாம்பரின்மீது படிய அவர் நற்கதி பெற்றனர்.

ஒரு சிறந்த மகனுளனாயின் அவனாலேயே அவன் முன் னோர்களெல்லாம் நற்கதி பெறுவர்.

---

10. ஈவோன் என்றும் இழிவினை யடையான்

“நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று” (குறள்)

பிறரிடத்துச் சென்று இரத்தலே வீட்டுலகை யெய்துவதற்கு நல்ல நெறியென்று கூறுவாருளராயினும் ஏற்றல் தீது; ஈவோர்க்கு வீட்டுலக மில்லையென்று கூறுவா ருளராயினும் ஈதலே நன்று. (ஈவோர்க்கு வீட்டுலகம் இல்லை யென்றும் ஏற்போர்க்கு உண்டென்றும் உலகம் கூறாதென்பது வெளிப்படை.)

“அரிதரிது மானிடராதல் அரிது” என்று ஔவையார் கூறிய வண்ணம் பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும், “இம்மைக் கின்பமும் மறுமைக் கின்பமும், இம்மையும் மறுமையும் இரண்டு மின்றியோர், செம்மையினிற்பதும்” ஆகிய உறுதிகளை யடையவேண்டியது இன்றியமையாததாகும். இவற்றுள் முன் கூறிய இரண்டுறுதிகளும் எய்தப்படுவன வென்றும், அவைகளை யெய்தாதோர் உடல் பெற்றவராயினும் உண்மையிற் பெற்றவராகார் என்றும் சான்றோர் கூறுவர். “ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது, ஊதியமில்லையுயிர்க்கு” என்ற திருவள்ளுவர் வாக்கும் ஈண்டு ஆராயத்தகுந்தது.

ஈயுங்கால் தக்கோரிவர், தகாதோர் இவர் என்று தெளியவறிந்து தக்கார்க்கே யீதல் வேண்டும். அங்ஙனமின்றி, வரைவின்றி யெல்லார்க்கு மீவேமென உட்கொண்டு அடங்கலர்க் கீவாராயின், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுபவர்போல், மேலும் பாவத்தைத் தேடிக் கொண்டவர்களாவார்களேயன்றி உண்மையில் நற்பயனடையாது பேரிடருழப்பர். இதை,

" அடங்கலர்க் கீந்ததானப் பயத்தினலலறு முந்நீர்த்
தடங்கடல்நடுவுட்டீவு பலவுள அவற்றுட்டோன்றி
உடம்பொடுமுகங் களொவ்வார் ஊழ்கனிமாந்திவாழ்வர் "

என்னும் ஜீவகசிந்தாமணிச் செய்யுளால் நன்கு அறியலாம். ஆதலால், கல்வியறிவு ஒழுக்கங்களையுடைய சான்றோர்க்கீயின் அன்னோரால் புகழப்பட்டு மேனிலைமை யெய்துவர். அங்ஙனம் ஈயுந்தன்மையால் சிறிது செல்வம் குறைவது போற்றோன்றினும், இடையே விட்டுவிடாது ஈவரேல் ஒரு காலத்தும் தாழ்மையடையார்.

திருநின்றை யூரென்னும் ஊரில் காளத்தி யென்று பெயருடைய ஒரு சீமான் இருந்தார். அவர் 'ஈதலறம்' என்ற ஔவையார் வாக்கை யறிந்தவராதலின் வறியார்க்கீந்து இம்மைப் பயனையும் மறுமைப்பயனையு மடையவெண்ணி, தன் செல்வமெல்லாவற்றையு மீந்து வறியராயினர். பின், வந்த வறிஞர்க்கெல்லாம் தன்மனையிலுள்ள இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் எல்லாவற்றையும் ஈந்து, இனிவருவோர்க்குக்கொடுக்க ஒன்றுமில்லையென்று தெரிந்தபின், "இனி நாம் ஈங்கிருப்பின் வருவோர்க்கு இல்லையென்றல்லவோ கூறல் வேண்டும். 'சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம், ஈதலியையாக்கடை' என்று வள்ளுவர் கூறியுள்ளார். ஆதலால் நாம் ஈண்டிருந்து துர்மரணமாய் இறப்பதைக் காட்டிலும், வேறிடத்திற்குச் சென்று திரிதலே நலம்" என்று எண்ணி, இரண்டு மூன்று நாழிகை வழிதூரம் நடந்துசென்று, ஆண்டுள்ள ஒரு சத்திரத்திற் படுத்திருந்தனர்.

இஃதிங்ஙனமிருக்க, மதுரகவிராயரென்னும் ஒரு வித்வான் " ஏற்பதிகழ்ச்சி "யென்னும் நீதிமொழியை நன்கறிந்தவராயினும், வறுமை நோயால் பீடிக்கப்பட்டவராய்க் காளத்

திப் பிரபுவின் கீர்த்தியைக் கேள்வியுற்று, அவரிடஞ்சென்று, வறுமையைத்தீர்த்துக் கொள்ளலாமென்றெண்ணி வந்து இரவாயினமையின் அச்சத்திரத்திலேயே தங்கியிருந்தார். இருவரும் ஒருவரையொருவர் முன் பின்னறியாதவராதலின், இவரொருபுறத் தெற்றியிலும் அவர் ஒரு புறத்தெற்றியிலுமாகப் படுத்துறங்கினர். இருவருக்கும் இரவில் உணவு கிடைக்காமையால் உறக்கம் நன்ருய் வரவில்லை. நள்ளிரவானதும் மதுரகவிராயர் பசிப்பிணி பொருது,

“ நீளத் திரிந்துழன்ருய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பையோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றிங் கிரு ”

என்னும் ஒரு செய்யுளை யியம்பினர். இதைக்கேட்ட காளத்திப் பிரபுவும் வித்வானுடைய கவியினிமையையும், வறுமையின் கொடுமையையும் எண்ணி வருந்தினர். பின் ஒருவாறு தேறி, இப்பாவலர் நாளை நம்மூர் செல்வர்; ஆண்டுள்ளார் ஊரிலில்லையென்றே கூறுவர். சில நாளில் திரும்பிவந்து விடுவார், வந்தபின் கண்டு செல்வோமென்று இவரும் தாமதித்திருப்பர்; பின் நாம் வாராமையைக் கண்டு முன்னினும் மிகுதியான வருத்தத்தையடைவர்; ஆதலால் நாம் இறந்து படுதலே நலம். இறந்துவிட்டாரென்று திரும்பிச் செல்வர் என்று எண்ணி விடியுமுன் ஊர் சென்றனர். இறப்பதற்கு என் செய்யலாமென்றெண்ணி, தன் வீட்டுக் கொல்லையிலிருந்த பாம்புப்புற்றில் கையிட்டனர். இவரது கொடையின் மகிமையால் அப்பாம்பு இவரைத் தீண்டாது, ஒரு நாகரத்னத்தைக் கக்கிற்று. இதுவும் கடவுளருளேயா மென்றெண்ணிப் பிரபுவும் ஒரு புறத் தமர்ந்திருந்தனர். விடிந்தபின் மதுரகவிராயரும் காளத்

திப் பிரபுவைப் பார்க்கவேண்டுமென்றெண்ணி அவரில்லம் வந்தடைந்தார். பிரபுவும் தன்கையில் வைத்திருந்த இரத்தினத்தை அவருக்குக் கொடுத்தார். பெற்ற புலவர் இன்றோடு நம் கலிதீர்ந்ததென்று மகிழ்ந்து, அவ்வூர் அரசனிடம் கொண்டுபோய் விற்றுப் பணம் பெறலாமென்று சென்றனர். உழுத்தனை அரசன் கவிராயரை நோக்கி இவ்விரத்தினம் எங்கிருந்து பெற்றீரென்ன, அவர் காளத்திப் பிரபுவினிடம் பெற்றேனென்று கூறினர்.

கேட்ட மன்னன் பொறாமைகொண்டு, அவனுக்கு இவ்வளவு விலை பெறக்கூடிய இரத்தினம் ஏது; அவன் மிக வறியனாயிற்றே; எங்கிருந்தேனும் திருடிக்கொண்டு வந்திருப்பான்; ஆதலால் அவனை யுடனே யழைத்துவருக வென்று தன் ஏவலரை யனுப்பினன். ஏவலர் பிரபுவினிடம் சென்று அரசனது கட்டளையை யியம்ப, அவரும் அரசனது கொலுமண்டபத்துக்கு வந்து சேர்ந்தார். அரசன் பிரபுவை நோக்கி, உனக்கு இந்த இரத்தினம் ஏதென்றான். பிரபுவும் நிகழ்ந்த வரலாற்றை உள்ளபடி கூறினர். நம்பாத அரசன், ஆயின் அதனிடம் இன்னொரு மணியிருக்க வேண்டும்; அதையும் நீ அப்பாம்பினிடமிருந்து பெற்றால் நீ கூறியது உண்மையென்ன, பிரபுவும் அரசன் முதலியோரெல்லாம் காணப் பாம்புப் புற்றில் கையிட்டனர். அப்பாம்பானது "முன்னமே நாம் கொடுத்த மணியையும் கொடுத்து விட்டான்; இனிக் கொடுக்க இல்லை யென்று நம்மைக் கேட்கிறான். ஆதலால் நாம் நம்முடைய ஜீவரத்தினத்தைக் கொடுத்தாவது உயிரை விடுவோ" மென்றெண்ணி, ஜீவரத்தினத்தைக் கக்கிற்று. கண்ட அரசன் அச்சமும் மகிழ்ச்சியும் கொண்டு, ஈதலின் மேன்மையையும், கடவுளின் அருளையும் நினைந்து நினைந்து

உருகி, அன்று முதல் பிரபுவிற்கு வேண்டிய செல்வமெல்லாம் கொடுக்கும்படி செய்து பாதுகாத்து வந்தனன்.

வறியார்க்கீந்தார் என்றும் மேன்மையையே யடைவார்.

---

11. பெரியோர்ப் பிழைத்தார் பீடழிந்திழிவர்

" வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னும்
தகைமாண்ட தக்கார் செறின் " (குறள்)

சாப அநுக்கிரக சம்பன்னர்களான மாட்சிமைப்பட்ட பெரியார் வெகுள்வராயின், அமைச்சு, நாடு, அரண் முதலிய வாய்க்கப்பெற்ற அரசர்கள் ஈட்டிய பொருளுமென்னுகும். (அவருடைய வெகுளித் தீயால் மாண்டு விடும்.)

பெரியராவார் வடிவாலும் செல்வத்தாலும் வயதாலும் பெரியராயினரல்லர். குணமென்னும் குன்றேறி நின்றவராய் சாபவருள்கள் நிறைந்த முனிவரரே யீண்டுப் பெரியாரெனப் படுவார். அத்தகைய பெரியாருடைய வெகுளிக் கிலக்காயி னர் மணிமுடி மன்னர் போற்றும் மன்னர் மன்னராயினும்; குறுமுனியும் வியக்கும் கல்வி கற்றூராயினும், சீர்குலைந்து இழிவினையடைவர். அங்ஙனம் பெரியார்ப் பிழைத்து நிலைகுலை ந்தார் பலருளர் என்பது புராண இதிகாசங்களாலும், கர்ண பரம்பரைச் சரிதங்களாலும் எல்லாரும் அறிந்தடுதான்றும்.

முன்னொரு காலத்தில் ஒரு விஞ்சையர் கோதையானவள் வைகுந்தத்தை யடைந்து பள்ளிகொண்ட பரமனை நோக்கி,

" தாழ்வா ரிசமடுவில் சாலவலி தான்தளர்ந்தே
வீழ்வாரணம் மூலமெய்ப் பொருளே யென்றநாள்
பேழ்வாய்க் குறுந்தாள் பிணர்இடங்கர் பின்னமுறப்
போழ்வான் திகிரியுடன் புள்அரசில் தோன்றினுய்"

"புண்டரீகத் தோனும் புரமூன் றெரித்தோனும்
எண்தகைசால் வேள்விக் கிறையாய இந்திரனும்
மண்தழல்நீர் வான்கால் வகையாய பூதமைந்தும்
அண்டர் முனிவோர் அனைவரும்நீ யாகிநின்றாய்"

"என்றினைய மீக்கூறிசைக்கும் இசையா ழிசையோடு
ஒன்றிநயம் வெவ்வே றொருவாமை யான்உருகிக்
குன்றினைய நீர்வறந்த கோடாம்பூங் கொத்தலா
வென்றிநய காந்தருவம் மேதகவில்" பாடினாள்.

பாடல் கேட்டு மகிழ்ந்த பிராட்டியார் தானணிந்திருந்த மாலையை அவளுக்குப் பரிசாக அளித்தார். பரிசு பெற்ற விஞ்சையர் கோதையானவள், பிராட்டியாரது மாலையைப் பரிசாக அடைந்தமைக்கு மகிழ்ந்து, அதை வீணையிற் பிணித்து, அயனுலகை நோக்கி வந்துகொண்டிருந்தாள். ஆங்குச் சென்று கொண்டிருந்த துருவாச முனிவர் எதிரே கண்டு "இவள் என்னையாளுடைய நாயகியான பிராட்டியாருக்கு இசை யெடுப்பவள்" என்று எண்ணி அவளுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். விஞ்சையர் கோதையானவள் இவர் நம்மை வணங்கக் காரணமில்லையே யென்று திகைத்து முனிவரை நோக்கி "உலகம் யாவையும் படைத்தளித்துண்டுமி ழொருவனான திருமாலின் மார்பகத்து விளங்கும் பிராட்டியார் சூடியமாலையிது ; நீ பெற்றுக்கொள்க" என்று அளித்துச் சென்றனள்.

முனிவர் மாலையைப்பெற்று, தெய்வநாயகி சென்னியிற் சூடிய மாலையை இன்று நானடையப் புரிந்த தவம் எத்தன்மையது என்று கூத்தாடிக்கொண்டு தேவலோகத்தைச் சார்ந்தார். ஆண்டு உம்பர்கோன் ஐராவதம் என்னும் யானையின்மீதிவர்ந்து, கரும்புங் கைக்கப் பாடும் குரலையுடைய அரம்பை, மேனகை, திலோத்தமை, உருப்பசி, முதலிய

தேவமாதர்கள் வீணை வாசித்துவரவும், இருபுறத்தும் வெண் கவரி வீசிக்கொண் டிருக்கவும், பதினாறு கலைகளும் நிரம்பப் பெற்ற சந்திரனைப் போன்ற வெண்கொற்றக் குடை நிழல் செய்யவும், தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ் சக்கருவி, என்னும் நால்வகைப்பட்ட வாத்தியங்களும் கட லொலிபோல் முழங்கிக்கொண்டிருக்கவும், பவனி வந்து கொண்டிருந்தனன்.

அதுகண்ட முனிவ ருவந்து தான் வைத்திருந்த மாலையை வாசவனுக்குக் கொடுத்தனர். அவன் அதைத் தோட்டியால் வாங்கி யானையின் பிடரின்மீதிட்டனன். அவ் யானை அதைக் கையாலெடுத்துக் காலின்கீழிட்டு நசுக்கியது. அதைப் பார்த்த முனிவர் பொறாது தேவரும் திகைக்கவும், எண்டிசைகளும் இருளடையவும், புருவம் நெற்றியிலேறவும் சினந்து,

“இன்று நின்பெருஞ் செல்விகண் டுவகையி னீந்த
மன்றலந் தொடை யிகழ்ந்தனை நினது மாநிதியும்
ஒன்றலாத பல்வளங்களும் உவரிபுக் கொளிப்ப
குன்றிநீ துய ருறுகென”க்கூறினர்.

கூறலும், செல்வமெல்லாம் ஒளிக்க விண்ணுலகம் வறுமை யடைந்தது. அதுகண்ட தேவர்களும் தையல்பாகனும் சது முகக் கடவுளும் கூடித் திருமறுமார்பனை யடைந்து அவனரு ளாற் பெற்றனர்.

பெரியோர் வெகுளிக் கிலக்காயினோர் எத்தகைய சிறப் புள்ளவராயினும் கெடுவரென்பது திண்ணம்.

12. முறையிற் பிறழ்ந்தார் முடியழிந்திழிவர்

" கூழுங்குடியு மொருங்கிழக்கும் கோல் கோடிச்
சூழாது செய்யு மரசு " (குறள்)

மேல்வரும் பயனை யெண்ணாது முறை தப்பிச் செய்யு மரசன் முன்தேடிய செல்வத்தையும், பின் தேடுதற்கேதுவாகிய குடிகளையும் ஒருங்கிழப்பான்.

நாடு செழித்திருக்க வேண்டுமாயின் மாதவர் நோன்பும், மடவார் கற்பும் பிறழாதிருத்தல் வேண்டும். இவையெல்லாம் தன்னிலை நிற்கவேண்டுமாயின் மன்னவர் செங்கோல் மாண்புடைத்தாதல் வேண்டும். "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்றபடி, மன்னவன் செலுத்தும் நீதியைக் காரணமாகக் கொண்டே குடிகளுடைய ஒழுக்கங்களும் மாறுதலடையும்.

" அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் "

என்றார் திருவள்ளுவ நாயனாரும். ஆகவே குடிகளுடைய நன்மை தீமைகளுக்குக் காரணமானது மன்னவன் செங்கோலேயாம். அத்தகைய மன்னவனே தன்னிலை தவறுவானாயின், தன்னரசை யிழந்து தவிப்பன்.

கிட்கிந்தையில் வாலியென்றும், சுக்ரீவன் என்றும் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் வாலியென்பவன் மூத்தவன். மற்றவன் இளையவன். மூத்தோனை வாலியானவன் பரமசிவனுடைய அருளைப்பெற்றவனும், வரம்பிலாத ஆற்றலுடையனும், மந்தரமும் பாம்பும் தேயுமாறு கடைந்த தோள்களை யுடையனும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, என்னும் நான்கு பூதங்களின் ஆற்ற

னுடையனுயும் விளங்கினான். வேண்டுமாயின் தன்மலையினின்றும் சக்ரவாளகிரிக்குத் தாவுவான். யாரேனும் எதிர்த்து வரின் அவர்கள் வலியிற் பாதிபெறுவன். தினந்தோறும் அஷ்டதிக்குகளுக்கும் சென்று ஆண்டுள்ள மூர்த்திகளைப் பணிந்து வருவன். காற்றும் அவன் முன்செல்ல அஞ்சும். பத்துத்தலை ராவணனும் பெயர்கேட்ட மாத்திரத்தானே நடுங்குவன். மும்மூர்த்திகளாலும் அவனை வெல்லமுடியாது. இவன் பெயர் கேட்ட மாத்திரத்தில் அந்தகனும் அஞ்சிநடுங்கலால் எழுபது வெள்ளம் சேனைகளும் அழிவின்றி வாழ்ந்து கொண்டிருந்தன. பிறத்தலைத் தவிர இறத்தலென்றது அவனுகையில் இல்லை. இவனே சக்கிரவர்த்தியாய் அரசாண்டு வந்தான்.

ஒரு நாள் பழம்பகைகொண்ட மாயாவியென்பான் இவனோடு போருக்குவந்தான். சிலநாட் போர்செய்து, இனி இவனைவெல்ல நம்மாலியலாது; ஆதலால் இப்பிலத்தின்கண் சென்று ஒளித்துக் கொள்வோமென்றெண்ணி ஆண்டிருந்த பிலத்திற் சென்று மறைந்தனன். வாலியும், இவனை விட்டு விடக்கூடாது; பின்னொரு காலத்து முற்பகையை யெண்ணி நலியவரினும் வருவான் என்று எண்ணி பிலத்தின் வாயலில் தம்பியைக் காவலிட்டுப் பின்பற்றிச் சென்றனன். ஒருநொடிப் பொழுதில் வருவேன் என்று கூறிச்சென்றவன் பதினன்கு இருதுகள் காறும் வாராமையால் இரவியின் சிறுவன் மிக வருந்தினன். இதுகண்ட மற்றையோர் பலவாறு தேற்றினர். இளையோன் தேறுது, யானும் பிலத்துட்சென்று என் முன்னவனைத் தொலைத்த மாயாவியைத் தொலைத்து மீள்வேன். இல்லாவிடில் அவனுடன் போர் செய்து மடிவேன் என்று பிலத்துட் செல்ல முயன்றனன். பின், மதிவல்லோர்

கள் தடுத்தலால் பிலத்துட் புகாது நின்று "அடுத்த காவலு மரிசுனாணையால்" மேற்கொண்டனன்.

ஆண்டுள்ள ஏனைய வானர வீரர்கள் "மாயாவி வாலியைக் கொன்றுவிட்டு வந்து நம்மையும் வருத்துவான்" என் றெண்ணி அச்சமுற்று, அப்பிலத்தின் வாயலில் ஒரு பெரிய மலையையிட்டு மறைத்தனர். சிலநாட்கள் சென்றபின் வாலியே மாயாவியைவென்று மீண்டு வந்தனன். வாயில் அடைத் திருத்தலைக் கண்டு, இளையோனை இரவிசிறுவனே இவ் வாறு செய்திருக்க வேண்டுமென்றெண்ணி அடங்காக்கோபங் கொண்டனன். உடனே அம்மலையைத் தன்காலால் எற்றி வீழ்த்தித் தன்னகர் வந்து சேர்ந்தனன்.

கண்ட இளையோன், கண்ணிழந்த ஒருவன் கண்பெற் றது போலவும், பெருமிடியன் ஒருவன் பெரும்புதையல் கண் டெடுத்தது போலவும், அருந்த உணவிலாத ஒருவன் தேவாம் ருதத்தை யடைந்தது போலவும், நீர் வேட்கையால் மிகவருந் திக் கொண்டிருந்த ஒருவன் அருந்தும் நீர்பெற்றது போலவும் மனமகிழ்ந்து பாதங்களில் வீழ்ந்து வணங்கி நிகழ்ந்தவற் றைக் கூறினன். இவ்வரசாட்சியை நீயே யேற்றுக்கொள்க வென்றனன். நம்பாத வாலியானவன் இளையனோடு போர் தொடங்கினன். அவன் பல மலைகளினும் காடுகளினும் சென்று ஒளித்துக்கொள்ளவும், தீவினையே போல விடாது சென்றவிட மெல்லாம் சென்று சண்டை செய்தனன். பின்னை யோன் அவன் வரக்கூடாத மலையிற்சென்று தங்கினன். ஆண் டுச்செல்ல இயலாத வாலி அரசுரிமையைப் பெற்றதோடுகூடச் சிறிதும் அஞ்சாது அவன் மனைவியையும் தன்வசமாக்கிக் கொண்டனன். பின்னர் ஆண்டு சீதாப்பிராட்டியாரைத் தேடிக் கொண்டுசென்ற ராமபிரானையணுகிச் சரணம்புகுந்து நிகழ்ந்த

வற்றை மந்திரியான மாருதி கூற, அடியவர்க் கெளியனான ராம பிரான் அபயம் தந்து, முறைதவறி நடந்த வாலியோடு போர் தொடங்கி வென்று இளையவனான சுக்ரீவனுக்கே முடி சூட்டிச் சென்றனர்.

எத்தகைய வலியுடையாராயினும் நெறிதவறுவரேல் சகல ஐச்வரியங்களையு மிழப்பர்.

---

13. ஆசான்மொழிகொளான் அவமதிப்படைவான்

" பெரியாரைப் பேணா தொழுகின் பெரியராற்
பேரா விடும்பை தரும்" (குறள்)

ஆற்றல்களாற் பெரியாரினாரைப் பேணாது ஒழுகுவாராயின், அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்களுக்குத் தீராத இடும்பையைக் கொடுக்கும்.

கல்வியறிவு ஒழுக்கங்களாற் சிறந்த பெரியோர் ஏதேனும் கூறுவாராயின் அவருரையே வேதமெனக் கொண்டு கேட்டு நடத்தல் வேண்டும். அதினும் நான்முகனையொ ஆற்றல் வாய்க்கப்பெற்ற முனிவரது பெருமையை யறியாது, அவர் கூறியவற்றைப் புறக்கணித்து அவரது வெகுளிக் கிலக்காவரேல் பேரிட ருழப்பரென்பது யாவரும் நன்கறிந்ததே.

வெள்ளமும், பறவையும், விலங்கும், வேசையருள்ளமும், ஒருவழி யோடும்படி யரசாண்ட சூரியகுல மன்னர்களுக்குள் திரிசங்கு என்று ஒரு மன்னனிருந்தான். ஒரு நாள் சாபாநுக்ரக சம்பன்னரும், தன் குலகுருவுமான வசிட்டரை நோக்கி "நான் இவ்வுடலோடு சுவர்க்கம்புக

விழைகின்றேன்; அருள்செய்ய வேண்டு" மென்று வேண்டினன். முனிவர் அரசனை நோக்கி அரசே! இயலாததொன்றை அடைய வேண்டுமென்று முயல்கின்றனை; இவ்வுடலை நீத்த பின்னரே சுவர்க்கம் புகலமையுமென்றனர். கேட்ட அரசன், ஆசையாற் கவரப்பட்ட மனத்தை யுடையனாகலின், முனிவரே! நான் வேறொரு ஆசிரியரை நாடிக் கருதியதை யடைவேன் என்று கூறினன். முனிவர் அரசனை வெறுத்து, தகுதியற்ற காரியத்தைச் செய்ய விரும்பியதோடு தன்னையும் வெறுத்தமைக்கு வெகுண்டு "நீ நீசனாகக் கடவாய்" என்று சபித்தனர்.

சாபம்பெற்ற அரசனுடைய உடல் கருத்து முப்புரி நூலும் ஆடைகளும் தோலாக மாறின. பிற ஆபரணங்களும் ஒளிமழுங்கிப் போயின. அப்பொழுதே அவனுருவத்தைக் கண்ட மாந்தரனைவரும் சைபென் றிகழ்ந்தனர். இவற்றை யெல்லாம் கண்ட அரசன் ஆண்டிருக்க நாணங்கொண்டு பலவாறு வருந்தி, ஒன்றுஞ்செய்யத் தோன்றாதவனாய் ஒரு காட்டின்வழியே போய்க் கொண்டிருந்தான். ஆண்டோர் பால் விசுவாமித்திர முனிவர் ஐம்புலன்களையும் அடக்கித் தவஞ் செய்து கொண்டிருத்தலைக் கண்டான். அருகிற் சென்று வணங்கத் தகுதியற்றவனா யினமையின், நெடுந்தூரத்தே நின்று வணங்கிநிற்க முனிவர், அரசனாகிய நீசனை நோக்கி நீ யார்? யாதுநிமித்தம் ஈண்டுவந்தனை யென்றனர். அரசன் நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறினன். முனிவர், வசிட்டரால் செய்ய இயலாத காரியத்தை நாம் செய்விக்க வேண்டுமென்றெண்ணி, தன் தவத்திற் பெரும்பான்மையானதைச் செலவிட்டு அரசனைச் சுவர்க்கத்துக்குச் செல்லும்படி யனுப்பினர். அரசன் சுவர்க்கஞ்செல்ல, கண்ட தேவர்களெல்லாம் இவ்வுட

லோடு ஈண்டுவரல் தகாதென்று வெறுத்து நீத்தனர். தேவர்களால் நீக்கப்பெற்றுக் கீழேவிழும் அரசன் நடுங்கிக்கொண்டு, விசுவாமித்திர முனிவரே சரணமென்று வீழ்ந்தனன். இக்குரலைக்கேட்ட விசுவாமித்திர முனிவர் அக்குரல்கேட்ட அவ்விடத்திலேயே, தன் தவவலிமையால் ஓருலகம் படைத்து அரசனை ஆண்டிருக்கச் செய்தனர். மன்னன் மேலுலகத்தையு மடையாது பூவுலகத்தும் புகழ்பெறாது நடுவே நின்று வருந்தலானான். இப்பொழுதும் இருதிறத்தும்சேராது பயனிழந்தவர்களை "திரிசங்கு சுவர்க்கம்போல்" என்பார்கள்.

ஆசிரியன் கூறிய மொழிகளை வேதமொழியினும் மேன்மையாகக் கொண்டவரே மேன்மையடைவர்.

---

14. சூதுபோருவோர் சுகந்தனையிழப்பர்

"சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவ தொன்றில்" (குறள்)

தன்னை விழைந்தார்க்கு, முன்னில்லாத பல துன்பங்களையும் விளைத்து, உள்ள புகழையும் கெடுக்கும் சூதுபோல வறுமையைக் கொடுக்க வல்லது வேறொன்று மில்லை.

சூதாடலானது உரிய காலத்தே செய்யவேண்டிய கடமைகளை யெல்லாம் காலங்கடந்து செய்யும்படி செய்யவல்லது. சூதாடிக்கொண்டிருக்கும் ஒருவனை அவன் பக்கத்திலிருந்த மற்றவன் உன் தந்தை யிறந்தான் எழுந்திரு என்றானும். ஆடுவோன், ஆட்டத்தில் மயங்கினவனாய் "இவ்வழியே தானே தூக்கிச் செல்லவேண்டும்; அவ்வமயம்பார்த்துப் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றானும். இந்நிகழ்ச்சி மெய்யானாலும்

ஆகட்டும், அல்லாவிடினும் கழியட்டும். சூதாடலே பெரிய காரியமென வெண்ணிப் பொழுது போக்குவோர் தமது கடமைகளையும் உரிய காலத்தே செய்யத் தொடங்கார் என்பது நன்கறியத்தக்கது. "இருமனப் பெண்டிரும் கள்ளுங் கவறும், திரு நீக்கப்பட்டார் தொடர்பு" என்ற நாயனார் கூறியதும் நன்கு ஆராயத் தகுந்தது. இக்கொடிய சூதானது, முதலில் லாபம் வருவதுபோலத் தோன்றச்செய்து, இன்ன பொருளைத்தான் பணயம் வைத்தாடுதலென்ற நியதியையும் கடக்கும்படி செய்யும். இச்சூதினை மேற்கொண்டார் எத்தகைய கௌரவம் வாய்க்கப்பெற்றவர்களா யிருப்பினும், அளகேசனை நிகர்க்கும் செல்வம் படைத்தவர்களா யிருப்பினும், கௌரவத்தையும் செல்வத்தையும் இழந்து வருந்துவர்.

எந்நாட்டினும் முன்னாட்டிக் கூறும் சிறப்பினையுடைய நிடதநாட்டின் கண் "கோதைமடவார் குலவுமெய்யிற்றிமிர்ந்த, சீதகளபச் செழுஞ்சேற்றால்—வீதிவாய், மானக்கரிவழுக்கும் மாவிந்தம்" என்ற நகரத்தைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டுவந்தான் நளனென்பான். இவன் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவன். தெய்வபக்தியுள்ளவன். அடைந்தோர்ப் புரக்கும் அருங்குணம் வாய்க்கப்பெற்றவன். "இலனென்னும் எவ்வமுரையாமையீதல், குலனுடையான் கண்ணேயுள" என்ற பொய்யாமொழியார் வாக்கிற்கு இலக்கியமாய் விளங்கினான். மன்னுயிரை யெல்லாம் தன்னுயிரெனக் கருதி அரசாட்சி செய்துவந்தான்.

ஒரு நாள் வேனிற்கால வெம்மை தணித்துக்கொள்ள மந்தமாருதம் மணங்கமழ்ந்து வீசிக்கொண் டிருக்கும் இளமரக்காவுக்குச்சென்று, ஆண்டுள்ள மாளிகையில் தங்கினன். அங்கே ஒரு அன்னப்பறவையானது தடாகத்தில் வந்து தங்

கிற்று. அரசன் அதனழகையும் பொன்னிறத்தையும் கண்டு, பிடிக்கும்படி வேலையாட்களையேவ அவர்களும் பிடித்து அரசனிடம் கொடுத்தனர். அன்னமானது அரசன் யாது செய்வானோவென்று நடுங்கியது. நடுக்கங் கண்ட அரசன், அன்னமே! மாதர் நடை சிறந்ததோ நின்னடை சிறந்ததோ வென்று காணுமாறு பிடித்தேன்; வருந்தற்க வென்றனன். இதமொழி கூறக்கேட்ட அன்னம் மகிழ்ந்து தமயந்தியின் சிறப்புக்களைக் கூறி, அவளை நளனுக்கே மாலைசூட்டும்படி செய்தது.

சிலநாட் சென்றபின் தமயந்தி கருப்பமுற்று ஓர் ஆண் மகவையும் பெண்மகவையும் ஈன்றனள். நளனும் மிக்க சந்தோஷத்தோடு விளங்கினன். ஒரு நாள் புட்கரன் என்னும் ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தனன். வருதலைக்கண்ட அரசன் அவனோடு சிறிது நேரம் உரையாடிப்பின், அவன் சூதாட விழைந்தவாறே தானும் உடன்பட்டனன்.

"சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவ தொன்றில்"

"கவறும் கழகமும் கையும் தருக்கி
யிவறியார் இல்லா கியார்"

என்று பலநீதிகளை அமைச்சர் கூறித்தடுக்கவும் கேளானாய்த் தன்னிடத்திலுள்ள பல பொருள்களையும் பணயமாக வைத்தாடினன். எல்லாப் பொருள்களையும் புட்கரனேவென்று பெற்றனன். பின் பணயமாக வைத்தற்கு யாதுமில்லையே யென்று நளன் யோசித்துக்கொண் டிருக்கும்பொழுது, புட்கரன் நளனைநோக்கி, உன்மனைவி மக்களையும் பணயமாக வைத்தாடலாமே யென்றனன். இக்கொடிய மொழியைக்கேட்ட நளன் பொறுது, தன்மனைவியோடும் மக்களோடும் பொன்

போலும் கள்ளிப்பொறிபறக்கும் கொடுஞ்சுரத்தை யடைந்த னன். சிறிது தூரஞ்சென்ற பின்னர் மக்களையும் மனைவியையும் உடன் கொண்டுசேறல் பெருந்துயர் விளைக்குமென்றெண்ணி தனித்தனியே ஒவ்வொருவரையும் நீத்து வழியிலே பல வகைத் துன்பங்களையும் அனுபவித்து, அயோத்தி நகர்க்குச் சென்று நுதுபன்ன மகாராஜனிடத்தில், அடிமைத்தொழில் செய்தனன். பின் தமயந்தி சூழ்ச்சியால் அவளையடைந்து, நாட்டையும்பெற்று இன்புற்று வாழ்ந்தனன்.

சூது பொருவோர் உலகம் போற்றத்தக்க மன்னர் மன்னராயினும் தம் நிலையினின்று தவறிப் பேரிடருழப்பர்.

---

15. கற்றோர்ப்பகைத்தல் கடவுட்பகைத்தலாம்

" வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை " (குறள்)

வில்லையேராகவுடைய உழவரோடு (அரசர்) பகைகொளினும், சொல்லையேராகவுடைய உழவரொடு (நாவலர்) பகைகொள்ளற்க.

கேடில் விழுச்செல்வமாகிய கல்விக்கும் செல்வத்திற்கும் நெடுவாசியுண்டு. "இன்னல்தரும் பொருளை யீட்டுதலும் துன்பமே; பின்னதனைப் பேணுதலும் துன்பமே— அன்னது, அளித்தலும் துன்பமே அந்தோ பிறர்பால், இழத்தலும் துன்பமேயாம்" என்ற பெரியார் வாக்கின்படி தேடல் முத லியவற்றால் துன்பமேதரும் செல்வத்தைப் பெற்றார் எத்த கைய மன்னர் மன்னராயினும் கல்வி யறிவுடைய பாவலர்க்கு அடங்கி நடப்பர். துன்பத்தை யொழித்து ஞானத்தை யளித்து இருமையும் பயக்கும் கல்வி யுடையார் கடவுளோடு

ஒரு தன்மையராய் வைத்து எண்ணற்பாலர். கடவுளரும் அவர் வாக்கிற் கிசைந்துநிற்பர். கற்றோரைக் கண்டவிடத்து அவர்க்குப்பணிந்து நடந்து அவரிடம் பெருமை பாராட்டாது செல்வச் செருக்கால் இகழ்ச்சி செய்வரேல் அதனால் அன்னார்க்கிழிவின்று. இகழ்ச்சி செய்வோர்க்குப் பெருந்துன்பம் விளையுமென்பதாம்.

முத்திதரும் நகரங்கள் ஏழு என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டவைகளுக்குள், முதன்மையுற்றதென்று பாராட்டப்படும் காஞ்சிபுரத்தின்கண் பக்திசாரர் என்று ஒரு முனிவரிருந்தார். கணிகண்ணர் என்ற ஒருவர் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தார். அது கண்ட வயதுமுதிர்ந்த வேசியொருத்திமுனிவரிடத்துப்பேரன்புகொண்டு பணிவிடை செய்து கொண்டுவந்தனள். ஒருபரத்தை தூயமனதோடு பணிவிடைபுரிந்து வருதலைக்கண்ட பக்திசாரர் அருள் கூர்ந்து பரத்தையை நோக்கி நினக்குயாதுவேண்டுமென்று வினவினர். அவள் இம்முதுமை யொழிந்து இளமையெய்த வேண்டுமென்றனள். அப்பெரியார் அங்ஙனமே யாகுக வென்றருள் புரிதலும் அவள் பதினாறாட்டைப் பெண்ணரசியாய் விளங்கினள்.

அவள் ஒருநாள் அரண்மனை வீதி வழியாய்ச் சென்று கொண்டிருந்தனள். அவளழகைக் கண்டு மையல்கொண்ட மன்னனான பல்லவன் அவளை மணஞ்செய்து கொண்டனன். தனக்கு மூப்பு முதிர்ந்து வருதலைக்கண்ட பல்லவன் ஒருநாள் தன் மனைவியான பரத்தையை நோக்கி நினக்கு இவ்விளமை யெய்திவாறென்னென அவளும் நிகழ்ந்தவற்றை விளங்கக் கூறி, நீயும் இவ்வாறு பெறவேண்டுமாயின், அநுதினமும் நின்னகத்திற்கு உபாதானங்கொள்ளவரும் கணிகண்ணரென்ற

பக்திசாரருடைய சிஷ்யரை வேண்டினையாயின், அவரது வேண்டுகோளுக்கிணங்கி பக்திசாரர் அருள்புரிவர்; பின்னர் நீயும் இவ்வாறு இளமை யெய்தலாகுமென மொழிந்தனள். கேட்ட அரசன் மனமுவந்து, மறுநாள் தன்னகத்துக்குப் பிச்சை கேட்கவந்த கணிகண்ணரை நோக்கி நும்மாசிரியரை நான் காணுமாறு ஈண்டு அழைத்து வரவேண்டுமென்று கூற, கணிகண்ணர் எம்மாசிரியர் ஈண்டுவாரா ரென்றனர். ஆயின் நீராவது என்மேற் கவிபாடுகவெனக் கேட்டனன். கணிகண்ணர் மானிடரைப் பாடோமென மறுத்துவிட்டனர்.

அரசன் பலமுறை கூறியும் கேளாமையால் வெகுண்டு இனி என்னாட்டகத்திருத்தல் கூடாதென்றனன். கேட்ட கணிகண்ணர் தம்மாசிரியரிடஞ் சென்று விண்ணப்பித்தனர். உடனே பக்திசாரர் நீ செல்லுவையாயின் நானிங்கிரேன்; நாமிருவருஞ் செல்லவே எம்பெருமான் ஈண்டுக் கண்டுயில் வானோ என்று கூறிவிட்டு,

> "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
> மணிவண்ணா நீகிடக்க வேண்டாம் — துணிவுடைய
> செந்நாப் புலவனியான் செல்கின்றேன் நீயுமுன்றன்
> பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்"

என்று ஒரு செய்யுளுமியம்பினர். எம்பெருமானும் பின்றொடர்ந்து சென்றனர். எம்பெருமான் பின்றொடரவே ஆண்டுள்ள மற்றைய தேவரும் பின்பற்றினர். எல்லாருமாகச் சிறிது தூரஞ்சென்று ஓரிரவு ஓரூரிலே தங்கினர்.

மற்றை நாள் இயங்கியற் பொருள்களும் நிலையியற் பொருள்களுமாகிய வெல்லாம் வாட்டமுற்றன; நகரெங்கும் இருள் மூடிக்கொண்டது; ஆலயங்களிலும் கடவுளர்கள் இலராயினர். இங்ஙனம் நிலைகுலைந் திருத்தலைக்கண்டு பல

வாறு கவன்று மந்திரிகள் மூலம் நிகழ்ந்தவற்றைத் தெரிந்த அரசன் கணிகண்ணர் முதலாயினோர் சென்றிருந்த வூரைத் தேடி யடைந்து பணிந்து வேண்டிக்கொள்ள பக்திசாரர் இரங்கி,

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்கவேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனியான் செல்லகில்லேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்"

என்று மற்றோர் செய்யுளை இயம்ப, எம்பெருமானும் மற்றைய கடவுளரும் கணிகண்ணன், அவரது ஆசிரியர் முதலாயினாரும் நகரையடைந்தனர். பின்னர் நகரம் முன்போல் பொலிவுற்று விளங்குதலைக் கண்ட மன்னன் கற்றோர்க்குத் தீங்கிழைத்தல் கூடாது என்று தெளிந்தனன்.

கற்றோர்க்குத் தீங்கிழைத்தலைக் கனவினும் கருதலாகாது.

---

16. மானம்படவரின் வாழார் உரவோர்

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அனையார்
உயிர்நீப்பர் மானம் வரின்" (குறள்)

தன் மயிர்த்திரளின் ஒரு மயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமானை யொப்பார், உயிர் நீக்கத்தால் மானமெய்து மெல்லலவரின் அதனைத் தாங்காதிறப்பர்.

விழுக்குடிப் பிறந்த மேன்மக்கள் உயிர் நிலைத்திருந்து எய்தும் அவமதிப்பினும் மானம் நிலைக்க எய்தும் உயிர் நீக்கமே பெரிதெனை மதிப்பர். மானம் கெட்டதன்பின் பிற

நிகழ்தலைக் கேட்டும் உயிர்வாழ நினைத்தலானது சரீரத்தி லுள்ள விருப்பத்தினலேயாம். உடலின் கண் விருப்பம் வைத்து மானத்தையும் பேணுதோர் பின் தமக்குவரும் பழி யையும் எதிர்பாராது பாவச்செய்கட்கும் உடன் படுவர். இங் ஙன மிருந்து தீச்செயல் செய்து இம்மையிற் பழியை நிறுத்தி மறுமைக்கு நரகம் தேடிக்கொள்ளுதலைக் காட்டிலும் இறத் தல் மேலானதாம்.

சேரர்களுக்குள் கல்வியிலும், அறிவிலும், ஒழுக்கத்தி லும், ஆண்மையிலும் சிறந்த சேரமான் கணைக்காலிரும் பொறை யென்று ஒரு மன்னனிருந்தனன். ஒரு நாள் சோழன் செங்கணுனோடு போர்செய்ய நேர்ந்தமையின் போர்தொடங்கி பலநாட் போர்செய்தனன்.

"நஞ்சுதரு தீவினையி னுலமுதும் நஞ்சாம்
நஞ்சுமமு தாமுரிய நல்வினையின் மாதோ."

தீவினை யனுபவிக்க வேண்டி யிருந்தால் யாரைவிடும்? அனுபவித்தே தீர்க்கவேண்டும். ஆதலால் குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்த சேரமான் கணைக்காலிரும்பொறையும் சோழன் செங்கணுனல் சிறைபிடிக்கப்பட்டான். கணைக்கா லிரும் பொறை பலவாறு வருந்திச் சிறைகாவலரை நோக்கிச் சிறிது தண்ணீர் தருகவென்றனன். காவலரும் முதலில் இல்லை யென்று கூறிப் பின் தந்தனர். கேட்டவுடன் இல்லையென்று கூறிப் பின் தந்தமையின் அரசன் அத்தண்ணீரைப் பெற்றுக் கையில் வைத்துக்கொண்டு,

"குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்

மதுகை யின்றி வயிற்றுத் தீதணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன் மரோ விவ்வுலகத் தானே ”

என்று கூறி மானத்தின் மிக்க அறனும் பொருளும் இன்பமும் இல்லை யென்றெண்ணித் தன்னுயிரை நீத்தனன்.

அறிவுடைய மேலோர் உயிரினும் மானத்தையே பெரிதெனை மதிப்பர்.

---

17. நன்றிமறந்தார் நாடழிந்தோழிவர்

“எந்நன்றி கோன்றார்க்கும் உய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கோன்ற மகற்கு” (குறள்)

எவ்வகைப்பட்ட அறங்களைச் சிதைத்தார்க்கும் பின் அதனி னீங்கும் வாயிலுண்டாம்; ஒருவர் செய்த நன்மையைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை.

ஆன்வதை செய்தல், மகளிர் கருச்சிதைத்தல், பார்ப்பார்த்தபுதல் முதலிய பாவங்களைச் செய்தார்க்கும் அதனினீங்கியுய்யும் வழியுண்டாம். காரணமின்றிச் செய்ததும் காலத்திணுற் செய்ததும் பயன்றூக்காது செய்ததுமாகிய உதவியை மறந்தார்க்கு ஒருகாலத்தும் உய்யும் வழியில்லையென அறநூல்கள் முறையிடுகின்றன. இங்ஙனம் இருக்க, இக்காலத்துச் சிலர் அரிதினீன்ற தாய்தந்தையர் தம்மைப்பெற்றெடுத்து வளர்த்த நன்றியை ஒரு சிறிதும் நினையாதவர்களாய், பாதுகாக்கவேண்டிய முதுமைப் பருவத்தில் அவர்களைக் கைவிட்டு விடுகின்றனர். இத்தகைய நன்றியை மறந்த மக்களை விழுங்கிய நரகம் ஒருநாளும் வாயைத்திற

வாதாம். பெற்றோராயினும், உற்றோராயினும், நட்பினராயினும், வேறு யாவராயினும் நன்மை செய்வரேல் அதனை நாம் உயிரோடுள்ள வரையும் மறத்தல் கூடாது.

இப்பரதகண்டத்தில் ஏமாங்கதமென்னும் ஒருநாடுண்டு. அந்நாட்டில் இராசமாபுரம் என்று ஒரு சிறந்த நகரமிருந்தது. அதைத் தலைநகராகக்கொண்டு சச்சந்தன் என்னும் மன்னன் அரசாண்டுவந்தான். அவன், தன் மாமனும் விதைய தேசத்து அரசனுமாகிய ஸ்ரீதத்தன் மகள் விசையையென் பாளை மணஞ்செய்து கொண்டனன். சிலநாட் சென்றபின் அவளது பேரழகில் ஈடுபட்டு மயங்கி அவளைப்பிரியாதிருக்க வேண்டுமென்றெண்ணி, உத்தம மந்திரிகள் சொல்லையும் மறுத்து, தன்னால் கீழ் நிலையிலிருந்து முன்னுக்குக் கொண்டு வரப்பட்ட கட்டியங்கார னென்பவனுக்கு, குடையுமுடியு மொழிந்த சிறப்புக்களையெல்லா மளித்து, அதை ஊரார் எல் லார்க்கும் விளங்க அறிவித்து அந்தப்புரஞ்சென்று இன்பம் நுகர்ந்துகொண் டிருந்தனன்.

ஒருநாள் விசையையானவள் பலதீக்கனவுகளைக் கண்டு, சச்சந்தனிடம் கூறினள். அவன் கனுநூலினை யெல்லாம் நன் கறிந்தவனாதலின் அவைகளின் பலனை அவளுக்குக் கூறினன். அவளும் பின்வரப்போகும் தீமையை நினைந்து நினைந்து செய்யும்வழி இன்னதென்றுணராது வாளேறுண்ட மயில் போல் மயங்கிக் கிடந்தனள்.

இவளிங்ஙனமிருக்க, கட்டியங்காரனென்பான், சச்சந் தன் தனக்குச்செய்த நன்மை முழுவதையும் மறந்து, அவ னைக்கொன்று தானே ராஜ்யத்தையாள வேண்டுமென்று எண் ணினன். மந்திரிகள் பலவாறு நீதிகளையெல்லாம் கூறினர். கட்டியங்காரன் அவர் கூறியவைகளையெல்லாம் மறுத்து, கச

டனான தன்மைத்துனன் கூறியவைகளையே உறுதிமொழியெனக்கொண்டு, போர் செய்யத்தொடங்கி அந்தப்புரத்தைச் சேனைகளோடும் வளைந்துகொண்டனன். இச்செய்தியைக் கடைகாப்பார்மூல முணர்ந்த மன்னன், முன்னமேயே மயனாற் செய்யப்பெற்றிருந்த மயிற்பொறியின்மீது விசையை யேற்றியனுப்பிவிட்டுக் கட்டியங்காரனோடு போர்செய்தனன். அரசன் உதவியின்மையின் மாண்டனன்.

3421

பூரண கர்ப்பத்தோடு மயிற்பொறியிற் சென்றுகொண்டிருந்த விசையை, கட்டியங்காரனறைந்த வெற்றி முரசைக் கேட்டுத் தன் கணவனிறந்தானென்று எண்ணிப் பொறியைச் செலுத்தாது சோர்ந்து விழுந்தனள். செலுத்தப்படாமையின் அப்பொறி ஆண்டொரு சுடுகாட்டிலிறங்கியது. உடனே அவள் கருவுயிர்த்தனள்; ஓர் ஆண்மகவு பிறந்தது; அதற்கு ஜீவகன் என்று பெயரிட்டனள். பின் குழந்தையை நோக்கித் தன் செல்வமெல்லாவற்றையும் நினைந்து நினைந்து பலவாறு வருந்திக்கொண்டிருக்கையில், அவ்வனத்தின்கண்ணுள்ள ஒருதெய்வம் அவள் தோழியின் வடிவுகொடு தோன்றி வருந்திக்கொண்டிருக்கும் விசையைப் பலவாறு தேற்றி அவளை நோக்கி "நீ இக்குழந்தையைப் பாதுகாக்க வலியற்றவளாய் இருக்கின்றாய்; உன் கணையாழியைக் கழற்றிக் குழந்தையின் கையிலிட்டுச் செல். இவ்வூரிலுள்ள கந்துக்கடனென்னும் ஒரு வணிகன், இறந்த தன்மகனைத் தூக்கிக் கொண்டு இவண் வருவான். இக்குழந்தை தனியே கிடக்குதலைக்கண்டு தூக்கிச் செல்வன். அக்குழந்தை தக்க பருவமடைந்தபின் ஒரு காலத்து உன்னைவந்து அடையும்" என்று கூறி விசையையும் அழைத்துக்கொண்டு ஒரு மரத்தடியில் யாவர்க்கும் தெரியாமல் நின்றுகொண்டிருந்தது. கந்துக்கட

னென்னும் வணிகனும் இறந்துபோன மகனை யெடுத்துக் கொண்டு ஆண்டு வந்தனன். தனியேகிடந்த இக்குழந்தையைக் கண்டனன். தன்குழந்தையைப் புதைத்துவிட்டு, இக்குழந்தையை யன்போடு தூக்கினன். கையின்கண் சச்சந்தனது பெயர் பொறிக்கப்பெற்ற மோதிர மிருத்தலைக்கண்டு அதைக் கழற்றி வைத்துக்கொண்டு, அக்குழந்தையை யெடுத்துக் கொண்டு வீட்டிற்குப்போய், குழந்தை பிழைத்துவிட்டதென்று கூறி மனைவியினிடம் கொடுத்தனன். அவளும் அன்போடு வாங்கி வளர்த்துவந்தனள்.

இங்ஙனம் சிலகாலஞ் சென்றபின் ஜீவகன் உரிய பருவம் வரப்பெற்றுக் கலைகளையெல்லாம்அச்சணந்தி யாசிரியரிடத்தே கரிசறப் பயின்றனன். காந்தருவ தத்தை முதலியோரை மணஞ் செய்து கொண்டனன். பின் கட்டியங்காரனோடு பொருதுவென்று அவனையும் அவன் மக்கள் நூற்றுவரையும் விண்ணுலகேகச்செய்து, தன் தாயார் முதலியோரை யெல்லாம் கண்டுகளித்து நீதிதவறாது செங்கோல் செலுத்திவந்தான். விறகுதலையனாயிருந்த கட்டியங்காரன் உயர்ந்த நிலையைத் தனக்களித்த நன்றியை மறந்து சச்சந்தனுக்கே தீங்கிழைத்தமையின் தன் புதல்வரோடும் மடிந்தான்.

தனக்கு ஒருவர் செய்த நன்றியை மறத்தலைக் காட்டிலும் ஒருவனுக்குத் தீமையைத் தரத்தக்கது ஒன்றுமில்லை.

18. முனிவர்சொல் மறுத்தல் முடிவிலாத்துன்பம்

"ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை" (குறள்)

நினைத்தவற்றை யெல்லாம் முடிக்கும் வன்மையுடையாரது ஆற்றல்களை யவமதியாமையானது, தமக்குத் தீங்குவாராமற் காப்பார் செய்யும் காவல்களெல்லாவற்றினும் மேம்பட்டதாம்.

பற்றற்றான் பற்றினைப்பற்றிய முனிவரது பெருமையை கண்கூடாகக் காணும் புண்ணியம் படைத்திலமேனும், புராணங்களினால் நன்குதெரிந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய பெருமை வாய்க்கப்பெற்ற முனிவர் ஏதேனும் கூறுவரேல் அதை ஒருகாலத்தும் மறுக்க நினைத்தல்கூடாது. தரும சங்கடங்கள் நேர்ந்த காலத்தும் இத்தகைய பெரியவர் வாக்கையே பெரிதெனப் பேணல்வேண்டும்.

"ஐயனங்கது கேட்டற னல்லவும்
எய்தினலது செய்கவென் றேவினல்
மெய்ய நின்னுரை வேதமெனக் கொடு
செய்கையன்றோ அறஞ்செய்யுமா றென்றான்"

என்னும் செய்யுளும் இக்கருத்துப்பற்றியே இராமபிரானல் கூறப்பட்டிருத்தலை யாராய்க.

ஐம்பொறிகளையும் அடக்கித் தவம்புரிந்து மேன்மையடைந்த துருவாசர் என்னும் முனிவரர் ஒருநாள் மண்ணனைத்தும் புரக்கும் துளபத்தாமப் பரந்தாமனைக் காணவேண்டி வைகுந்தலோகஞ் சென்றனர். ஆண்டு எம்பெருமான் பள்ளிகொண்டிருக்க அவனேவலால் வாயில்காப்பார் யாரும் உட்செல்லாது காத்து நின்றனர். அவ்வமயம் முனிவரர்,

"அங்கையினேமி சங்குவாடண்டோ டடற்சராசனந் தரித்தருள்வோன், சங்கையின் மறைகளாயிரங்களுக்கும் சாற்றுதற்கரிய தத்துவத்தோன், கங்கையினறலும் காளியன் முடியும் காளிந்திக்கரையுமேகமழும், பங்கயமலர்கள் இரவு நன்பகலும் பணிந்து பாடுது மவன்புகழே" என்று பாடிக் கொண்டு காவலரையண்மிக் "காவலீர்! யான் எம்பெருமானைக் காணவேண்டும்: உட்புக அநுமதி தருமின்" என்றனர். காவலர், கண்ணனது ஆணை ஒருவரும் உட்புகலாகாதென்றனர். முனிவரார் என்னை விடாதீர்கள் என்று அவர் கூறினார் இல்லை. ஆதலால் நான் பார்க்கலாம், உட்செல்ல அநுமதி தருமினென்றனர்.

காவலர் முனிவரைநோக்கித் தாங்கள் எவ்வளவு கூறினும், யாங்கள் வைகுண்டநாதனது ஆணையைக் கடத்தலாகா தென்றனர். முனிவர், பலவாறு கூறியும் காவலர் கேளாமையால் வெகுண்டு "நீவிர் புவியிடைச் சென்று பிறக்க"வெனச் சபித்தனர். கடுஞ்சாபம் பெற்ற காவலர் கண்ணனைக் குறித்துப் பலவாறு துதித்து நின்றனர். அரிதுயிலமர்ந்த எம்பெருமான் கதவைத்திறந்துகொண்டு வெளியேவந்து நிகழ்ந்தவற்றைத் தெரிந்து முனிவரரை வரவேற்று உயரிய ஆசனத்திருத்தி உரையாடிக்கொண் டிருந்தனர். அப்பொழுது காவலர்சென்று வணங்கி, எங்களுக்கு விமோசனம் கூற வேண்டுமென்றனர். துளபமௌலியானும் முனிவரை நோக்கிச் சாபவிடை செய்யுமாறு கூறினன். அதுகேட்ட முனிவர் பரிந்தெழுந்து "இவர் எழுகால் அன்பராய் வந்தேனும், அல்லது மும்முறை பகைவராய்ப் பிறந்தேனும் உன்பதத்தை யடைவார்" என்று சாபவிடை செய்தனர். அச்சுதன் காவலரைநோக்கி, நீர் மறையோன் சாபம் கடக்குமாறு எங்ஙனமென்ன, காவலர் இறை

யோனது மலரடிகளில் வீழ்ந்து வணங்கி "எழுபிறப்புறமாட்டோம்; மும்முறை பிறந்து நின்பதமடைவோம்" என்றனர். "அவ்வாறேயாகுக"வென முனிவரர் அருள்செய்ய,காவலரிருவரும் முறையே இரணியன், இரணியாட்சன், ராவணன், கும்பகர்ணன், கம்சன், சிசுபாலன், என்னும் பெயருடையவர்களாகப் பிறந்து,மனிதர்களுக்கு இடையூறு செய்ய, யுகங்கள் தோறும் துஷ்டர்களைக்கொன்று சிஷ்டர்களைப் பாதுகாக்கும்படி அவதரித்தருள்கின்ற எம்பெருமானால் சம்ஹரிக்கப் பெற்றுப் பரமனது திருவடிகளை யடைந்தனர்.

கண்ணனருள்பெற்ற காவலர்க்கே முனிவர் சொல் மறுத்தமைக்கு இக்கதிநேருமாயின் மற்றையோர்களைப்பற்றிக் கூற வேண்டாதாயிற்று.

---

19. கடுமொழி கூறல் கடுந்துயர்விளைக்கும்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (குறள்)

பொருளால் பிறர்க்கு நன்மைபயக்கும் சொற்கள் உளவாயிருக்க அவற்றைக் கூறாது இன்னாத சொற்களைக் கூறுதல், உண்ணத்தகுந்த கனிகள் தன் கையின்கண் உளவாயிருக்க, உண்ணாதகாய்களை நுகர்ந்த தனோடொக்கும்.

தனக்கென வாழாப் பிறர்க் குரியாளராய் விளங்கும் நன்மக்கள் முதலிற் கைக்கொள்ள வேண்டியது இன் சொல்லே. உலகுக்குப்புமாறு நன்னெறி போதிக்க வேண்டினும் இன்சொல்லாலேயே கூறவேண்டும். நன்மை பயக்கும் உறுதிமொழி

களாயிருப்பினும் கடுஞ்சொல்லாற் கூறின் உலகத்தார் கொள் ளாரென்பது திண்ணம்.

" விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் "

என்று வள்ளுவர் கூறியதும் ஈண்டுக் கவனிக்கத் தகுந்தது. வெகுளியாலேனும், காரியம் கைகூடவில்லையே யென்ற மன வருத்தத்தாலேனும் அவசரப்பட்டுக் கருதிய பயனையிழத்தல் கூடாது.

சந்திரவம்சத் துதித்த பாண்டுவின் குமாரர்களான தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், என் னும் ஐவரும் போர்த்தொழில் முதலியவற்றில் தேர்ந்தவர்க ளாய் சகல பிரஜைகளுக்கும் சம்மதர்களாய் விளங்குகை யில் எல்லா அரசர்களையும் வென்று ராஜசூயயாகம்செய்ய வெண்ணி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையையடைந்து ஆண்டுள்ள அரசர்களை யெல்லாம் வென்று, திறைகொணர் ந்து, தேவருலகத்தும் இத்தகைய வனப்பமைந்த மாளிகை யிலதென்று கண்டோர் கூறும்வண்ணம் மயனென்னும் தெய் வத் தச்சனால் ஓர் மண்டப மியற்றுவித்து, சுற்றத்தார்க்கும், மன்னர்களுக்கும், அந்தணர்க்கும் ஓலை போக்கி வரவழைத்து நல்லோரை கொண்டு மகந்தொடங்கினர்.

கண்ணபிரானும், தரணிவேந்தரும், வேதங்களை யெல் லாம் நண்குணர்ந்த இருபிறப்பாளரும் வந்து கூடியிருந்த அவையின்கண், தருமன் யாகத்தில் செய்யவேண்டிய சடங்கு களை யெல்லாம் தவறாது செய்தபின் பராசரரின் புதல்வரான வியாசரை நோக்கி "ஈண்டு அக்ரபூசை பெறற்குரியார் யார்?" என்றனன். வியாசர் தருமனை நோக்கி " காரின்மா மேனிக்

கரியசெந்திகிரிக் கண்ணனே" பெறுதற்குரியன் என்று கூற, சேதிநாட்டரசனான சிசுபாலன் நீங்கலாக ஏனைய வேந்தர் வியாசர் கூறியதே சரியென்று கூறினர்.

சேதிபதியான சிசுபாலன் வெகுண்டு "பூபாலர வைய த்து முற்பூசை பெறுவார் புறங்கானில்வாழ், கோபாலரோ" வென்றும், "கொச்சை மகளிரிடையருக்கும் கூத்துக்குனித்து நவனீதப், பிச்சைநுகரும் இவன் எமக்கு முன்னே பூசை பெறுவானும்" என்றும், அன்னையையும் தந்தையையும் சிறை யகத்து வைகச்செய்தவனென்றும், தனக்கு முன்னே பிற ந்த அறுவரையும் கொல்லும்படி செய்தவனென்றும், தாய் போல் பாலருந்தவந்த பூதனையை உயிர்நீக்கினவன் என்றும் எடுக்கக்கூடாதபடி ஆய்ச்சியர், உயரமான உறியின்கண் வைத் திருந்த வெண்ணெயையெல்லாம் திருடித் தின்றவன் என் றும், அண்டர்களுக்கெல்லாம் அரசனான தேவேந்திரனுக்காக இடையர்களமைத்த பாலடிசிலையெல்லாம் வஞ்சகமாக அவர் களை ஏமாற்றிவிட்டுத் தானே யுண்டவன் என்றும், நாவுக் கிசைந்தவாறு ஒன்றின்னொன்று உச்சமாகக்கூற, புண்ணியர்வந் தினிதிறைஞ்சும் பூங்கழலோனான கண்ணன், ஒன்றும் புக லாது தேரேறிப் போர்செய்து கடைசியாக அவனை வீர சுவர்க்கம் அடையும்படி செய்தனன்.

இன்னாத மொழிகளைக் கூறுவோர் தம்மின் உயிரையும் இழப்பர் என்பது ஒருதலையாம்.

---

20. ஓராச்செய்கை தீராத்துயர்தரும்

" எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"(குறள்)

யான் செய்தது எத்தன்மைத் தென்று பின் னிரங்கும் வினைகளைச் செய்யாதொழிக. அன்றி, ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யும் தன்மையனாயினாயின், பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாதொழிதல் நன்று.

ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குமுன் அது நன்மை பயக்குமா, அல்லது தீமை பயக்குமா வென்று ஆராய்ந்து, நன்மை பயக்குமாயிற் செய்யத் தொடங்கவேண்டும். தீமை பயப்பதாயின் அப்பொழுதே விட்டுவிடல் வேண்டும். அங்ஙனமின்றி வெகுளி முதலிய காரணங்களால் தீச்செயல்களைப் பெரியார்மாட்டுச் செய்வானாயின், அவரது வெகுளிக் கிலக்காகித் துன்புறுவன். ஆதலால் வெகுளி முதலிய காரணங்களால் அறிவை மயங்கவிடாது தெளிந்த மனத்துடன் பின்வரும் நன்மை தீமைகளை யாராய்ந்து செய்வதும் விடுவதும் செய்யவேண்டும்.

விதுகுல மன்னர்களுக்குள் பரீக்ஷித்து என்ற பெயரை யுடைய ஒரு மன்னனிருந்தான். இவன் துஷ்ட மிருகங்களை யெல்லாம் தொலைத்து அதனால் குடிகளுக்குவரும் இடையூற்றை நீக்கும்பொருட்டு வழக்கம்போல் வேட்டைக்குச் சென்றான். வேட்டையாடும்பொழுது ஒரு மானைக் குறி வைத்து ஓரம்பெய்தான். அது தவறியதால் அம்மான் மற்றொரு பக்கத்தில் ஓடிற்று. அரசன் அதை விடக்கூடாதென்று எண்ணிப் பின்பற்றி யோடினன். மான்போன இடம் தெரியவில்லை. ஆண்டுத் தவஞ் செய்துகொண்டிருந்த சமீக

ரிஷியை "ஈண்டு ஒரு மான்வந்ததே கண்டீரா?" என்று வினவினன். அவர் ஐம்பொறிகளையு மடக்கி மனத்தை எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளிடத்தே பதியவைத்தவராய்த் தவஞ் செய்துகொண் டிருந்தாராதலின், அவர் செவி இவன் கூறியமொழியை யேற்றுக்கொள்ளும் தன்மையற்றதா யிருந்தது. அரசன் முனிவரை நோக்கிப் பலமுறை வினவினன். அவர் மறுமொழியொன்றும் கூறாமையால் "இவர் நம்மை அவமதித்தார்" என்று எண்ணிச் சிறிது தூரத்தில் இறந்து கிடந்த ஓர் பாம்பையெடுத்து அவர் கழுத்தில் மாட்டிச் சென்றனன்.

சிறிது பொழுது சென்றபின், காய்கனி முதலியன கொணரச் சென்றிருந்த ரிஷி குமாரரான சிருங்கி முனிவர் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். தன் தந்தையின் கழுத்தில் பாம்பு கிடப்பதைக் கண்டு அடங்காக் கோபமும் வருத்தமுங் கொண்டார். அருகிருந்த ஏனைய முனிவர் மக்களை நோக்கி "இத்தீச்செயலைச் செய்தவன் யாவன்?" என்று வினவினர். அவர்களும் நிகழ்ந்தவற்றைக் கூறினர். கேட்ட சிருங்கிமுனிவர் மனம்பொறாது "இத்தீச் செயலைச் செய்தோன் இன்றைக்கு ஏழாம்நாள் தக்ஷகன் என்னும் பாம்பினால் தீண்டப்பெற்று இறப்பானாக"வென்று சபித்தனர்.

இச்செய்தியைத் தெரிந்த அரசன் இக்கொடிய சாபத்தினின்றும் எப்படித் தப்புவதென்று ஆராய்ந்து, மதிவல்ல அமைச்சர்கள் புத்திக்கிணங்கி, கடலின் நடுவண் சிறந்த மாளிகையொன்று அமைக்கச்செய்து அதில் வாழ்ந்து வந்தான். குறித்த நாளில் தக்ஷகன் என்னும் பாம்பும் அரசனைக்கடிக்க வந்துகொண்டிருந்தது. அப்பொழுது ஒரு வைத்தியன் அரச

னுக்குப் பாம்பு கடிக்கப்போவதாகக் கேட்டு, விஷத்தை நீக்கிப் பொருள் பெறலாமென்றெண்ணி வந்து கொண்டிருந்தான். பாம்பும் இவ்வைத்தியனும் சந்திக்க நேர்ந்தபொழுது, பாம்பு வைத்தியனை நோக்கி, நீ யாண்டுச் செல்கின்றனை யென்ன, வைத்தியன் உண்மையைக் கூறினன். தக்ஷகன் என்னும் பாம்பு நகைத்து, நானே கடிக்கப்போகிறேன். என் விஷத்தை நீக்க உன்னால் இயலுமாவென்று கூறி, அருகிருந்த ஓர் பழுமரத்தில் தீண்டிற்று. உடனே அம்மரம் சாம்பராயிற்று. அதைக்கண்ட மருத்துவன் ஒருகணமும் தாமதியாமல், தன் மருந்தில் சிறிதையெடுத்து அதன்மீதுபோட அம்மரம் முன்னிலும் பதின்மடங்கு தளிர் இலை காய்கனிகளோடு விளங்கியது. கண்ட தக்ஷகன் மனமயங்கி, இவன் வருவானேல் நம் காரியம் தவறிவிடு மென்றெண்ணி, அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தனுப்பிவிட்டு, சென்று அரசனைத் தீண்ட அரசன் உயிர்துறந்தான்.

ஒவ்வொருவனும் பின்வருவதை ஆராயாது ஒருகாரியத்தைச் செய்வனேல், அதன்பயனை யனுபவித்தலினின்றும் தப்ப இயலாதென்பதாம்.

---

21. இழிந்தோர் சொற்கோளல் இறத்தலிற்றுன்பம்

"நல்வினைத்தி னூங்குத் துணையில்லை தீயினைத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்" (குறள்)

ஒருவற்கு நல்வினைத்தின் மிக்க துணையுமில்லை. தீயவினைத்தின் மிக்க பகையுமில்லை. (நல்வினம் அறியாமையினின்று நீக்கித் துயருறாமற் காத்தலின் துணையாகுமென்றும், தீயினம் அறிவினீக்கித் துயருறுவித்தலின் அதனைப் பகையென்றும் கூறினர்.)

"பழக்கம் வலியதுகாண் பாறையினும் கோழிகிழிக்கும்" என்றபடி தீயோரது பழக்கமுண்டாயின் நல்லோரது தூய்மையான மனமும் மாறித் தீச்செயலைச் செய்யத் துணிந்துவிடும். அவரது வார்த்தையையும் கேட்டு அதையே யுறுதிமொழியெனவும் கொண்டு நடப்பின் உயிரிழத்தலை யொத்த துன்பத்தை யுழக்கநேரிடும். உறுதியான அறிவும் மனமும் உடையவராயிருப்பினும், இனியதுபோலக் கூறி அவரது அறிவை மயக்கித் தன்வசமாம்படி செய்து அவரது நன்மையை யொருசிறிதும் கருதாது, தன்னயமே பெரிதெனக் கருதி யுழலும் தீயோரது மொழிகளைச் செவிக்கொண்டு நடப்பரேல் அவர் என்றும் மீளமுடியாத துன்பக்கடலில் ஆழ்த்திவிடுவர்.

பரிதிகுலத் துதித்தோனாகிய தசரதனென்பான், இத்தகைய சிறந்த நீதியோடுகூடிய மன்னன் இவ்வுலகத்தில் வேறு யாரும் இல்லையென்று கூறுமாறு அரசாண்டு வந்தான். அவனுக்கு, கௌசலை, கைகேயி, சுமுத்திரை, யென்னும் மூன்று மனைவியர்களிடத்தும், ராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கனன் என்னும் நான்கு குமாரர்கள் பிறந்து சுக்லபக்ஷத்துச் சந்திரனைப்போல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்கள். உரியபருவம் வரப்பெற்றபின் சக்ரவர்த்தியானவன் திருமணம் செய்வித்தான். ஒருநாள் தசரதன் அத்தாணி மண்டபத்தின்கண் இருந்து "குலமுதற் றொன்மையும் கலையின் குப்பையும், பலமுதற்கேள்வியும் பயனுமெய்தினோர்" போன்ற மந்திரிகளையும், ஏனைய சிற்றரசர்களையும் நோக்கி, "துறப்பெனும் தெப்பத்தைத் துணையாகக் கொண்டு பெருங்கடல்போன்ற பிறவியை யொழிக்க முயல்கின்றேன். இனி என் மூத்தமகனான ராம

னுக்குத் திருமுடிசூட்ட வேண்டும்'' என்றனன். மதிவல்ல அமைச்சரும் ஆமென்று அரசர்க்கும் அந்தணர்க்கும் ஓலை போக்கி நகரெங்கும் அலங்கரிக்கவெனப் பறையறைவித்தனர். கேட்ட நகரமாந்த ரனைவரும் தத்த மக்களுக்கே திருமுடி சூட்டப்படுவதை யொத்த மகிழ்ச்சியினராய், இமையா நாட்டத்தவரும் தம்முலகோ வென்றையுறுமாறு சீர்பெற அலங் கரித்தனர்.

இஃதிங்ஙனமிருக்க, துன்னருங் கொடுமனக் கூனியான வள் கேகயன்ருேகை கோயிலை நண்ணி அமளியிற்றுயின்று கொண்டிருந்த கைகேயியை நோக்கி, "மடித்தவாயையும் தீப் பொறிபறக்கும் கண்ணையு முடையளாகி நங்காய்! இராகு கேதுக்கள் தன்னைத்தீண்ட வருங்காலத்தும் ஒளிகெடாதிருக் கும் சந்திரன்போலப் பேரிடர் பிணிக்க வருங்காலத்தும் மனவாட்டமின்றி உறங்குகின்றனையே" யென்றனள். கேட்ட கைகேசி கூனியை நோக்கி, "என் சிறுவர் நால்வரும் செல் வியராயும் அறந்திறம்பாதவராயு மிருக்க எனக்கு என் இடர் வரும்"என்றனள். கூனியானவள் "கைகேசி! தாடகை யெனும் பெயர்த் தையலாள்படக் கோடிய வரிசிலையிராமன் நாளைக்கே முடிசூடுவன்; நின்னலமெல்லாம் இன்ருேடு வீழ்ந் தது. நின் செல்வமும் கெட்டது. கோசலை தன் மதிவன் மையால் நன்மை பெற்றனள். நீ ஏமாந்து விட்டாய். இனிச் செல்வமெல்லாம் ராமனையே சேரும். பின் கோசலையே எல்லாச் செல்வத்திற்கு முரியவள். ஆதலால் நீ கோசலை க்கு அடங்கி நடத்தல் வேண்டும். நான் உனக்கு அடங்கி நடத்தல் வேண்டும். இத்தகைய வாழ்க்கையை நான் வேண் டேன்'' என்றனள்.

வாய்கயப்புற மந்தரை கூறிய சொற்களைக் கேட்ட கேகயற்கிறை திருமகள் கண்கள் சிவப்புறவெகுண்டு நோக்கி,

"வெயின்முறைக் குலக்கதிரவன் முதலிய மேலோர்
உயிர்முதற் பொருள் திறம்பினும் உரைதிறம்பாதோர்
மயின்முறைக் குலத்து ரிமையைமனுமுதல் மரபைச்
செயிருறப் புலச்சிந்தையால் என்சொனாய் தீயோய்"

என்று பலவாறு கூறியும் மந்தரை யகலாது நின்றனள். மந்தரைஇன்னம் இவளைவிட்டுவிடக்கூடாதென்றெண்ணி"கைகேசி!"அறம்நிரம்பிய அருளுடையஅருந்தவர்க்கேனும்,பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்" என்ற ஆன்றோர் மொழி மெய்யேயாம். உன்னைப் பலவாறு அவர்கள் தூன் புறுத்தாவிடினும், மனத்தால் இறலுறும்படி பலவிதமான இன்னல்களை யியற்றுவார். அன்றியும் ராமன் அரசானதலால் செல்வமெல்லாம் கோசலைக்கே யுரிமையாம். ஆயின பின் அவள் யாதேனும் ஒரு பொருளை மகிழ்ந்தீயினன்றி உனக்கென உரிய பொருள்கள் யாவையுள. வறுமைநோயால் பீடிக்கப்பட்டோர் யாவரேனும் நின்னிடத்து வரின் நீ யாது செய்வை? அவளிடம் சென்று யாசித்துக் கொண்டுவந்து ஈவையோ? அல்லது யாசிக்க வந்தவனுக்கு யாதுவிடை யளிப்பதென்று தெரியாது மயங்கி யிருப்பையோ? அன்றி,

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை"

என்று வள்ளுவர் கூறியாங்கு மாண்டுபோதியோ? என்று கூறினள்.

நிறைந்தபால் ஒருதுளி மோர்ப்பிறையினால்திரிந்து விடுவதுபோல் கைகேயியினது தூய சிந்தையும் திரிந்தது. கூனி கூறியது மிகப் பொருத்தமானதென் றெண்ணினவளாய் அவளை வியந்தனள். நீயே என் மனதிற்கிசைந்த தோழி

யென்று கொண்டாடினள். இவ்வளவு நன்மையையும் எனக்காகச்செய்த நீ, என்மகன் பரதன் முடிபெறும்படியும் புகலல் வேண்டு மென்றனள். கேட்ட கூனி இதுவே தக்க சமய மென்றெண்ணி, "கேகயன் மகளே! சம்பராசுர யுத்தத்தில் நீ பெற்ற வரங்களிரண்டும் இருக்கின்றனவல்லவா? அவற்றுள் ஒன்றினால் நின்மகனை பரதனுக்குப் பட்டம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள். மற்றொன்றினால் ராமன் பதினான்கு வருடம் காடுசெல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்" என்றனள். கைகேயி, அதுவே பொருத்தமானதென்றெண்ணிச் சக்கரவர்த்தியை நோக்கி "என்மகன் பரதனே பட்டம் பெறவேண்டும். ராமன் பதினான்கு வருடம் காடுசென்றுறைதல் வேண்டும்" என்றனள். ராமனையல்லாது வேறு உயிரில்லாத சக்கரவர்த்தி இடியேறுண்ட களிறுபோல வீழ்ந்தார். சிறிது நேரஞ்சென்றபின் ஒருவாறு தெளிந்து "கைகேயி! நின்மகன் பட்டம் பெறுவன். என்மகனான ராமன் காடுசெல்லாமலிருக்கச் செய்வாய்" என்றிரந்தான். கல்லொத்த நெஞ்சினளான கைகேயி சிறிதுமிரங்காது மறுத்தனள். ராமன் காடு சென்றான். கேட்ட மன்னன், அவனன்றி வேறுயிரில்லாதவனாதலின் விண்ணவர்க்கிறைவனாய் விளங்கினன். கௌசலை முதலியோரெல்லாரும் பேரிடருழந்தனர்.

தீயோர் தன்னயங்கருதிச் சமயத்திற்கேற்றவாறு கூறும் தன்மையராதலின் அவர் கூற்றின்படி நடத்தல் கூடாது.

---

22. ஈவது விலக்குவோர் இழிவினையடைவர்

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்" (குறள்)

ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்பவனது சுற்றத்தார் உடுக்கப்படுவதும் உண்ணப்படுவது மின்றிக் கெடுவர். (சுற்றத்தார் கெடுவரெனவே அவன் கேடு சொல்லாமலே பெறப்பட்டது)

பகுத்தறிவுடைய ஒருவன் வறியார்க்கு ஒன்றையும் தன்னாற் கொடுக்க இயலாவிடினும் பிறர் கொடுப்பதைத் தடுத்தல் கூடாது. "ஈவது விலக்கேல்" என்ற ஔவையார் கட்டுரையும் ஈண்டுக் கவனிக்கத் தகுந்தது. தானும் கொடாது பிறருக்குக் கொடுப்போரையும், கொடுக்கவிடாது தடை செய்பவன் இம்மையிற் பழியையும் மறுமையில் நரகத்தையும் அடைந்து பேரிடருழப்பன் என்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று.

இவ்வுலக முழுவதையும் ஒருகுடை நிழலின் கீழிருத்தியாண்ட மகாபலிச் சக்கிரவர்த்தியானவன், செய்தவர் வானவரும் செயலாற்றாத வேள்விகளையெல்லாம் செய்து, வானத்தையும் வையத்தையும் அந்தணர்களுக்குத் தானம் பண்ணிவிடுவதாக நிச்சயித்தான். இதையறிந்த வானவர், அதர்மம் மேலிட்டுத் தருமங் குறைந்துபோங் காலங்களி லெல்லாம் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனத்திற்காகத் திருவவதாரஞ் செய்கின்ற எம்பெருமானை மாயனை வணங்கி, மகாபலியின் நீதியல்லாத செய்தியை விண்ணப்பித்தனர். அடியவர்க் கெளியனான எம்பெருமான் அபயந் தந்து தீத்தொழிலைத் தீர்த்தும் என்றருளினராய், காசிய

பருக்கு அதிதியினிடம் மகவாய்ப் பிறந்து ஆலமர்வித்தின் அருங்குறளாய் விளங்கினர். ஒருநாள்,

"முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்ப தொர்நாவன் அனற்படு கையன்
அற்புதன் அற்புதரே யறியுந் தன்
சிற்பத மொப்பதொர் மெய்க்கொடு" சென்று

மகாபலிச் சக்கிரவர்த்தியின் மண்டபத்தை யடைந்தார்.

மண்டபத்திருந்த மகாபலியானவன் யாரோ ஒரு அந்தணர் வந்திருக்கிறுரென்றெண்ணி எதிர்சென்று வணங்கி, கால்கழுவத் தண்ணீர் முதலியன கொடுத்து ஆசனத்தின் கண் இருக்கச்செய்து முகமன்கூறி, தேவரீர் ஈண்டு எழுந்தருளினமையின் என் இல்லம் தூய்மை யடைந்தது; யானும் தூய்மையனுனேன், அடியேன் செய்யவேண்டிய காரியங்களைப் பணித்தருள வேண்டுமென்று இரந்து நின்றனன். இதுவே தக்க சமயமென்றறிந்த திருமால் மகாபலியை நோக்கி, "வள்ளலே! மூவடி மண்ணருளல் வேண்டு" மென்றனர். மகாபலி இப்பொழுதே மனமுவந்து தந்தனன் என்முன். அருகிருந்து கேட்டுக் கொண்டிருந்த மந்திரியான வெள்ளி தடுத்து,

"கண்ட திறத்திது கைதவ மைய
கொண்ட னிறக்குற ளென்பது கொள்ளேல்
அண்டமு முற்று மகண்டமு மேனுள்
உண்டவ னிதுணர்ந்து கொள்" என்முன்.

மகாபலி மனமகிழ்ந்து வெள்ளியே! நான் வானத்தையும் வையத்தையும் அந்தணர்க்கே வழங்குவதென்று நிச்சயித்தேன். இப்பொழுது உலகமுண்டவனுன முகுந்தனே அந்

தணுகவந்து அவன் கை கீழ்ப்படவும் என்கை மேற்படவும் நின்று இரப்பனேல் இதைக்காட்டிலும் நான் பெறவேண்டிய பயன் யாதுளதென்று கூறினன். அன்றியும்,

" எடுத் தொருவருக் கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கிதழகோ தகைவில் வெள்ளி !
கொடுப்பது விலக்கு கொடியோய் உனதுசுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவு மின்றி விடுகின்றாய் "

என்று பலவாறு கோபித்து ஈதலின் ஏற்றத்தையும் இரத்தலின் இழிவையும் கொடுப்பதைத் தடுத்தலால் வரும் பாவத்தையும் எடுத்துக் கூறினன்.

இஃதிங்ஙனமிருக்க, வாமனன் ஈகுவாயென்னச் சக்கிரவர்த்தி கமண்டலத்தை யெடுத்து மந்திரம் கூறித் தண்ணீரைக் குறியவன்கையில் வார்க்கப்போகும்போது, சுக்ராசாரியர் நீர்வெளியேறுவண்ணம் உட்புகுந்து கமண்டலத்தின் தூம்பை யடைத்துக்கொண்டனர். இவ்வஞ்சகத்தைத் தெரிந்த வாமனன் தன் கையிலிருந்த குசப்புல்லால், அக்கமண்டலத்தின் துளையை நேர்செய்பவன்போல் குத்த, அது அவர் கண்ணில் பட அன்றுமுதல் ஓர் கண் குருடாக ஆயினர்.

தம்மால் ஈய இயலாவிடினும் ஈவதைத் தடுத்தல் கூடாது. தடுப்பின் சுக்ராசாரியர் கண்ணிழந்து வருந்தியதைப்போல் பெருந் தீங்கெய்த நேரும்.

---

23 பேராசைப்படல் பெருந்துயர் விளைக்கும்

" ஈட்ட மிவறி யிசைவேண்டா ஆடவர்
தோற்ற நிலக்குப் பொறை" (குறள்)

யாம் பிறரைக் காட்டிலும் மிக ஈட்டுதும் என்று பொருள் ஈட்டலை யே மிகவிரும்பி அதன்பயனாகிய புகழை விரும்பாத மக்களது பிறப்பு நிலத்திற்குப் பாரமா மத்துணையே.

அறவழியாலேயே பொருளீட்டவேண்டு மென்பதை மறந்து, ஏனையோரினும் தான் பெருஞ்செல்வ முடையவனாதல் வேண்டும் என்னும் ஆசை, அறிவை மறைத்தலால், நியாயமல்லாத வழியால் பொருள்தேடியும், பிறர்க்குரியனவற்றை அபகரித்தும் வாழ வெண்ணுவனேல், அவன் அறக்கடவுளின் வெகுளிக்கிலக்காய் அழிவெய்துவன் என்பது ஒருதலை. ஆசை அறிவை மறைக்காமற் காப்போர்க்கே அறம், மறம் இவற்றைப் பகுத்தறியும் வன்மையுண்டாம். ஆதலின் பேராசையென்கிற பெருந்தொடக்கினுள் அகப்படாது பெற்றன அமையுமென்று மகிழ்வெய்தி வாழ்தலே பேரானந்தத்தை விளைப்பதாம்.

சந்திரவம்சத்தில் வியாசருடைய திருவருளால் பிறந்த திருதராஷ்டிரன் என்பானுக்குத் துரியோதனன் முதலிய நூற்றுவரும், பாண்டுவிற்கு தருமன் முதலிய ஐவரும் பிறந்து ராஜ்யத்தை நீதிதவறாது ஆண்டு வந்தனர். இவர்களுள் பாண்டவர் கல்வி, அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குவதோடு, வில்வித்தை, யானை யேற்றம், குதிரை யேற்றம், முதலியவற்றினும் கண்டோர் மெச்சும்படி திகழ்ந்தனர். இது கண்ட துரியோதனன் இவர்களை விட்டுவிடுவோமானால் ராஜ்

பத்தைப்பெற்று ஆளுந்தன்மையராய் ஆய்விடுவர். ஆன பின் நியாயப்படி அவர்களுக்கு நாம் பாதி ராஜ்யம் கொடுக்க நேருமே யென்றெண்ணித் தன் தந்தையான திருதராஷ்டிர னிடம் கூறினன்.

முன்னமேயே மனங்கோணியிருந்த திருதராஷ்டிரன் மந்திரிகளுடன் பலவாறு யோசித்து, உத்தம மந்திரிகளுடைய சொற்களைக் கேளாது பாண்டவர்களை அரக்குமாளிகையின் கண் தங்கச்செய்து தீயிடுவித்தான். அதன் சூழ்ச்சியை முன்னமேயே தெரிந்துகொண்டிருந்த பாண்டவர் அதினின் றும் தப்பிப்பிழைத்து, அந்தணராய்ச் சென்று, திரௌ பதியை மணந்து, இந்திரப்பிரஸ்தத்தின்கண் வந்து, பல அரசர்களையெல்லாம் வென்று ராஜசூயம் என்னும் யாகத்தை முடித்து மன்னர்க்கு மன்னராம் பெருமைபெற்று, முன்னி லும் பதின்மடங்கு புகழோடு விளங்கினர். இவற்றை யெல் லாம் கண்ட துரியோதனனுக்கு முன்னிலும் அதிகமாக மனங் கொதிக்கலாயிற்று. உடனே கர்ணன் சகுனி முதலி யோரை யெல்லாம் அழைத்து இப்பாண்டவரை இனி யெவ் வகையிலேனும் வென்றுவிடல் வேண்டும்; வெல்லுதற்கேற்ற வழி யாதென்றனன். சகுனி சூதாட்டத்தால் வெல்லுதலே தக்கதென்றான். அதுவே ஏற்ற உபாயமென்றறிந்த துரி யோதனன், தேவருங்கண்டு வியக்கும்படியான ஒரு மண்டப மியற்றுவித்து, அதைக் காணவரும்படி பாண்டவர்களுக்கு ஓலை போக்கினன். பாண்டவர்களும் வந்து மண்டபத்தின் வனப்பையெல்லாம் கண்டு இருந்துழி, சகுனியானவன் மிக வற்புறுத்தித் தருமனைச் சூதாடச்செய்து, வஞ்சனையால் அவன் பொருளையெல்லாம் கவர்ந்துகொண்டு, ஐவரையும் திரௌபதியையும் வனத்திற்கு அனுப்பிவிட்டனன்.

அவர்கள் அறுவரும் காடுசென்று வருந்தித் திரிந்து கடக்கவேண்டிய நாட்களெல்லாம் கடந்தபின், தங்கள் நாட்டிற்கு வந்து, ஓர் பாலிருந்துகொண்டு உலூகனைத் தூதனுப்பி நாடு கேட்டனர். பேராசை கொண்ட துரியோதனன் முதலியோர் நாடுகொடுக்க முடியாதென்று கூறி, சஞ்சயனைத் தூதனுப்பி, இவ்வுலகத்தின் அநித்யத்தையும் வீட்டுலகின் நித்யத்தையும் எடுத்துரைத்து அதைப் பெறுமாறு கூறச்செய்து,காடுசென்று தவம்புரிதலே நலமென்றும் நாட்டின்கண் ஆசை வைக்கவேண்டாமென்றும் தெரிவிக்கச் செய்தனர். தருமர் பலவாறு தாழ்ந்து கேட்டும் துரியோதனன் நாடுகொடுக்க இசையாமையால் போர்தொடங்கச் செய்தனர். பேராசைகொண்ட துரியோதனன், அவன் ஆசையோடும் உறவினரோடும் போரில் மடிந்தனன்.

மன்னர் மன்னராயினும் அளவுக்கு மிஞ்சி ஆசைவைப்பரேல் முன்னுள்ளவற்றையு மிழந்து தவிப்பர்.

---

24. வேந்தரைப் பகைத்தல் சாந்துயர்விளைக்கும்

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள்)

தான் முறைசெய்து, பிறர் நலியாமற் காத்தலையும் செய்யும் அரசன், பிறப்பான் மகனேயாயினும் செயலான் மக்கட்குக் கடவுளென்று வைக்கப்படும்.

"திருவுடை மன்னரைக்காணில், திருமாலைக்கண்டேனேயென்னும்" என்றபடி ஆஸ்திகர்களெல்லோரும் மன்னனைத் திருமாலாகக்கொண்டொழுகும் மாண்பினரென்பதுஉலகை

மறிந்ததொன்றும். "சக்கர நெறிநில்" என்று பணித்தார் பெரியாரும். ஆதலால் மேற்கூறியாங்கு மன்னனைத் திருமாலாகக்கொண்டு அவனது ஆணைகளே நீதிநெறியாமென்றெண்ணி அவற்றின்படி நடவாமலும் அவனை மதியாமலும் ஒருவன் இருப்பனாகில், அவன் தன் பொருள்களையெல்லாமிழந்து அரசனது வெகுளிக்கிலக்காய்ப் பெருந்துன்பமுற்று வருந்துவன். கடவுளுடைய ஆணையைக் கடந்து நடப்போர் மறுமையில் இருளுலகத்தை யடைந்து, செய்யும் வகையறியாது தவிப்பர். அரசனது ஆணையை மீறிநடப்போர் இம்மையிலேயே அரச தண்டத்திற்குள்ளாய் வருந்துவர். "அரசன் அன்றுகேட்பான், தெய்வம் நின்றுகேட்கும்" என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்தும்.

முன்னொரு காலத்தில் பரசுராமன் தன் தந்தையான ஜமதக்னி முனிவருக்கு, ஓராயிரமுயர்தோளுடைய கார்த்தவீரியார்ஜுனன் என்பான் தீங்கிழைக்க, அதனால் வெகுண்டு, "க்ஷத்திரியகுலத்தை வேரறுத்து அக்குருதி வெள்ளத்தே என் தந்தையின் பிதிர்க்கடனை முடிப்பேன்" என்று உறுதிகொண்டு நீதிநெறி தவறாது அரசாண்ட தசரதனையும் அவன் மக்கள் நால்வரையுமன்றி மற்றைய மன்னரையெல்லாம் தொலைத்தும் தான் கருதிய எண்ணம் முற்றிலும் கடைபோகாமையின் ஒரு மலையின்கணிருந்து தவம்புரிந்து கொண்டிருந்தான். அவ்வமயம் சக்கரவர்த்தித் திருமகன் மிதிலையில் வில்லிறுத்த ஓசையைச் செவியுற்று, அவர்கள் திருமணம் முடித்துக்கொண்டு இவ்வழியே வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான்.

சக்கரவர்த்தித் திருமகன் சகல வைபவங்களோடும் திருமணம் முடித்துக்கொண்டு திரும்பித் தன்னகர் நோக்கி வந்து

கொண்டிருந்தனன். கண்ட பரசுராமன், பொன்போல மிளிரும் சடையோடும், தீப்பொறி பறக்கும் கண்களோடும், தேவர்களெல்லாம் யுகமுடிவோவென்று திகைத்து நிற்கவும், இருசுடரும் இனி என்னிகழுமோ வென்று நடுங்கவும் வந்து வழியின் கண்நின்றனன். சக்கரவர்த்தி கண்டு யாரோவென நடுங்கினன். அவ்வளவில் பரசுராமன், ராமனெதிரிற்சென்று "ராமா! நீ முன்னரே இற்றவில்லை இறுத்தது வெற்றியன்று; யான் வைத்திருக்கும் இவ்வில்லை வளைக்க வேண்டும்; அல்லது போருக்கு வரல்வேண்டும்" என்று கூறினன். தசரதன் யாதாகுமோவென்று பயந்து "பிராமணோத்தம! எனதுயிரும் இவனும் உனதபய"மென்று கூறி வணங்கி நின்றனன். பரசுராமன், அடியில் விழுந்து வணங்கி யிரப்பதையும் பொருட்படுத்தாது இருசார்ங்கத்தின் வரலாற்றையும் கூறி, உம்பால் வழிப்பகை யுடையது,

"மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை யெல்லாம்
மேவெழு மழுவின் வாயால் வேரறக் களைகட் டன்னார்
தூவெழு குருதி வெள்ளத் துறையிடை முறையி னெந்தைக்
காவன கடன்கள் நேர்ந்தேன்"

ஆதலால் இனி யுன்னோடு போர் தொடங்குவேன் என்றனன்.

தன் தந்தையிரங்கிக் கேட்டதையும் அந்தணன் மறுமொழி கூறியதையும் கேட்டுக் கொண்டிருந்த ராமன், வேறொன்றும் கூறாது, வில்லைத் தருகவென வாங்கி ஒரு நொடியில் வளைத்து, பரசுராமனை நோக்கி, வேதவித்தாய மேலோன் மைந்த! நீ இப்பூவுலகத்தின் பாலுள்ள அரசரை யெல்லாம் தொலைத்தனையாயினும், நின்னைக்கோறல் எற்கறமன்று; நான் வில்லை வளைத்து நாணேற்றியபின் அது பயனின்றிக் கழியவும் கூடாது. ஆதலின், அதற்கு ஓர்

இடம் - புதுப்பாளையம்

இலக்கம் வேண்டுமென்றனன். முனிமகன், நான் செய்த தவம் யாவற்றையும் சிதைத்துப் போக விடுப்பாய் என்றனன். ராமனும் அம்பையெய்ய அது அவ்வாறே செய்து சென்றது. தவமுழுது மிழந்த பரசுராமன் வறியனாய்ச் சென்று தன்னிடஞ் சேர்ந்தனன்.

மன்னரோடு பகை கொள்ளின் அவரது தண்டனைக்குள்ளாய் வருந்துவர்.

---

25. அழுக்காறுடையார் அவமதிப்படைவர்

" அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான் " (குறள்)

மறுமைக்கும் இம்மைக்கும் காரணமாகிய அறமும் செல்வமும் வேண்டாதவனே பிறருடைய கல்வி செல்வங்களைக் கண்டவிடத்தே மகிழாது அழுக்காற்றைச் செய்வான்.

அழுக்காறென்பது ஒரு சொல். அழுக்காறு என்பது பிறர் செல்வங் கண்டவிடத்துப் பொறாமை யடைதல். அழுக்காறு பகைவராவார் செய்யும் துன்பங்களினும் மிகுதியான துன்பத்தைச் செய்யும். எனவே இம்மையிற் பழியையும் மறுமையிற் பாவத்தையும் பயக்கும் என்பதாயிற்று. அழுக்காறுடையான் பேரிடருழந்து செல்வமின்றித் தவிப்பன் என்பதை,

" அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்"

என்னும் குறளால் நன்கறியலாம். அழுக்காறுடையார்க்குக் கேடுசெய்ய வேறு பகைவர் வேண்டா. அதுவே அமையும்.

ஆதலால் ஒவ்வொருவரும் அழுக்காறில்லாதிருத்தலைத் தமக்குரிய ஒழுக்கமாகக் கொள்ளவேண்டும்.

கல்வியிற் சிறந்தவரான கம்பரென்பவர் இளமையிலேயே பெற்றோர்களை யிழக்க நேர்ந்தமையின், தேரழுந்தூரென்று வழங்கும் திருவழுந்தூரில், ஓர் ஓச்சன் எடுத்து வளர்க்க வளர்ந்து வந்தார். சின்னாட் சென்றபின், அவ்வூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்று, அவர் மக்கட்குப் பள்ளிக்கூடத்திற்குப் புத்தக மெடுத்துக்கொண்டுபோய்க் கொடுக்கும் தொழிலி லமர்ந்தார். இவரும் அவர்களோடு கற்கவேண்டியவற்றை யெல்லாம் நன்கு கற்றுக்கொண்டு, பின் பெரிய வித்வானாய் விளங்கினார். இவருடைய கல்வித் திறத்தைக்கண்டு மெச்சிய சோழன் தன் ஆஸ்தான கவிச் சக்கிரவர்த்தியாக வைத்துக்கொண்டான்.

ஒருநாள் மாலைப்போதில் இலவந்திகைச் சோலையின்கண் கம்பரும் சோழனும் உலாவிக்கொண்டிருந்தனர். இருவரும் நெடுநேரம்வரை உரையாடிக் கொண்டிருக்கையில் கம்பர் கூறிய உரையால் மனம்வருந்திச் சோழன் தன்னுடைய நாட்டின்கண் இருத்தல் கூடாதென்று கம்பரை நீக்கிவிட்டான். கம்பரும் அவனளித்த வரிசைகளை யெல்லாம் அவன் முன்னிலையிலேயே வைத்துவிட்டுச்சேரநாடுசெல்வோமென்று எண்ணி வழியில் நேர்ந்த துன்பங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டு சென்றார். ஆண்டு வேறொருவருக்கும் இன்னாரென்று தெரிந்துகொள்ள இயலாதபடி, சேரனிடத்தில் அடைப்பைத் தொழிலில் அமர்ந்திருக்க வேண்டுமென்றெண்ணினராய்ச் சேரனிடஞ் சென்று "யான் கம்பரிடத்தில் அடைப்பைக்காரனாக இருந்தேன்; சோழனுக்கும் அவருக்கும் பூசல் நேர்ந்தமையின் அவர் யாண்டுச் சென்றாரோ வறி

யேன்; ஆதலால் நான் இங்கு வந்தேன். என்னைத் தாங்கள் ஒரு வேலையில் அமர்த்தினால் உண்மையோடும் உள்ளன்போடும் வேலைசெய்வேன் " என்று கூறினர். அரசனும் கம்பரிடத் திருந்தவன் என்னும் விசுவாசத்தால் தன்னிடத்திலும் அடைப்பைத்தொழில் செய்துவரும்படி வைத்துக்கொண்டான்.

ஒருநாள் ஆசு, மதுரம், வித்தாரம் முதலிய கவிகள் புடைசூழவும், அமைச்சர்களெல்லாம் ஓர்பால் குழுமியிருக்கவும் ஓலக்கத்தின்கணிருந்த மன்னன், வித்வான்களை நோக்கி, கம்பராமாயணத்தில் ஓர் செய்யுளியம்பிப் பொருளுரைப்பீராக வென்றனன். வித்வான்கள் கம்பராமாயணத்தில் பாலகாண்டத்தில் வேள்விப்படலத்திலிருந்து " எண்ணுதற்காக் கரிதிரண்டு மூன்றுநாள் " என்னுஞ் செய்யுளை யியம்பிச் சந்தர்ப்பங் கூறிப் பொருளுமுரைத்தனர். அவையிலுள்ளாரெல்லாரும் வித்வான்கள் செய்த பிரசங்கத்தை மெச்சிக் கொண்டாடினர். அடைப்பைக்காரன் மட்டும் மகிழ்ச்சி காட்டாதிருந்தனன். அரசன் அடைப்பைக்காரனை நோக்கி, எல்லாரும் பிரசங்கத்தைக்கேட்டு மகிழ்ந்திருக்க நீ மட்டும் மாறுபட்டிருப்பானேன் என்ன, அடைப்பைக்காரன் அரசே ! இவ்வித்வான்கள் கூறிய பொருள் கம்பருடைய கருத்தை முழுதும் தழுவியிருக்கவில்லை யென்றனன். ஆனால் நீ அக் கம்பருடைய கருத்தின்படி யியம்பவல்லையோ என்று மன்னன் வினவ, அடைப்பைக்காரன் சிறிது வல்லேன் என்றனன். ஆயின் கூறுக வென்ன அடைப்பைக்காரன் அவ்வித்வான்கள் கூறியபொருளைக்காட்டிலும் விசேஷமான பொருள்களையெடுத்துக்கூறி, பிள்ளைக்கும் பேதைக்கும் விளங்கப் பொருளுரைத்தலே சிறப்பென்றும் கூறினன். பிரசங்கத்தைக்

கேட்டுக்கொண்டிருந்த அரசன் மெச்சி, அவனுக்கு வேண்டிய வரிசைகளையெல்லாம் தந்து, தன் சமஸ்தான வித்வானாக இருக்கும்படி செய்து, மற்றைய வித்வான்களினும் இவனிடத்துப் பேரன்பு காட்டி வந்தனன்.

இது கண்ட ஏனைய பாவலர்கள் இவன்மீது பொறாமை கொண்டு, இனி இவனைத் துரத்தினாலொழிய நமக்கு மதிப்பு ஏற்படாதென்றெண்ணிப் பலவாறு யோசனை செய்து, அம்பட்டனைக்கொண்டு தன்னினத்தான் என்று சொல்லும்படி செய்தால், அரசன் வெறுப்புக்கொண்டு நீக்கிவிடுவான் என்று தீர்மானித்து, அம்பட்டனையழைத்து, மிகுதியான பொருள் தருவதாகச்சொல்லிச் சிறிது முற்பணமும் கையிற்கொடுத்து, அரசன் முன்னிலையில் அடைப்பைக்காரனை உன்னினத்தைச் சேர்ந்தவன் என்று நீ செய்துவிடல் வேண்டுமென்றனர். கைமேற் கருந்தனங்கண்ட அம்பட்டன் அவ்வாறே செய்ய உடன்பட்டு, மறுநாள் அரசன் கொலுமண்டபத்தின் வாயிலில் அடைப்பைக்காரன் நின்றுகொண் டிருக்கும்பொழுது, அவனை அண்ணாவென்று கட்டித்தழுவினன். அடைப்பைக்காரனாகிய கம்பர் இது பாவலர் சூழ்ச்சியால் நேர்ந்ததென்றுன்னி, தம்பியென்று தழுவிக்கொண்டனர். பின் இருவரும் க்ஷேமச்செய்தி விசாரித்துக்கொண்டு வீடு சென்றனர். இதைப்பார்த்துக் கொண்டிருந்த அரசன் அம்பட்டனை நம்மோடு சரியாசனத்திருக்கச் செய்தோமே யென்று பலவாறு வருந்திக் கொண்டிருந்தனன்.

வீடுசென்ற அம்பட்டனும் கம்பரும் நெடுநேரம் பேசியிருந்தனர். பின்னர்க் கம்பர் தம்பீ! நீ இருபது வருஷகாலமாக அரசற்கு ஊழியஞ் செய்ததுபோல் யானும் செய்ய வேண்டுமே யென்றனர். அம்பட்டனும் சம்மதித்தான்.

பிறகு கம்பர் தம்பி! நீ ஒப்புக்கொண்டனை மெய்யே. அரசனிடம்வந்து இவன் என் அண்ணன்தான்; இவன் இனித் தங்களுக்கு வேலை செய்வான் என்று சொல்லிவிட்டுப் பிறகு நீ வீட்டிற்குச் செல் என்றனர். அம்பட்டனும் ஆமென்று சம்மதிக்க, இருவரும் அரசனிடஞ்சென்று வந்த வரலாற்றைக் கூறினர். மன்னன் மறுமொழி யொன்றும் கூறாது மதிமயங்கி யிருந்தனன். இதுவே சமயமென்றறிந்த கம்பர் கலைமகளை நினைந்து ஓர் சிலம்பைப் பெற்று அரசன் முன்னிலையில் வைத்தனர். அரசன் இது இரவியோ மின்னலோவென மயங்கி இதேதென்னக் கம்பர், "அரசே! இவன் தந்தையும் என் தந்தையும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள். எங்கள் முன்னோர்கள் தங்களைப் போன்ற மன்னர்களிடத்தில் ஊழியஞ்செய்துபெற்ற இதை ஆளுக்கொன்றாக வெடுத்துக் கொண்டோம். இது எங்களிடமிருப்பதால் பயனென்ன. இது போன்ற சிலம்பொன்று இவனிடமுமிருக்கின்றது. அதையும் பெற்றுக்கொள்க" வென்றனர். அரசன் அம்பட்டனை நோக்கி உன்னிடமுள்ள சிலம்பையும் தருகவென்ன அம்பட்டன் இல்லை யென்றான். உடனே கம்பர் அரசே! இவன் சிறுவயது முதலே கையழுத்தக்காரன்; மயிலே ஓர் இறகுதாவென்றால் தருமா? அதுபோல் இவனைத் தண்டித்தாலல்லாமல் தரான் என்றனர். உடனே அரசன் உத்தரவுப்படி ஏவலாளர் அம்பட்டனை யிறுகக்கட்டிப் புடைத்தனர். அடி பொறுக்கமாட்டாத அம்பட்டன் உண்மையை யுரைத்தனன். அரசன் பாவலர்மீது வெகுண்டு கடுந்தண்டனை விதித்தான், பாவலர்கள் நடுங்கி, தம் மனைவியரைக் கம்பரிடஞ்சென்று தாலிப்பிச்சை கேட்கச்செய்து உயிர்தப்பினர்.

அழுக்காறு கொள்ளல் தானே இறக்கும்படியான கடுந்துன்பத்தை விளைவிக்கும்.

---

26. பிறர்பொருள் வெளவல் பிறப்பினை யிழிக்கும்

" களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும் " (குறள்)

பிறர் பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை, அப்பொழுது இனிது போலத்தோன்றி, தான் பயன் கொடுக்கும் பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்.

பிறர் உடைமையாயிருப்பதி யாதொன்றனையும் வஞ்சித்துக் கொள்ளல் ஆகாது. பழிக்கு அஞ்சாது, பிறர்பொருளை அறஞ்செய்வதற்காகவேனும்ஒருவன்வெளவுவானாயின், அறம், பொருளுடையார்மேலும் பாவம் தன்மேலுமாய் நின்று கேடு பயக்கும். கடமையைச் செய்யவேண்டுமாயின் இரந்தாயினும், கடன் வாங்கியாயினும் செய்தல்வேண்டும். இன்றேல் திருடியாயினும் செய்தல் வேண்டுமென்பர் ஒருசாரார். புண்ய பாவமும், கடவுளும், நன்மைதீமைகளும், சொர்க்க நரகமும் இன்றென்று கூறும் நாஸ்திகரே யிங்ஙனம் கூறுவர். இம்மை மறுமை நல்வினை தீவினைகளை யுண்டென்று நம்பும் நம்போன்றவர்கள்இத்தகைய தீச்செய்கைகளைச் செய்யக் கனவிலும் கருதார். எத்தகைய பெருமை வாய்ந்தவராயினும், களவு என்னும் கடுந்தொழிலுக் குடன்படுவரேல் மிகவும் தாழ்மையை யடைவர்.

முன்னொரு காலத்தில் அனலன், அனிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூஷனன், பிரபாசன் என்னும் வசுக்கள் எண்மரில் ஒருவனான பிரபாசனென்பவன் " குணமென்னும் குன்றேறி நின்றார்வெகுளி, கணமேயும் காத்தலரிது" என்பதனைக் கனவிலும் கருதாது, பிடிவாதக்

காரியான தன்மனைவியின் வேண்டுகோளுக்கிணங்கி, சப்த ரிஷிகளி லொருவரான வசிட்ட முனிவரின் காமதேனுவைக் கவர நினைத்தனன். மற்றைய எழுவரும் முனிவர் சபிப்பரென் றஞ்சித் தடுத்துக் கூறினர். பிரபாசன்மட்டும் அவசியம் கவர்ந்துகொண்டு செல்லல் வேண்டுமென்று கூறினன். இவர் களுள் ஒருவன் செய்யும் காரியத்திற்கு மற்றவர்களும் உடன் பட்டிருப்பது வழக்கம். ஆதலால் பிரபாசன் கவரச்சென்ற வுடன் மற்றைய எழுவரும் உடனின்று காமதேனுவைக் கவர்ந்து சென்றனர்.

அருந்தவமுனிவர் காலையிலெழுந்திருந்து பார்த்தார். காமதேனுவைக் காணேம். ஞானதிருஷ்டியால் பார்த்தார். வசுக்களே கவர்ந்து சென்றனரென்று தெரிந்தது. பெரிதுங் கோபங்கொண்டு மண்ணிடைச் செல்லக் கடவர் என்று சபித் தார். சாபம்பெற்ற வசுக்கள் முனிவரிடஞ்சென்று வணங்கி, பொறுத்தருளிச் சாபவிடை செய்தல்வேண்டுமென்றிரந்து நின்றனர். முனிவர் நீர்கிழியவெய்த வடுப்போலச் சினம் மாறி, அருள்கூர்ந்து வசுக்களை நோக்கி, நும்முள் இச்செய லைச் செய்தவனான பிரபாசன்மட்டும் இவ்வுலகில் நெடுநா ளிருந்து, பிரமசரிய விரதத்தையே இறக்குமளவும் கைக் கொண்டு, தன் தந்தையினருளால் ஸ்வச்சந்த மரணசக்தி யைப்பெற்றுப் பின் பேரின்பமடைவன். அவன் செய்கைக் குடன்பட்டிருந்த ஏனைய எழுவரும் பூவிடைச்சென்று பிறந்து, பிறந்த அன்றைக்கே அவரவர்கள் பதவியைப்பெறுக வென்றும் சாபவிடைசெய்தனர்.

இதுகேட்ட எண்மரும், பூமியை நோக்கி வந்துகொண் டிருந்த கங்கையைநோக்கி, தங்களுக்குற்ற சாபத்தைக்கூறி, எங்களை நீ மக்களாகக்கோடல் வேண்டுமென்றனர். அவ

ளும் உடன்பட்டுச் சத்யவதியென்னும் பெயரோடு வந்து சந்திர வம்சத்துதித்த சந்தனு மன்னனை மணந்தாள். சிலநாட் சென்றபின் ஓர் ஆண்மகவுபிறந்தது. உடனே அதைக் கங்கையிலெறிந்துவிட்டாள். அரசன் முன் ஏற்பட்டுள்ள உடன்படிக்கைக்குப் பயந்து ஒன்றும் கூறாதிருந்தான். இவ்வாறே ஏழு குழந்தைகளைக் கங்கையிலெறியப் பார்த்துக் கொண்டிருந்த அரசன் பலவாறு வருத்தமுற்று ஒன்றும் கூற இயலாதவனாய் அரண்மனைக்குள்ளேயே இருந்து வந்தான். எட்டாவதாக ஓர் மகவு பிறந்தது. கேட்ட அரசன், இதையும் கொன்று விடுவாளோவென்று பயந்து, நாயகி! இக்குழந்தையைக் கொல்லாதே. நம்மரபிற்கு இவ்வொரு குமரனேனும் உயிர் வாழ்ந்திருக்கட்டும் என்றனன். அரசி அரசனைநோக்கி, நீர் காட்டில் செய்த உடன்படிக்கை தவறிவிட்டது, இனி நானிங்கு இரேன் என்று கூறி, எட்டாவது குமரனையும் உரிய பருவம் வந்தபின்ன ரனுப்புவதாகச் சொல்லி அழைத்துச் சென்றனள். இவனே வீடுமன் என்னும் பெயர்பெற்று ஆண்மையிற் சிறந்தவனாய் விளங்கி நெடுங்காலமிருந்து, பின் தன் பதவியைப் பெற்றனன்.

பிறர் பொருளை வெளவல் தீராத இடர் விளைக்கும்.

---

27. தெளியாதுரைத்தல் தீங்கினை விளைக்கும்

" கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு " (குறள்)

தவம் ஒருயிரையும் கொல்லாமலிருத்தலாகிய அறத்தின் கண்ணதானாற்போல, சால்பு பிறருடைய குற்றத்தைச் சொல்லாமலிருத்தலாகிய குணத்தின் கண்ணதாம்.

சான்றோராயினோர், பிறரிடத்துக் குற்றமுளவாயினும், இன்றியமையாத சமயம் நேர்ந்தவிடத்தன்றிக் கூறார். அங்ஙனமிருக்க, பிறரிடத்துக் குற்றமில்லாதிருக்கவும், யாதேனுமோர் காரணத்தையுன்னி அவரிடத்து வீண்பழிகூறுவரேல், இல்லாது கூறிய பாவத்திற்காகத் தங்களிடத்துள்ள செல்வத்தையிழந்து, இம்மையிற் பழியையும் மறுமையிற் பாவத்தையும் பெற்று வருந்துவர். சிலர் வறுமையாலோ அல்லது வேறு காரணத்தாலே பொய்க்கரிகூறவும் முன் வருகின்றனர். இப்பொழுது நன்மை வருவதுபோலத் தோன்றினும் பின் கேடு விளைக்குமென்பதை யறியார்போலும்.

ஒருநாள் தேவேந்திரன் வானுலகத்தின்கண், அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலிய தேவமாதர்கள் வெண்கொற்றக்குடை, சாமரை முதலியவற்றைத்தாங்கி நிற்கப் பெருமகிழ்வோடு கொலு வீற்றிருந்தனன். அப்பொழுது அருந்தவம் புரிந்துயர்ந்த ரிஷீச்வரர்களான ஜனகர், ஜமதக்நி, அத்திரி முதலியவர்களெல்லாம் இந்திரனிருக்கையை யடைந்தனர். கண்ட மகவான் தன்னிருக்கை விட்டெழுந்து சென்று வரவேற்று முகமன்கூறி, "நீங்கள் ஈண்டுவர யான் எத்தவஞ் செய்தேனோ" வென்றுரைத்து உயரிய ஆசனங்களிலிருக்கச் செய்து தானும் இருந்தனன்.

இருந்துழி மகவான் மகரிஷிகளை நோக்கி,

" பாய்மைக் கலோலக் கடல்சூழ்புவி பார்த்தி பர்க்குள்
தீமைக்கும் வேகச் சிலுகுக்கும் இடங்கொடாது
வாய்மைக்கும் நன்னூல் வளனுக்கும் மனத்திலுற்ற
தூய்மைக்கும் மிக்கார் தமையாய்ந்துளிர் சொன்மின்" என்றான்.

கேட்ட ரிஷிகளெல்லாரும் ஆராய்ந்து கொண்டிருக்குமளவில் வசிட்டர் இந்திரனை நோக்கி,

"பாருக் கொருவன் பரதார சகோதரன் வெம்
போருக் கொருவன் புகழுக்கும் மறைப் பொருட்கும்
நேருக்கும் வீடாம் மனுநூல் நெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கும் மிக்கான் அரிச்சந் திரன் ஆகும்"

என்று கூறினர். கேட்டுக் கொண்டிருந்த கோசிகர், வசிட்டர் கூறியதைப் பொய்யாக்க வேண்டுமென்ற ஓரே எண்ணத்தோடு, பின்வரும் தீமையை ஒரு சிறிதும் ஆராயாது, இவ் வசிட்டர் கூறிய அரிச்சந்திரனென்னும் ஏந்தல், வெய்யவன்; கொலையையே குலத்தொழிலெனக் கொண்டவன்; பிறர் மனை விழைதலையே பீடென நினைப்பவன்; பொய்யுரைத்தலே புகழென்றெண்ணுவோன்; பொறையென்பது ஒரு சிறிதுமில்லாத புல்லன்; பிறரை வஞ்சிக்கும் கள்வன்; என்று கூறினர்.

இந்திரன் இருவருக்கும் ஒருவாறு சமாதானஞ் சொல்லி, ரிஷிகளே! அரிச்சந்திர மன்னவனது நற்குண நற்செய்கைகளை யாராயின் நும்மிருவருடைய கக்ஷிகளில் ஒன்று மெய்யுறும். அங்ஙனம் பரீக்ஷிப்பதில் வரும் வெற்றி தோல்விகளுக்கு நீர் செய்துகொள்ளும் ஆணையாதென்றனன். உடனே வசிட்டர் "இந்திர! யான்கூறிய அரிச்சந்திரன் நற்குண நற்செய்கைகளில் நின்றும் தவறுவனேல், நான் அரிதினியற்றிய தவம் முழுமையுமிழந்து, புலையர் சேரியிற் புக்குத்தலையோட்டிற் பலிவாங்கி யுண்பேன்" என்றனர். கோசிகர் "வாசவனே! யான் அத்தகைய சூளுரை யொன்றும் உரையேன். என்கக்ஷி தோற்குமாயின் என்னருந் தவத்திற்பாதியை அவ் வரிச் சந்திரனுக் கீவேன்" என்றனர். இந்திரன் இவ்விஷயங்களொன்றும் அவ் வரிச்சந்திரனுக்குத் தெரியாமலிருக்கும் பொருட்டு நாரதரையும் வசிட்டரையும் தன்னிடத்திலேயே இருத்திக்கொண்டனன்.

கோசிகர் புவியில்வந்து அரிச்சந்திரனிடஞ் சென்று அரசே! யான் அரசர்களுக்கெல்லாம் நன்மையைக் கொடுக்கத்தக்க ஓர் அரிய மகம் முடிக்கப்போகிறேன்; அதற்கு வேண்டிய பொருளை நீயே தரல்வேண்டு மென்றனர். அரசன் மகிழ்ந்து வேண்டிய பொருள்களைத் தந்தனன். கோசிகர் அரசே! இப்பொருள் நின்னிடமே யிருக்கட்டும்; வேண்டும்பொழுது பெற்றுக்கொள்ளுகிறேன் என்று கூறிச் சென்று சிலநாட் சென்றபின் காட்டகத்தை யடைந்து ஆண்டுள்ள விலங்குகளையெல்லாம் ஏவி மன்னன் நாட்டிற்குத் தீங்கிழைக்கச் செய்தனர். மன்னனும் அவற்றையெல்லாம் வேட்டையாடி வதைக்கவெண்ணி முனிவர் தவஞ்செய்துகொண்டிருந்த சூழலின் ஓர்பால் தங்கினன். இது தெரிந்த கோசிகர், இரு பெண்களை யேவி அவனை மயக்கிப் பொருள்பெறச் செய்தும் பயன்பெறாது போயிற்று. பின் தானேவந்து பலவாறு துன்புறுத்தி, நாடுவேண்டுமானாலும் தருகிறேன் என்று சொல்லச்செய்து, அவன் நாடு முழுவதையும் பெற்றுக்கொண்ட பின்னர், யான் நின்னிடம் யாகத்திற்காகவென்று கொடுத்த பொருளைத் தாவென்ன, மன்னன் எல்லாம் ஈண்டேயிருக்கிறதென்றனன். கோசிகர் நாடெல்லாம் என்னுடையது ஆயினபின் நினக்குரிய பொருளென்பது ஈண்டிலது; ஆதலின் யான் நின்னிடம் கொடுத்த பொருளை யிப்பொழுதே தரல்வேண்டுமென்றனர். இதுவும் ஈசன் செயலாமென்றுன்னிய மன்னவன் நாற்பது நாளைக்குள் தந்துவிடுவதாகச் சொல்ல, அப்பொருளைப் பெற்றுவருமாறு நக்ஷத்திரேசனை யுடனனுப்பினர்.

மன்னன் வழியில் நக்ஷத்திரேசனாலும் கோசிகரின் செய்கையாலும் நேர்ந்த பல துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு காசி நகரஞ் சென்று, தன்மகனையும் மனைவியையும்

விற்று, கோசிகர்க்குள்ள பொருளைக் கொடுத்து, நக்ஷத்திரே சன் உடன் வந்ததற்குக் கூலி வேண்டுமென்றமையால் தன் னையும் விற்றுக்கொடுத்து, தன்மனைவியைக் கொலைசெய்ய நேர்ந்தகாலத்தும் சத்தியத்தினின்றும் தவறாது விளங்கினன். தேவர்கள்பூமாரிபொழிந்தனர். கோசிகர் "தோற்றவன்யானே" யென்று தானரிதினியற்றிய அருந்தவத்திற் பாதியை அரிச்சந் திரனுக்குக் கொடுத்துப் பெருமையிழந்து போயினர்.

யாவராயினும் தீர யோசியாமல் கூறுவரேல் கோசிகர் தவமிழந்ததுபோல் தங்களுக்குரிய எல்லாச் செல்வத்தையு மிழந்து தவிப்பர்.

---

28. கூரறிவுடையார் குற்றம்பொறார்

"தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்" (குறள்)

பேரறிவினையுடையராய்த் தமக்கு வரும் பழியை யஞ்சும் சான் றோர்கள் தினையளவினதாகிய குற்றம் வருவதாக விருந்தாலும், அதனை யவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர்.

உலகோர் பழிகூறற்குரிய காரியங்களிலே தலையிடார் கள் உயர்ந்தோராயினோர். அறியாமையாலாயினும், சோர்வா லாயினும் குற்றம் நேரினும், உலகோர் வெறுப்புக்கிடனு யிராமல் குற்றத்திற்குரிய தண்டனையைத் தாமே விதித்துக் கொள்வர்.

சூரியகுலத்துதித்து, ஐவகைத்துன்பம் துடைத்து, மாதம் மும்மாரிபெய்தலால் குடிகள் என்றும் இன்புறுமாறு ஓர் வெண்கொற்றக்குடை நீழலின்கண் அரசர்க்கரசராய்

அரியணை வீற்றிருந்தார்கள் பாண்டியர்கள். இத்தகைய மேன்மை வாய்ந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவன் அரசாண்டுவருங் காலத்தில் வழக்கப்படி யிரவில் மாறுவேடம் பூண்டு நகர் சோதனைக்குச் சென்றான். அக்காலை, காசியாத்திரை செய்துவரவேண்டுமென் றெண்ணிய ஒரு மறையவன் தன் மனைவியைநோக்கி, "நான் நாளைக்காலையில் காசிக்குச் செல்லப்போகிறேன்" என்றனன். மனைவி, "மணாளரே! நீர் காசிக்குச் செல்லுவீரேல் திரும்பிவரும்வரை எற்கு உணவு கொடுத்துப் பராமரிப்பார் யாவர்" என்றனள். அந்தணன் மனைவியை நோக்கி, "இவ்வுலகத்தைக் காத்தற்கென்றே திருமாலின் அவதாரமாய்க் காவற்றொழில் பூண்டு நிற்கும் மன்னவனிருக்க நீ கவலுவது என்? இனிக் கவலையொழிக" வென்றனன். மாறுவேடம் பூண்டு சோதனைக்குச்சென்ற மன்னன் இச்செய்திகளைச் செவியுற்றனன். மறுநாட் காலையில் அந்தணனும் குறித்த நேரத்தில் புறப்பட்டுச் சென்றான்.

அரண்மனை சேர்ந்த அரசன் பலவாறு யோசித்து, இவளைப் பாதுகாத்தல் நமது கடமையென்று தேர்ந்தனன். ஆயினும் இவளுக்குமாத்திரம் நாம் உணவு கொடுத்துக் காப்பின் உலகோர் ஐயுறுவரே யென்றுன்னி, அன்றுமுதல் ஆறு மாதம் வரைக்கும் அவ்வூரிலுள்ள அந்தணரில்லம் எல்லாவற்றிற்கும் படியரிசி யனுப்பும்படி செய்தனன். காசிக்குச்சென்ற அந்தணன் மனைவியும் அரிசியைப் பெற்றுண்டு காலங்கழித்து வந்தாள். அரசனும் நகர்சோதனைக்குச் செல்லுகையில் இவ்வந்தணன் வீட்டு வாயலில் சிறிதுநேரம் நின்று யாதொரு தீங்கும் நேராவண்ணம் கவனித்து வந்தான்.

இங்ஙனம் சில மாதங்கள் சென்றபின்னர், ஒரு நாள் காசியாத்திரை சென்ற அந்தணன் யாத்திரை முடித்துத்

திரும்பி வந்துவிட்டான். இச்செய்தி அரசனுக்குத் தெரியாது. அன்றிரவு வழக்கப்படி சோதனைக்குச்சென்ற அரசன், அந்தணன் வீட்டு வாயிலில் சிறிதுநேரம் நின்றான். மற்றொரு ஆண் மகனுடைய குரல்கேட்டது. இது வேற்றுக் குரலாயிருக்கிறதேயென்று நினைத்தான். காரணம் தெளிவாக விளங்காமையால் கதவைத்தட்டினான். உள்ளிருந்த அந்தணன் யார் என்றான். உடனே அரசனுக்கு இவன் அந்தணன்தான் என்று தெரிந்துவிட்டது. இவன் ஒருவாறு ஐயுறுவானோவென்றெண்ணி அந்தணரில்லம் எல்லாவற்றிற்கும் சென்று கதவைத்தட்டிச் சென்றான்.

மறுநாள் காலையில் அந்தணர்கள் ஒன்றுகூடி இரவில் நேர்ந்த செய்தியை அரசனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று அரசனிடஞ் சேர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறினர். அரசன் வேறுயாதும் தீங்கிலதேயென்றனன். அந்தணர்கள் அரசே! தீங்கில்லாவிடினும் அத்தகைய தீயோனைக்கண்டு பிடிக்க வேண்டுமென்றனர். அரசன் அந்தணர்களை நோக்கி, அவன் இன்னனென்று தெரிந்தால் அவனை என்ன செய்யலாமென்றனன். அந்தணர்கள், அவன் கையைவெட்டி விடுதலே தகுதியென்றனர். உடனே அரசன் யானே அக்காரியஞ் செய்தவனென்று கூறித் தன்கையைத் துணித்துக்கொண்டனன். ஆலவாயின் அழனிறக்கடவுள் அவற்கு ஓர் பொற்கையைக் கொடுத்தருளினர். ஆண்டுக் குழுமியிருந்த அந்தணரனைவரும் அரசன் நீதியினைக் கொண்டாடினர். அன்று முதல் அப்பாண்டியனுக்குப் பொற்கைப்பாண்டியன் என்று பெயர் வழங்கலாயிற்று.

கற்றறிந்த மேலோர் தம்மீது பிறர் குற்றம் கூற நீதி செய்யார்.

---

29. முற்பகல்செய்யிற் பிற்பகல் விளையும்

" பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் " (குறள்)

ஒருவர்க்கு ஒருதுன்பத்தை ஒருபகலினது முற்கூற்றில் ஒருவன் செய்யுமாயின் அப்பகலினது பிற்கூற்றின்கண்ணே அவ்வின்னா அவனுக்கு வரும்.

"எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பின், அளியறத் தெய்வம் வாட்டும்" என்று ஆன்றோர் கூறியாங்கு, தாம் வலியமென்று கருதி ஓரின்னாத செயலை ஒருவன் செய்யுமாயின், செய்யப்பட்டவன் எதிர் செய்யும் வலியற்றவனாயினும், அறத்தெய்வம் அச்செய்தவனையே யவ்வின்னா சென்றடையும் வண்ணம் செய்யுமென்பது ஒருதலை. ஆயின் இன்னாசெய்தார் தீங்கின்றி மகிழ்ந்திருக்கக் காண்டுமேயெனின், அது வருங்கால் விரைந்து வரினும் வரும்; காலந்தாழ்த்து வரினும் வரும். ஆதலால் இன்னா செய்தார் இப்பொழுது பயன் நுகராதிருக்கின்றனரே யென்று எண்ணல் கூடாது. விடாது பின்பற்றிச் சென்று எழுபிறப்பினும் தொடரும். "இம்மைச் செய்தன யானறி நல்வினை, உம்மைப்பயன் கொல் ஒருதனி யுழந்தித், திருத்தகு மா மணிக்கொழுந்துடன் போந்தது" என்ற சிலப்பதிகாரத் தொடரும் ஈண்டுக் கவனிக்கத்தகுந்தது.

முன்னொருகாலத்தில் அத்திபதி யென்று ஒரு மன்னனிருந்தான். அவனுக்கு ராகுலன் என்ற ஒரு மகனிருந்தான். அவ்விராகுலன் தன் மனைவியான இலக்குமியோடும், காயங்கரை யென்ற நதிக்கரையில் பரமதருமரென்னும் முனிவர்

தரும உபதேசஞ் செய்கின்றனரெனக் கேட்டு ஆண்டுச் சென்றனன். தரும உபதேசத்தைக்கேட்டு, மனைவியோடுஞ் சென்று முனிவரை வணங்கி, தேவரீர்

"வலஞ்செய்து வணங்க வெளிவந்த விதுமுந்தென்
குலஞ் செய்தவம்"

என்று இனியன கூறி, என்னில்லத்திற் கெழுந்தருளி யமுது செய்யவேண்டுமென் றிரந்தனன். முனிவரும் இசைந்தனர்.

இராகுலன் மனமகிழ்ந்து இல்லத்திற்கு வந்து "அறுசுவை யுண்டி யினிதமைக்க" வென்று தன்மடைத்தொழிலாளனுக்குக் கட்டளை யிட்டான். அம்மடைத் தொழிலாளன் சமையல்செய்து கொண்டுவரச் சிறிதுகாலந் தாழ்த்தது. இராகுலன் பொறாது அவனை வெகுண்டு நோக்க, அவன் பயந்து நடுங்கிக் கீழேவிழுந்தான். அவனது எளிய நிலையைக் கண்டும் இரங்காது குறித்த காலத்தில் கொணராது போயினனே யென்னும் கோபத்தால், தன் உடைவாளை யுருவி யவனையும் வெட்டி வீழ்த்தினன்.

அந்த இராகுலன் மறுபிறப்பில் நெடுமுடிக்கிள்ளிக்கு மகனாய்ப் பிறந்து உதயகுமாரன் என்னும் பெயரோடு விளங்கினன். அவன் மனைவியாகிய இலக்குமியென்பாள் கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாய்ப்பிறந்து மணிமேகலை யென்னும் பெயரோடு விளங்கினாள். சிறிது நாளுக்குள் கோவலன் மதுரைக்குச் சென்று இறந்துவிட, மாதவி தவவேடம் பூண்டிருந்தனள். அது போலவே இவளும் தவவேடம் மேற்கொண்டிருந்தனள். உதயகுமாரன் மணிமேகலையை ஓர் சோலையிற்கண்டு காதலித்தான். மணிமேகலை உடலின் னிலையாமையையும் இழிவையும்பற்றிப் பலவாறு உபதேசித்தனள்.

அது கேட்டும் உதயகுமரன் அவளிடம் கொண்ட காதல் தணியாதவனாய் மேலும்மேலும் சோலைக்கு வருவானாயினன்.

இஃதிங்ஙனமிருக்க, காயசண்டிகையென்னும் ஓர் விஞ்சையர் கோதையானவள் விருச்சிகன் என்னும் ஒரு முனிவனிட்ட சாபத்தினால் இவ்வுலகிற் பன்னிரண்டு வருடம் தங்கியிருந்தனள். மணிமேகலை இச்சோலையின்கணிருந்து கொண்டிருக்கும்பொழுது, பன்னிரண்டு வருடமும் கழிந்ததை யறிந்த காஞ்சனன் என்னும் பெயரையுடைய விஞ்சையர் கோதையின் கணவன் இன்னம் தன் மனைவி வந்திலள்; வராம விருக்கக் காரணமில்லையே யென்று கூறி யிச்சோலையை யணுகினன்.

காஞ்சனன் வருதலைக்கண்ட மணிமேகலை, உதயகுமரன் அடிக்கடிவந்து துன்பஞ்செய்தலைப் பொறாது, கொல்லுவதற்கெண்ணிக் காயசண்டிகையின் வேடத்தைத்தாங்கி நின்றனள். வந்த காஞ்சனன் அவளை தன் மனைவியென்றெண்ணி, "என் ஆருயிரே! பன்னிரண்டு வருடமுங் கழிந்துபோயினவே; இன்னும் வராமலிருப்பது என்" என்றனன். காயசண்டிகையின் வேடந்தாங்கியிருந்த மணிமேகலை,

"பூவினும் சாந்தினும் புலால் மறைத்துயாத்து
தூசினும் அணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சந்தெரிவாய் மன்னவன் மகனே"

என்று உதயகுமரனுக்கு மறுமொழி கூறுவாள்போற் கூறினள். அவளை தன் மனைவியென் றெண்ணியிருந்த காஞ்சனன், உதயகுமரன் இவளைக் காதலித்ததாலேயே பன்னிரண்டு வருடம் கழிந்தும் இவள் இங்குத் தாமதித்தாளென் றெண்ணி, அவனைக் கொல்லவேண்டுமென்று ஓர்பால் மறைந்திருந்தான்.

இச்செய்தியறியாத உதயகுமரன் மணிமேகலை மேற் கொண்ட காதல் தணியாதவனாய், எல்லாரும் உறங்கும் நடுயாமத்து அச்சோலையை யடைந்தான். மறைந்திருந்த காஞ்சனன், தன் மனைவிமேற் காதல்கொண்டே யிவன் வருகின்றானென்றெண்ணித் தன் கைவாளால் அவனை வெட்டி வீழ்த்தினன்.

" எனைப்பகை யுற்றாருமுய்வர் வினைப்பகை, வீயாது பின் சென்றடும் " என்னும் பொய்யாமொழியை யொருபோதும் மறத்தல் கூடாது.

---

30. ஒழுக்கம் தவறின் இழுக்கம் தரும்

" நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும் " (குறள்)

நல்லொழுக்கமானது அறத்திற்குக் காரணமாய் இன்பம் பயக்கும்; தீயொழுக்கமானது பாபத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும்.

கடவுளும், புண்ய பாவமும், சுவர்க்க நரகமும், வேதமும் உண்டென்னும் உண்மையை மறவாது நன்னெறியில் ஒழுகுதலே நல்லொழுக்கமென்று கூறப்படும். இவ்வொழுக்கமானது தைலத்தின் ஒழுக்குப்போல இடைவிடாது போற்றத்தக்கது. இடையே தவறவிடின் தாழ்வடையச்செய்யும் என்பது திண்ணம். "மறப்பினும் (ஓதிக்) கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" என்னும் வள்ளுவர் மொழியும் ஈண்டுக் கவனிக்கத் தகுந்தது.

சாபாநுக்கிர சக்திவாய்ந்த கௌதமர் என்று ஒரு ரிஷியிருந்தார். அவர் மனைவியின் பெயர் அகலிகை. அவள் பேரழகு வாய்க்கப்பெற்றவள்; நற்குண நற்செய்கைகள் அமைந்தவள். அவளழகைக்கண்டு மயங்கிய வானவர் தலைவன் எங்ஙனமாயினும் அவளை யடைய வேண்டுமென் றெண்ணிக்கொண்டிருந்தான். தையலாள் நயனவேலும், மன்மதன் சரமும்பாய வருந்திய இந்திரன் ஒரு நாள், முனிவரை நடு இரவிலேயே கங்கையை யடையச்செய்ய வேண்டுமென் றெண்ணி, கௌதமருடைய ஆச்சிரமத்தின் அருகே நின்று விடிந்ததை யறிவிக்கும் சேவல்போற் கூவினன். குரல்கேட்ட முனிவர் விடிந்ததென்றெண்ணிக் கமண்டலத்தைக் கையிற்கொண்டு கங்கையை யடைந்தனர்.

தன்னெண்ணம் பலித்ததென்று மகிழ்ந்த இந்திரன், பொய்யிலாவுள்ளத்தரான கௌதமருடைய வடிவத்தைக்கொண்டு, ஆச்சிரமத்தில் நுழைந்து, அகலிகையோடும் சிறிது நேரம் சந்தோஷமாய் அளவளாவிக் கொண்டிருந்தான். சிறிதுநேரஞ் செல்லவே அகலிகை தன் கணவன் அல்லனென்று அறிந்துகொண்டாள். ஆயினும் இச்செய்கை நமக்குத்தகாதென்று ஒழிக்காமல் அவனோடு இன்பான வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தாள்.

விடிந்ததென்றெண்ணிக் கங்கை சென்ற முனிவர், கங்கை நித்திரையினின்றும் நீங்காமையைக்கண்டு திகைத்து ஞானக்கண்ணால் நோக்குமளவில் மகவான் செய்த சூழ்ச்சியைத் தெரிந்து கொண்டவராய்த் தம்மில்லம் வந்து சேர்ந்தனர். கண்ட வானவர்க்கிறைவன் முனிவர்க்குப் பயந்து ஒரு பூனைவடிவம் கொண்டு ஓடத்தொடங்கினன். முனிவர் வெகுண்டு, நின்னுடல மெல்லாம் துளையாகுக வென்று சபித்

தனர். சாபம்பெற்ற இந்திரன் எதிர்செயும் தருக்கிலானுய்ச் சென்றனன். உடனே அகலியையை நோக்கி, இன்னவன் என்று உணர்ந்த பின்னரும் தக்கதன்றெனவெண்ணுது மகிழ்ந்திருந்தமையின் கல்லாய்ப் போதியென்றனர். அவளும் கருங்கல்லாய் ஆங்கே யிருந்தனள்.

ஒழுக்கம் தவறி நடப்போர் என்றும் இழிவடைவர்.

---

31. ஆயாத் தீச்செயல் தீராத்துயர்தரும்

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு" (குறள்)

செய்யும் காரியத்தின் தன்மையையும், அதை யிவ்விதமாக முடிக்க வேண்டும் என்னும் உபாயத்தையும், நன்கு ஆராய்ந்து தெரிந்து கொண்ட பின்னரே செய்வோம் என்று துணிதல் வேண்டும். அங்ஙனமின்றித் தொடங்கிய பின்னர் ஆராய்ந்து முடிப்போமென்று எண்ணித் தொடங்கல் பெருந்தீமையையே விளைவிக்கும்.

வெகுளி காரணமாகப் பின்வரும் பலனை ஆராயாது காரியங்களைச் செய்து,பின் வருந்துபவரே யுலகத்திற் பெரும்பான்மையோர். இருமையையும் கெடுத்து தீராத் துயரை விளைத்தற்குக் காரணமான வெகுளியைக் கடிந்து பொறுமையைக் கொண்ட சான்றோர்கள் மறந்தும் பின்வரும் பலனை யாராயாது காரியங்களைச் செய்யத் துணியார்கள். யாவராயினும், வெகுளி காரணமாகவாவது, அறியாமை காரணமாகவாவது அவ்வாறு காரியத்தைச் செய்யின் பெரிதும் இடருற்று வருந்துவர்.

மூன்றுலகங்களும் பெயர் கேட்ட மாத்திரையானே நடுங்கும்படி இன்னல் பலவியற்றியும், மாதவர் நோன்பும்

மடவார் கற்பும் தலைசாய்ந்து வீயவும் அரசாண்டு வந்த ராவணன், ஒரு நாள் இருநிதிக்கிழவனோடு போர்புரிந்து அவன் தனக்கென்று வைத்திருந்த புஷ்பக விமானத்தைக் கவர்ந்து கொண்டு இலங்கையை நோக்கி வந்து கொண்டிருந்தான். வழியில் கங்கைவேணியனது திருக்கைலாயமலை குறுக்கிட்டது. அம்மலையையும் தாண்டி மேற்செல்ல வேண்டுமென்ற எண்ணங்கொண்ட இலங்கையரசன், விமானத்தை விரைவாய்ச் செலுத்த அது தடைப்பட்டு நின்றது. காரணம் தெரியாது திகைத்தான். நந்தியெம்பெருமான் வந்து ராவணனை நோக்கி, "இம்மலையின்மேல் யாரும் செல்லலாகாது; யார்வரினும் கீழிறங்கி வணங்கிய பின்னரே செல்லல் வேண்டும். நீ வணங்காது மேற்செல்ல முயன்றமையின் நின் விமானம் தடைப்பட்டு நின்றது" என்றார்.

கேட்ட ராவணன் இருபது கண்களினின்றும் கனல் சிந்த வெகுண்டு "மனிதரும், தேவரும், நாகரும், என் பெயர் கேட்ட மாத்திரையானே நடுங்குவர். ஐம்பெரும் பூதமும் நான் ஏவினசெய்து நிற்கும். இத்தகைய பெருமை வாய்ந்த எனக்கு இம்மலையிலுள்ள தேவனால் தடையேற் படுவதா? இனி இம்மலையிலுள்ள தேவனை இம்மலையோடும் சாய்த்துத் தள்ளிவிடுகிறேன்" என்று ஒரு சிறிதும் ஆராயாதவனாய்ப் பெயர்க்கத் தொடங்கினான். இருபதுகைகளாலும் தன் வலியெல்லாம் தோன்றப் பெயர்க்குமளவில் மலை சிறிது அசைவுற்றது. காரணமின்றித் திடீரென்று அசைவுறக்கண்ட மலைமகள், தன்கொழுநனைத் தழுவிக் கொண்டனள். நிகழ்ச்சி யறிந்த இறையோன் ஒரு கால்விரலால் மலையை யழுத்தினன். உடனே அம்மலை பத்துத்தலைகளும் இருபது கைகளும் நசுங்குமாறு ராவணனை நெருக்கியது. அதினின்றும் தப்ப வகையறியாத ராவணன் புலம்பிக்

கொண்டிருக்க, அவ்வழியேவந்த நாரதர் அவனை நோக்கி உய்வகை யின்னதென்று கூறினர். அவனும் தலையை வீணை யின் குடமாகவும் ஓர் கையை அதன் கீழ் உறுப்பாகவும், நரம்புகளைத் தந்தியாகவும் கைவிரல்களை முருக்காணியாகவும் கொண்டு ஓர் வீணையமைத்து சாமவேதத்தைப் பாடினன். கேட்ட பரமசிவன் மகிழ்ந்து அவன் குற்றத்தைப் பொறுத்து, அவனது வேண்டுகோளால் சிறந்தொரு வாளை யும் நீண்ட ஆயுளையும் தந்தருளினர்.

பின்வரும் பலனை யாராயாது செய்யும் காரியம் பெருந் தீங்கு விளைக்கும்.

32. கிளைஞரைக் கேடுப்போர் கேடுற்றழிவர்

" அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந்தற்று " (குறள்)

தன் சுற்றத்தாரோடும் நெஞ்சுகலத்த லில்லாதவன் வாழ்க்கை யானது,ஒரு குளம் கரையின்றி நீர் நிறைந்தது போலும். நீரைத்தாங்கி நிற்பதாகிய கரையில் வழி நீர்புறத்துப் போமாறுபோல, சுற்றத்தாரில் வழித்தாங்குவா ரின்மையின் செல்வம் புறத்துப்போய் அழிவுறுவன் என்பது கருத்து.

சுற்றத்தாராவார் தன்னுடன் பிறந்தோர்களும் தந்தை யுடன் பிறந்தோர்களும், தாயுடன் பிறந்தோர்களும் மனைவி யுடன் பிறந்தோர்களும், அவர்கள் வழியிலுள்ள பிறரும் ஆவார். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்று கூறியாங்கு இத்தகைய சுற்றத்தாரை யெல்லாம் தழுவி வாழ் பவனே தான் கருதியவற்றை யெல்லாம் இன்புறப்பெற்று மகிழ்பவனுவான். செல்வம் முழுவதையும் நாமே யடை

தல் வேண்டுமென்று தீயவெண்ணங்கொண்டு கேடு சூழ்வ னேல், நினைப்பின்றித் தாமிருந்த கோடு குறைத்துவிடுதலை யொக்கும். அதிலும் உடன்பிறந்தாரைக் கெடுத்து வாழ்ந் தார் உலகில் ஒருவருமில்லை யென்பது உண்மை.

இப்பூவுலகின் கண்ணுள்ள எல்லாத் தேசங்களிலும் சிறப்புற்று விளங்கியது கௌடதேசம். அத்தேசத்தைப் பாடலிபுரம் என்னும் நகரத்தைத் தலை நகரமாகக் கொண்டு, நால்வருணத்தாரும் தத்தம் நெறிதவறாது நடக்கவும் பசுவும் புலியும் ஓர் துறையில் நீர் குடிக்கவும் செங்கோல் செலுத்தி யாண்டு வந்தான் சர்வார்த்தசித்தி மகாராஜன். அவனுக்கு, சுநந்தாதேவி யென்ற பட்டமஹிஷியும், முராதேவி யென்ற ஆசைநாயகியுமாக இருமனைவியர்களிருந்தார்கள். இவர்கள் எல் லாச் செல்வமும் நிறைந்திருந்தும் மக்கட்பேறின்மையால் பெரிதும் வருந்தியிருந்தனர். ஒருநாள் வீதிஹோத்ரர் என் னும் முனிவரர் தன்னரண்மனைக்கு வரக்கண்ட மன்னன் பேருவகைபூத்து வரவேற்றுப் பொற்பீடத்தின்கணிருக்கச் செய்து, தன்னிரு மனைவியர்களோடும் கால்கழுவல் முதலிய உபசாரங்களைச் செய்தனன். முனிவரர் அரசனது நற்குண நற்செயல்களுக்கு மகிழ்ந்து மக்கட்பேறுண்டாக வருள்செய்து போயினர்.

சில காலங்கழிந்து இருமனைவியரும் கருப்பமுற்ற னர். முராதேவி யென்னும் ஆசைநாயகி மௌரியன் என் னும் ஓர் புத்திரனை யீன்றனள். சுநந்தாதேவி யென்னும் பட்டமஹிஷி நந்தன் முதலிய ஒன்பதின்மரை யீன்றனள். மௌரியன் தக்க வயதடைந்து வித்தையிலும், புத்தியிலும், சௌரியத்திலும் மிக்கோனாய் விளங்கினன். மன்னன் மகிழ் ந்து, சிம்மாசன மேறுவதொன்று தவிர்த்து மற்ற எல்லா அதிகாரங்களையும் அவனுக்கே கொடுக்க அவனும் எல்லா

ஜனங்களுக்கும் சம்மதனாய் இருந்து ஆண்டு வந்தான். நந்தன் முதலிய ஒன்பதின்மரும் தக்க வயதடைந்தபின் அவர்களுக்கும், மௌரியனுக்கும் அவரவர்கள் விரும்பியவாறு மணஞ்செய்வித்தான் சர்வார்த்தசித்தி மஹாராஜன்.

பின், நந்தனே அரசச்செல்வத்துக் குரியவனாகையால் அவனைச் சிம்மாசனத்திருத்தி யுவராஜ்யாபிஷேகம் செய்வித்தான். மௌரியன் சேவகத் தன்மையிலிருந்து கொண்டு தன் மக்கள் நூற்றுவருக்கும் தக்க ஆசிரியரைக் கொண்டு கல்வி கற்பித்து வந்தான். அவர்களும் எல்லாக் கலைகளையும் கற்றுப் புகழ்பெறத் தக்கவராய் விளங்கினர்.

அதுகண்ட நந்தன் முதலிய ஒன்பதின்மரும் "மௌரியனும் அவனது புத்திரர்கள் நூற்றுவரும் நம்மினும் வலிமிகுந்தவராயும், கல்விகேள்விகளிற் சிறந்தவர்களாயும், எல்லா ஜனங்களுக்கும் சம்மதர்களாயும் விளங்குகின்றனர். இன்னம் சின்னாட் செல்லின் நமது ராஜ்யத்தையே யபகரித்துக்கொண்டாலும் கொள்வார்கள்" என்று எண்ணினர். இவர்கள் எண்ணியதைத்தெரிந்த ராக்ஷசன் என்னும் மந்திரி, மௌரியனுடைய நற்குண நற்செய்கைகளைப் பலவாறு எடுத்துக்கூறினன். கேடுசூழ்பவரான நந்தர்களின் செவியில் அம்மொழி ஏறவில்லை. ஒருநாள் அரசனான சர்வார்த்தசித்தி மகாராஜனும், மந்திரி ராக்ஷசனும் பிரயாகைக்குச் சென்றுவருவோமென்று பரிவாரங்களோடும் சென்றனர்.

நந்தன்முதலிய ஒன்பதின்மரும் இது தக்க தருணமென்றெண்ணிக் காட்டில் ஒரு மாளிகையமைக்க ஏற்பாடு செய்தனர். மௌரியனையும் அவனது புத்திரர் நூற்றுவரையும் அழைத்து, "நமது தந்தையான சர்வாத்தசித்தி மகாராஜா வரின் நம்மை வேட்டைக்குச் செல்ல விடார். வேட்

டையாடுவதில் பலவிதமான இன்பங்களுண்டென்று சொல்லு வார்கள். நாமும் வேட்டையாடிக் காட்டி லமைத்திருக்கும் மாளிகையில் சிலநாள் தங்கிக் களித்து வருவோம்" என்ன, சூழ்ச்சியறியாத மௌரியனும் இசைந்தனன். உடனே நந் தன் முதலியோரும் ஓர் தினத்தைக் குறிப்பிட அந்நாளிலே எல்லாரும் சிறந்த பரிமாக்களின் மீதிவர்ந்து வேட்டைக்குச் சென்றனர்.

நந்தன் முதலியோரும், மௌரியனும் அவர் புதல்வர் கள் நூற்றுவர்களும், காலையுண்டியயின்று, வேட்டைக்குரிய உடைகளைத் தரித்துக்கொண்டு நெடுநேரம் வேட்டையாடிக் களைத்து மாளிகையின்கண் வந்து தங்கினர். உண்டிபடைப் போர், முன்னரேயே நந்தர்கள் குறிப்பிட்டிருந்தபடி நூற் றொரு இலைகள் மட்டும் போட்டு வைத்திருந்தனர். பசியின் மிகுதியினால் மௌரியனும் அவனது புத்திரர்கள் நூற்று வரும் முன் உட்காரவே மற்றையோருக்கு இடம் கிடைக் காது போயிற்று. நந்தர்கள் படைப்போர் எல்லாரையும் வெளியேறும்படி குறிப்பாலுணர்த்தித் தாங்களும் அடுத்த பந் தியில் உண்பதாகக்கூறி வெளியே வந்து, அவர்கள் நூற் றொருவரையும் உள்ளேயே விட்டுக் கதவைப்பூட்டி முத்திரை யிட்டுக் காவலாளிகளையெல்லாம் ஆண்டிருந்து காக்கும்படி யும், ஒவ்வொருவராக எல்லாரும் இறந்த பின்னர்த் தெரிவிக் கும்படியும் சொல்லிப்போயினர். இவர்கள் சென்ற ஐந்தாறு நாட்களுக்கெல்லாம் சந்திரகுப்தன் நீங்கலாக மற்ற எல்லா ரும் மாண்டனர்.

பின் சந்திரகுப்தன் நெடுநாள் வருந்தியிருந்து, நந்தர் களால் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்துகொண்டிருக்கும் பொழுது சாணக்யர் என்னும் சிறந்த முனிவருடைய அரு ளைப்பெற்றுப் பர்வதேச மன்னனையடைந்து அவனுதவியால்

நந்தர்கள்மீது படையெடுத்துவர, அவனோடு எதிர்த்துப் போர் செய்யமாட்டாத நந்தர்கள் விண்ணுலகெய்தினர்.

உற்றார்க்கெடுப்பின் இத்தகைய கேடே விளையும் என்பதும், அறம் பிழைப்பின் அறக்கடவுளே ஒறுக்கும் என்பதும் ஒருதலை.

33. அடாது செய்தார் படாதுபடுவார்

"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று" (குறள்)

தீவினைகளைச் செய்தார் தாங் கெடுதல் எத்தன்மைத்தெனின், ஒருவன் நிழல் நெடிதாகப்போயும் அவன்றன்னை விடாதுவந்து அடியின்கட் டங்கியதன்மைத்து.

செய்யத்தகாத (தரும விரோதமான) காரியங்களைச் செய்வோர் அநுபவிக்கத்தகாத தீங்குகளையும் அநுபவிப்பர். அதாவது, ஒருவனை அடாது செய்பவன் என்று உலகம் அறிந்த பின், வீண்பழியை அவன் மீது கூறினும் அவன் செய்திருப்பான் என்று நம்புவர். ஆதலால் தகாச்செயலைச் செய்து தீயோர் என்று கூறும்படி நடந்துகொள்ளுதல் கூடாது.

இயக்கர்குலத் துதித்து உலகம் வியக்கும்படியான பெருவலி வாய்க்கப்பெற்ற சுகேதுவென்பான் நெடுநாள் மகவிலாது வருந்தித் தாமரைக்கிழவனை நோக்கித்தவம்புரிந்தனன். இவன் தவத்தை வியந்த பிரமன் "உனக்கு மைந்தர்கள் இல்லை; ஒரு மகள் தோன்றுவள்" என்று அருளிப்போயினன்.

சிலநாட்கள் சென்றபின் தாமரைப்பூவில் வாழும் திருமகளை யொக்கும் பொற்பினோடும், ஆயிரம் மதயானைகளை யொத்த வலிமையோடும் ஓர் தனயள் தோன்றி

னள். தந்தையான சுகேது, அக்குழந்தையின் மடநடையைக் கண்டும், மழலைச்சொற்களைக் கேட்டும், பேரானந்தங் கொண்டிருந்தான். உரியபருவம் வரப்பெற்றபின் மணஞ் செய்விக்கக் கருதி அவன் இளைநாயகனான சுந்தன் என்பானுக்கு மணஞ்செய்வித்தான். சுந்தனும் தன் மனைவியோடும் பெருங்களிச்சலதியில் மூழ்கியிருந்து சுபாகு, மாரீசன், என்னும் இரண்டு குமாரர்களைப் பெற்றான்.

இங்ஙனம் களிப்போடு வாழும்நாளில் ஓர் நாள், களிப்பின் மிகுதியால், கடலை யோர்கையால்முகந்து உண்ட மாதவனுறைவிடத்தை யணுகி, ஆண்டுள்ள மரங்களை யெல்லாம் பறித்தெறிந்தும், மான்களை யெல்லாம் வதைத்தும் தீச்செயல் புரியக்கண்ட முனிவர் வெகுண்டு நோக்கினர். சுந்தனும் சாம்பராய் அவிந்தான். இவன் விளிந்தமையைக் கேள்வியுற்ற தாடகை, மைந்தர் தம்மொடும் சென்று முனியை முடிக்குவன் என்று எழுந்து, அவருறையும் சாலையை யடைந்து இருகதிர்களும் முகிற்குலமுஞ் சலிக்க ஆரவாரஞ்செய்தனள்.

தமிழெனும் அளப்பருஞ்சலதி தந்த முனிவன், "அழிவன செய்தலால்அரக்கராகுக"வென, அக்கணமேஅரக்கராய்ச் சுமாலியை யடைந்து உறவுகொண்டாடித் தீமை செய்தலையே மேற்கொண்டு திரிவாராயினர். தாடகையும் அவ்வனத்திலேயே யிருந்து எதிர்ப்பட்ட உயிர்களை யெல்லாம் வதைத்துத் தின்றுகொண்டிருந்தாள். உலகத்தில் மறத்தை நீத்து அறத்தை நிலைநிறுத்தத் தோன்றிய ஸ்ரீராமபிரான் கோசிக முனிவரது சொற்களை மேற்கொண்டு ஓர் அம்பினால் தாடகையைக் கொன்று வீழ்த்தினர்.

தீச்செயல் புரியின் உயிரையும் இழக்கநேரும்.

அரும்பத விளக்கம்

(எண் பக்கத்தைக் குறிக்கும்)

1

வறுமை - தரித்திரம்
விழைவோர் - விரும்புவோர்
ஐயம் - சந்தேகம்
படைத்தோன் - பிரமன்
எல்லை - அளவு

2

கலைகள் - சாஸ்திரங்கள்
பேறு - பெறத்தகுந்தது (பாக்யம்)
எளியன் - சுலபமாய்க் காட்சி தந் தருள்பவன்.
அழல்நிறக் கடவுள் - அக்னிபோன்ற நிறத்தையுடைய பரமசிவன்.
தென்புலத்தார்-தென்றிசையிலுள்ளார் (பிதிரர்)
அந்திவண்ணன் - அந்திச் செவ்வானம்போன்ற நிறத்தையுடையவன் (பரமசிவன்)
கரிக்கன்று - யானைக் கன்று
உன்னி - நினைத்து

3

மழலை - பொருள் விளங்காமற் குழந்தைகள் பேசும் சொல்
இட்டும் தொட்டும் - கீழே வாரி இறைத்தும் கையினால் தொட்டுப் பிசைந்தும்
கவ்வியும் துழந்தும்-வாயால் கௌவியும் கைகளால் துழாவியும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தல் - நெய்யையுடைய சோற்றை உடம்பின்கட் படச் சிதறுதல்
உலந்தபின் - முடிந்தபின்
கூற்றுவன் - இயமன்
ஈர்த்தல் - இழுத்தல்
தருக்கி - கர்வங்கொண்டு

4

பொய்யின்பம் - நிலையில்லாத இன்பம்
விதுகுலம் - சந்திரகுலம்
மாண்டனன் - இறந்தான்

5

வேத்திரகீயம் - ஓர் நகரம்
மகம் - யாகம்
மாயன் - கிருஷ்ணன்
கவர்தல் - அபகரித்தல்
சதிப்பது - தொலைத்தல்
சமைத்து - நிருமித்து

6

பொருதல் - போர்செய்தல். ஈண்டு ஆடல் என்க.
வம்மின் - வாருங்கள்
கவறு - சூதாடுகருவி
குழுமி - கூடி
பொறை - பொறுமை
வீட்டுலகு - மோக்ஷலோகம்

7

தாழ்த்தல் - தாமதித்தல்
மடிந்தார் - இறந்தார்

8

அறச்சாலை - தருமசாலை
தலைப்படல் - உண்டாதல்
ஆட்கொள்ளல் - அடிமையாகக் கொள்ளல்
உணர்வு - ஞானம்

9

மதியான் - பொருட்படுத்த மாட்டான்
மாசில் - (மாசு+இல்) குற்றமில்லாத
மாலை - மாலைக்காலம்
மூசு - மொய்த்த
வண்டறை - வண்டுகள் ரீங்காரம் செய்கிற

10

எஞ்சிய - மிஞ்சிய
சௌலப்பிய குணம் - சுலபமாக அருள்செய்யும் குணம்

11

அறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு,உப்பு, கைப்பு, துவர்ப்பு
தலைமை - முதன்மை
நல்குரவு - தரித்திரம்

12

அளகேசன் - குபேரன்
ஸ்தாவரம் - அசையாப்பொருள்
ஜங்கமம் - அசையும்பொருள்

13

அயலவர் - பக்கத்து வீட்டுக்காரர்கள்
அறுவடைகாலம் - கதிரறுக்கும் காலம்

14

நிலை - பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம்,சந்நியாசம் என்னும் நால்வகை நிலைகள்

16

புனிதம் - பரிசுத்தம்

17

ஏது - காரணம்
அறநூல் - தருமசாத்திரம்
வழுவாது - தவறாமல்
வலவன் - ஓட்டுவோன்

21

பணிவிடை - குற்றேவல்
எஞ்சி - மிஞ்சி

23

புரந்த - ஆண்ட
புரந்தரன் - இந்திரன்
புலோமசை - இந்திரன் மனைவி

25

நாத்தி - இல்லை
புந்தியன் - புத்தியையுடையவன்
இருள்மருள்குழல் - இருட்டைப் போன்ற கூந்தல்
பரந்தாமம் - மோக்ஷம்

26

பிதாமகன் - பாட்டன்
மதலையர் - மக்கள்
நிரபராதி - குற்றமற்றவன்
வேவுகாரர் - ஒற்றர்

27

இவுளி - குதிரை
சுரர் - தேவர்கள்
பொதுவற - எல்லாருக்கும்பொது வென்று சொல்லுஞ் சொல் இல்லாமல்
திகிரி - சக்கரம்
நிரயம் - நரகம்

28

அரந்தை - துன்பம்
உந்தி அம்புயத்துதித்தவன் - திருமாலின் உந்திக்கமலத்தில் தோன்றியவன் (பிரமன்)

கழற - சொல்ல

29

இம்மைக்கின்பம் - புகழ்
மறுமைக்கின்பம் - புண்ணியம்
இரண்டுமின்றி ஓர் செம்மையில் நிற்பது - மோக்ஷம்
இசைபட - கீர்த்தியுண்டாக
அடங்கலர் - விதிகளுக்கு அடங்கி நடவாதோர்

30

பயம் - பிரயோஜனம்
முந்நீர்த் தடங்கடல் - ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் மூன்று தன்மைகளை யுடைய விசாலமான கடல்
உடம்பொடுமுகங்கள் ஒவ்வார் - உடம்பு வேறு முகம் வேறாக இருக்கும்பிறப்புடையவர்களாய்

31

தெற்றி - திண்ணை
நின்றை - ஊரின்பெயர்

32

உலுத்தன் - உலோபி

33

குறுமுனி - அகத்தியர்
விஞ்சையர்கோதை - வித்யாதர மாது.
வாரிசம் - தாமரை
வாரணம் - யானை
பேழ்வாய் - பிளவுபட்ட வாய்
பிணர் இடங்கர் - சருச்சரையான உடலையுடைய முதலை
திகிரி - சக்கரம்
புள்ளரசு - பறவையரசு (கருடன்)

34

புண்டரீகத்தோன் - தாமரைமலரில் உள்ளவன் (பிரமன்)
புரம்மூன்று எரித்தோன்-வானிற் சஞ்சரிக்கும் இயல்புடைய மூன்று புரங்களையும் எரித்தவன் (பரமசிவன்)
வான் - ஆகாயம்
கால் - காற்று
குன்றினைய - குன்றில்லைய
இவர்ந்து - ஊர்ந்து

35

வாசவன் - இந்திரன்
தோட்டி - யானைப்பாகர் வைத்திருக்கும் ஓர் ஆயுதம்
மன்றல் அம்தொடை - வாசனை பொருந்திய அழகியமாலை
உவரி - கடல்

36

மந்தரம் - ஓர் மலை

37

பிலம் - நிலத்தின்கண்ணுள்ள குகை
இரவியின் சிறுவன் - சுக்ரீவன்
மடிவேன் - சாவேன்

38

அரிகள் - வானரங்கள்

39

மாருதி - அநுமான்
இடும்பை - துன்பம்
புறக்கணித்து - அலக்ஷியம்செய்து

42

இருமனப் பெண்டிர் - வேசையர்
பணயம் - பந்தயம்
கோதை - மாலை
கரி - யானை
முன்னுட்டி - முன்னே நிறுத்தி
இளமரக்கா - இளஞ்சோலை

43

கழகம் - சூண்டுச் சூதாடுமிடம்
கை - கைத்தொழில்

44

இன்னல் - துன்பம்
இருமை - இம்மை, மறுமை

47

விழுக்குடி - சிறந்தகுடி

48

குஞ்சரம் - யானை
குழவி - பிள்ளை
ஊன்றடி - மாமிசபிண்டம்
ஆளன்றென்றுவாளில் தப்பார் - ஆளல்லவென்று கருதாது வாளால் வெட்டுதலைத் தவிரார்.
ஞமலி - நாய்
கேளல்கேளிர் வேளாண்சிறுபதம்- கேளல்லாத கேளிருடைய உபகாரத்தால் வந்த தண்ணீர். (கேளல்கேளிர் என்றது சிறைக்கோட்டங் காவலரை)

49

மதுகையின்றி...இவ்வுலகத்தானே -மனவலிமையின்றி, வயிற்றின் கண் தீப்போன்ற பசியைமாற்ற வேண்டித் தாமே இரந்துண்ணும் அளவினையுடைய மக்களை அரசர் பெறுவார்களோ இவ்வுலகின் கண்
தபுதல் - கொல்லல்—சாதல்
பயன்றூக்காது - பிரயோஜனத்தையெதிர்பாராது

50

நுகர்ந்து - அநுபவித்து
மயிற்பொறி - அரக்கு மெழுகு முதலிய பிசினி வஸ்துக்களைக் கொண்டு மயில்போலச் செய்யப்பட்டு, ஆகாசத்தில் பறந்து செல்லுமாறு, யந்திரங்கள் அமைக்கப்பட்டிருப்பது.
கருவுயிர்த்தனள் - பிரசவித்தாள் (குழந்தையைப் பெற்ருள்)

52

பொறிக்கப்பட்ட - விளம்பப் பெற்ற
கரிசற - குற்றம்நீங்க
பொருது - போர்செய்து

53

ஆற்றல் - சக்தி
பற்றற்ருன் - ஒருவகைப் பற்றுமில்லாதவனுன கடவுள்
புரக்கும்-காக்கின்ற

54

அங்கையில் நேமி, சங்கு, வாள், தண்டு, அடல் சராசனம் தரித்தருள்வோன் எனப் பிரிக்க
கங்கையின் அறல் - கங்கை நீர்
காளியன் - ஓர் பாம்பு
துளபமௌலியான் - துளபமாலை தரித்த கிரீடத்தையுடையவன்

56

ஞாலம் - ஞாலத்தவர் (பூமியிலுள்ளவர்)
திறை - கப்பம்
வனப்பு - அழகு
நல்லோரை - நல்லநாழிகை
இருபிறப்பாளர் - அந்தணர்

57

சிறை - ஜெயில்
பாலடிசில் - பால்சோறு

60

பழுமரம் - ஆலமரம்
நல்லினம் - நல்லசுற்றம்

61

பரிதிக்குலம் - சூரியகுலம்
அத்தாணிமண்டபம் - கொலுமண்டபம்

துறப்பு - துறவு
குலமுதல் தொன்மையும் என்னும் செய்யுள்: — பழங்குடிப்பிறப்பும் மிகுதியான கலைகளில் தேர்ச்சியும், பலமுதன்மையான கேள்விகளும் அவற்றின்பயனும் எய்தினவர்; தரும சங்கடங்கள் நேர்ந்தபோதினும் நடுவுநிலைமையையே நோக்குபவர்; கோபத்தை வேருடன்தொலைத்து அருமையான தருமத்தை மேற்கொண்டவர்

62

இமையா நாட்டத்தவர் - இமைக்காத கண்களையுடையவர்கள் (தேவர்கள்)
அமளி - படுக்கை
பேரிடர் - பெருந் தீங்கு
பட - இறக்க
வரிசிலை - கட்டமைந்த வில்

65

கட்டுரை - உறுதிமொழி

66

முஞ்சியன் - முஞ்சிப்புல்லைத்தரித்தவன்
விஞ்சை - வித்தை
அற்புதன் - ஆச்சரியமான குணங்கள் நிறைந்தவன்
முகமன் - உபசாரமொழி
தூய்மை - பரிசுத்தம்
கைதவம் - வஞ்சகம்

67

தூம்பு - துளை
குசப்புல் - தருப்பைப்புல்

70

அநித்யம் - நிலையில்லாதது
நித்யம் - நிலையாயுள்ளது
மாலா - மகாவிஷ்ணுவாக

71

இருளுலகம் - நரகலோகம்
குருதி - இரத்தம்
கடை போகாமையின் - முற்றுப் பெறாமையினால்

72

மிளிர்தல் - விளங்குதல்
இருசுடர் - சந்திரசூரியர்கள்
சார்ங்கம் - வில்
தூ - மாம்சம்
கோறல் - கொல்லுதல்

73

இலக்கம் - குறி
தவ்வையை - தமக்கையான மூதேவிக்கு
இலவந்திகைச் சோலை - இயந்திர வாவிச்சோலை (நிறைக்க வேண்டிய காலத்தே தண்ணீரை நிறைத்தும், போக்க வேண்டிய காலத்தே தண்ணீரைப் போக்கவும் உரிய இயந்திர முள்ள வாவியே இலவந்திகை என்பது)
பூசல் - சிறு சண்டை

75

குழுமி - கூடி
ஓலக்கம் - சங்கமண்டபம்

79

ஸ்வச்சந்தமரணம் - தான் இறக்க வேண்டுமென்று எண்ணின காலத்தே உயிர் நீத்தல்
பூவிடை - பூமியின்கண்

81

பொய்க்கரி - பொய்ச்சாட்சி
மகவான் - இந்திரன்
சிலுகு - சண்டை

82

ஏந்தல் - அரசன்

பீடென - பெருமை யென்று
சூளுரை - சபதவார்த்தை

83

சூழல் - இடம்

84

தினை பனை - சிறுமை, பெருமைக ளுக்குக் காட்டும் ஓர் அளவு
ஐவகைத் துன்பம் - தன்னாலும், தன்பரிஜனங்களாலும், வேற்றரசர்களாலும், திருடர்களாலும், விலங்குகளாலும் நேரும் துன்பங்கள்

85

பராமரிப்பார் - பாதுகாப்பார்
கவலுதல் - கவலைப்படுதல்

86

ஆலவாயின் அழல்நிறக் கடவுள்- திருவாலவாயின்கண் (மதுரை) எழுந்தருளிய நெருப்புப்போன்ற நிறத்தையுடைய கடவுள் (பரமசிவன்)

87

முற்கூறு - முன்பாகம் (A. M.)
பிற்கூறு - பின்பாகம் (P. M.)
ஒருதலை - நிச்சயம்

91

தையலாள் - பெண் (அகலிகை)
நயனவேல் - கண்களாகிறவேல்
சரம் - அம்பு

92

தருக்கு - கர்வம்

93

வீய - சாக (கெட)
இருநிதிக்கிழவன் - குபேரன்
கங்கை வேணியன் - பரமசிவன்
ஐம்பெரும்பூதம் - மண், நீர், தீ. காற்று, ஆகாயம்

94

கேடுசூழ்தல் - கேடுநினைத்தல்
கோடு - மரக்கொம்பு
பேருவகைபூத்து - பெருமகிழ்ச்சி யுண்டாகப்பெற்று
சௌரியம் - வீரம்

97

பரிமா - குதிரை

98

ஒறுக்கும் - தண்டிக்கும்
புரிதல் - செய்தல்
பொற்பு - அழகு

99

பெருங்களிச்சலதி - பேரானந்தக் கடல்
மாதவன் - ஈண்டு அகத்தியன்

அரும்பத விளக்கம் முற்றிற்று.

புதிய புத்தகம்! வெளியாகி விட்டது!!

வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி

எழுதியவை.

இரண்டு பக்த சிரோமணிகள்

விலை அணா 8.

இதில் **மாணிக்கவாசகர், ஸ்ரீராமதாஸர்** என்னும் இரண்டு பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இவ்விரு பக்த சிரோமணிகளும் பக்தி முறையில் ஒரேவழியைப் பின்பற்றியவர்களாகையால் இவர்கள் சரித்திரங்களை, சிறுவர் சிறுமியர் படித்துணரக் கூடிய எளிய நடையில் ஒரே புத்தகமாக வெளியிடலானோம். அன்புச் சுவை ததும்பும் இந்த நூலைப்படிப்போர் சைவ, வைஷ்ணவ பேதமின்றி ஈசுவர பக்தியின் பெருமையை அறிந்து, அதில் ஈடுபடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

3421

அர்ஜுனன்

விலை அணா 12.

பஞ்சபாண்டவர்களில் இந்த உலகமேயல்லாமல் அந்த வானுலகமும் புகழ்பெற விளங்கியவன் **அர்ஜுனனேயாவன்.** இந்நூலில் அவ்வர்ஜுனனுடைய அரிய பெரிய செயல்கள் பால்ய முதல் கடைசிவரை ஒருங்கே திரட்டப்பட்டிருக்கின்றன. அர்ஜுனன் இளமையில் கல்வி கற்கும் திறமையும், பிறகு அவன் துரியோதனாதியர் பொறாமையால் செய்யும் சூழ்ச்சிகளினின்று தப்பித்துக் கொள்வதும், திரௌபதியை மணம் செய்து கொள்வதும், அப்பால் வனவாசத்தில் பரமசிவனோடு போர்புரிந்து பாசுபதாஸ்திரம் பெறுவதும், இன்னும் வனவாசத்தில் நடத்திய அநேக வீரதீரச் செயல்களும், கடைசியாய் யுத்தத்தில் அவன் துரியோதனாதியரையும், ஏனையரையும் தெய்வாஸ்திரங்களி னுதவியால் வென்று ராஜ்யத்தை யடைவதும் வெகு விரிவாய், பிள்ளைகள் உற்சாகத்தோடு படிப்பதற்கேற்றபடி எழுதப்பட்டிருக்கின்றன.

இரண்டு பக்த சிரோமணிகள்

விலை அணா 8.

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதி

எழுதியது

இதில் மாணிக்கவாசகர், ஸ்ரீ ராமதாஸர் என்னும் இரண்டு பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இவ்விரு பக்த சிரோமணிகளும் பக்தி முறையில் ஒரே வழியைப் பின்பற்றியவர்களாகையால், இவர்கள் சரித்திரங்களைச் சிறுவர் சிறுமியர் படித்துணரக் கூடிய எளிய நடையில் ஒரே புத்தகமாக வெளியிடலானோம். அன்புச் சுவை ததும்பும் இந்த நூலைப் படிப்போர் ஜாதிபேதமின்றி ஈசுவர பக்தியின் பெருமையை அறிந்து, அதில் ஈடுபடுவார்கள் என்பதில் ஐயமில்லை. இது மூன்றாவது நான்காவது பாரம் மாணவர்க்கு உபபாடத்திற்கு மிகவும் உரியது. அழகிய படங்களோடு கூடியது.

அர்ஜுனன்

விலை அணா 12

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதி எழுதியது

பஞ்சபாண்டவர்களில் இந்த உலகமேயல்லாமல் அந்த வானுலகமும் புகழ்பெற விளங்கியவன் அர்ஜுனனேயாவன். இந்நூலில் அவ்வர்ஜுனனுடைய அரிய பெரிய செயல்கள் பால்ய முதல் கடைசி வரை ஒருங்கே திரட்டப்பட்டிருக்கின்றன. அர்ஜுனன் இளமையில் கல்வி கற்கும் திறமையும், துரியோதனுதியர் பொறாமையால் செய்யும் சூழ்ச்சிகளினின்று தப்பித்துக் கொள்வதும், திரௌபதியை மணம் செய்து கொள்வதும், அப்பால் வனவாசத்தில் பரமசிவனோடு போர்புரிந்து பாசுபதாஸ்திரம் பெறுவதும், இன்னும் வனவாசத்தில் நடத்திய அநேக வீரதீரச் செயல்களும், கடைசியாய் யுத்தத்தில் துரியோதனுதியரையும், ஏனையரையும் தெய்வாஸ்திரங்களினுதவியால் வென்று ராஜ்யத்தை அடைவதும் வெகு விரிவாய், பிள்ளைகள் உற்சாகத்தோடு படிப்பதற்கேற்றபடி எழுதப்பட்டிருக்கின்றன.